Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20 ரூபா 13/50

மே. 20-26, 2001

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 408

# மூன்றாம் தரப்பு முயற்சியில் மீண்டும் ஒரு பேச்சுவார்த்தை



## தலைவிதிகளை மாற்றுமா தமிழகத் தேர்தல் முடிவுகள்?

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# முரசம்

## தகுதியானவர்கள் பங்குகொள்ள வேண்டும்

***அன்புள்ள உங்களுக்கு,***
***வணக்கம்.***

நோர்வேயின் சமாதான
முயற்சி ஒரு தீர்க்கமான
கட்டத்தை அடைந்துள்ளது.

விடுதலைப்புலிகள் தமது
ஒருதலைப்பட்ச போர் நிறுத்தத்தை
கைவிட்ட போதும்
அரச தரப்பு பாரிய இராணுவ
நடவடிக்கை ஒன்றை
முன்னெடுத்த போதும்
நோர்வேயின் முயற்சி
இனிமேல் பயனளிக்குமா என்ற
ஐயம் சமாதானத்தை விரும்பும்
ஒவ்வொருவர் மனத்திலும்
எழுந்தது!

ஆனால் தமது இலக்கை அடையாமல்
ஏராளமான இழப்புக்களோடு
அரச படைகளின்
'அக்கினிச்சுவாலை'
இடைநடுவே கைவிடப்பட்டதும்
அரசாங்கத்தின் போர் முழக்கம்
சற்றுத்தணிந்து
பேச்சுவார்த்தையின்பால் கவனம்
செலுத்த வேண்டிய கட்டாயத்துக்கு
அது தள்ளப்பட்டது.

அத்துடன் உள்நாட்டிலும்
வெளிநாட்டிலும் சமாதான
முயற்சிகளில் பங்குகொள்ளுமாறு
அரசாங்கத்துக்கு கொடுக்கப்பட்ட
அழுத்தம் நாளுக்கு நாள்
அதிகரித்து வந்தது.

நோர்வேயின்
சமாதான முயற்சியில் இருந்து
விலகிச் செல்ல முடியாத நிலைக்குள்
புலிகளும் சிக்கியுள்ளனர்.

இந்நிலையில் விரைவில்
ஆரம்பமாக இருப்பதாக
கூறப்படும் பேச்சுவார்த்தையில்
பங்கு கொள்வதற்காக
அரசாங்க தரப்பு பிரதிநிதிகள்
தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை அரசையும்
விடுதலைப் புலிகளையும் போன்று
நீண்டகாலம் கொடிய யுத்தம் ஒன்றில்
ஈடுபட்டு மோசமான பகையுணர்வை
வளர்த்துக் கொண்டிருக்கும்
இருதரப்பினர்
சமாதான பேச்சுக்களில்
ஈடுபடும்போது, இருசாரார்
சார்பிலும் நேரடியாக
பங்கு கொள்பவர்களின்
ஆளுமையும், தகுதியும் நேர்மையும்
இன்றியமையாதவை.

முன்னைய காலங்களில்
அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும்
இடையில் நடைபெற்ற
பேச்சுவார்த்தைகள் தோல்வியில்
முடிந்த போதெல்லாம்
அந்தப் பேச்சு வார்த்தைகளில்
அரசாங்கம் சார்பாக கலந்து
கொண்டவர்களின் தகுதியீனங்கள்
குறித்து சுட்டிக்காட்டப்பட்டன.

குறிப்பாக திம்பு பேச்சுக்களின்போது
இது விடயம் மிகவும் பரபரப்பாக
பேசப்பட்டதுடன் அதில் பங்கு
கொண்டவர்களில் தகைமை
தொடர்பாக பல குறைபாடுகள்
விவரிக்கப்பட்டிருந்தன.
எதிர்காலத்திலும் இவ்வாறான
தவறுகள் நடந்து விடக்கூடாது.

இம்முறை அரசாங்கம்
இரண்டு முக்கிய
அமைச்சர்களின் பெயர்களையும்
சிரேஷ்ட அதிகாரிகள் இருவரையும்
தமது பிரதிநிதிகளாக தெரிவு
செய்துள்ளது.

பேச்சுவார்த்தையின் போது
முடிவெடுக்கத்தக்க
அமைச்சர் மட்டத்திலானவர்கள்
பங்குகொள்வது வரவேற்கத்தக்கது.

புலிகள் இயக்கம் சார்பிலும்
அதன் சிரேஷ்ட தலைவர்கள்
கலந்துகொள்வார்களென
எதிர்பார்க்கப்படுகின்றது.

சமாதானப் பேச்சுவார்த்தை மேசை
அருகில் இருந்தாலும்
சமாதானத்துக்கான பயணம்
இன்னும் மிக நீண்டதாக
இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஆதலால் அந்த நீண்ட
பயணத்துக்கான அத்திவாரம்
ஆரம்பம் முதலே
உறுதியாக இடப்படவேண்டும்.

பேச்சுவார்த்தை
ஆரம்பிக்கப்படுமானால்,
அது உண்மையான சமாதானத்தை
ஏற்படுத்தும் ஒன்றாக
அமைய வேண்டும் என்ற மக்களின்
விருப்பம்
இம்முறையாவது நிறைவேறுமாக!

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*


***என்றென்றும் அன்புடன்,***
***ஆசிரியர்.***

# ஆன்மீகம்

## உடலை வருத்தி விரதம் தேவையா?

விரதம் இருந்து உடலை வருத்தி இறைவழிபாடு செய்வது சரிதானா? ஒரு பணக்காரர் ஒரு மனிதருக்குக் கடன் கொடுத்திருந்தார். பலமுறை கேட்டுப் பார்த்தார். "மிகவிரைவில் எப்படியும் கொடுத்துவிடுவேன்!" என்று அந்த மனிதர் சொல்லிக் கொண்டேயிருந்தார். அலுத்துப்போன பணக்காரர் ஒரு நாள் தானே அந்த மனிதரின் வீட்டுக்குக் கிளம்பினார். வீட்டினுள் நுழைந்தபோது உள்ளே அந்த மனிதரும், மனைவியும் பேசிக் கொள்வது காதில் கேட்டது. "அதென்ன நீங்கள்! எட்டு மணிக்குப் பின் ஒரு விளக்குதான் எரியணும் என்கிறீர்கள். பஸ் கட்டணம் தர மாட்டேன் குழந்தைகளை நடந்து வா என்றீர்கள். இந்த மாதம் வேலைக்காரி வேண்டாம் நிறுத்து! என்றீர்கள். இதெல்லாம் என்ன?" என்று மனைவி கடிந்து கொண்டிருந்தாள். "இந்தா பாரு! இப்படிச் சிக்கனம் பண்ணினால் தான் அடுத்த மாதம் என் கடனைத் திருப்பமுடியும்." என்று கத்தினார் மனிதர். பணக்காரர் பேசாமல் திரும்பி விட்டார். தனது கடனைத் திருப்பித்தர, அந்த மனிதர் பாடுபடுகிறார் என்று தெரிந்துவிட்டது. கடவுளுக்கு வெறும் வாயால் நாம் அவரை நேசிக்கிறோம் என்று சொன்னால் போதாது. விரதம் போன்றவற்றைச் செய்து காட்டினால் தான் நமதுஉண்மையான விசுவாசம் அவருக்குத் தெரியும்.

ரீ.குணவர்த்தன-களுவாஞ்சிக்குடி.



## "அல்லாஹ்வே பேராற்றலுடையோன்!"

★ அவன் எத்தகையவனென்றால், அவனுடைய அருள்மாரிக்கு முன்னர், நன்மாராயமாக, (குளிர்ந்த) காற்றுகளை அவன் அனுப்பி வைக்கின்றான்; முடிவாக அது (கருக்கொண்டு) கனத்த மேகங்களைச் சுமந்து வருமானால் அதனை நாம், (வரண்டு) இறந்த ஊரின் பக்கம் ஓட்டிச் செல்கிறோம்; பின்னர் அதைக் கொண்டு நாம் தண்ணீரை இறக்கி வைக்கிறோம்; பின்னர் அதைக் கொண்டு சகல வகைக் கனிகளையும் வெளிப்படுத்துகின்றோம்; இவ்வாறே மரணித்தோரை (அவர்களின் சமாதிகளிலிருந்து) உயிர் கொடுத்து நாம் வெளிப்படுத்துவோம்; (இதனை அறிந்து) நீங்கள் நல்லுணர்ச்சி பெறலாம்.
(அல்-குர் ஆன் 7:57)

★ (நபியே!) நீர் பார்க்கவில்லையா? நிச்சயமாக அல்லாஹ், வானத்திலிருந்து (மழை) நீரை இறக்கி வைத்து அதனைப் பூமியில் ஊற்றுக்களாக ஓடச் செய்கின்றான்; பின்னர், அதனைக் கொண்டு பல பயிர்களை-அதன் நிறங்கள் மாறுபட்டவையாக இருக்க அவன் வெளிப்படுத்துகின்றான்; பின்னர் உலர்ந்து அவை மஞ்சள் நிறமடைவதை நீர் காண்கின்றீர்; பின்னர், அதனை (காய்ந்த) சருகுகளாக்கி விடுகின்றான்; நிச்சயமாக இதில் அறிவுடையோர்களுக்குப் படிப்பினை இருக்கிறது. (அல்குர்-ஆன் 39:21)

ஏ.எச்.ஏ.ஹுஸைன்-ஏறாவூர்.

## "அன்பில் நிலைத்திருங்கள்"

கடவுள் நம்மேல்வைத்த அன்பை விளங்கப் பண்ணவும், மானிடராகிய நாம் அன்பைப் புரிந்து கொள்ளவும் வல்லமையின் தேவன் புல்லணையில் உதித்தார். அன்பின் மகத்துவத்தை செயல் வடிவில் இவ்வுலகிற்கு காண்பித்தார்.

அன்பு சகலத்தையும் தாங்கும், அன்புக்குப் பொறாமை இல்லை, தன்னைப் புகழாது, இறுமாப்புக் கொள்ளாது, கோபம் அடையாது. அன்பு வழி ஆண்டவரின் வழி, ஒழியாது, ஒரு போதும் அழியாது. எனவே அவ்வன்பை மற்றவர்கள் மேல் காட்டுவதும் எமக்குக் கொடுக்கப்பட்ட கட்டளை.

"ஒருவன் தன் சினேகிதனுக்காக ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலும் இல்லை." எல்லோரும் சினேகிதர்கள் என்பது ஆண்டவரின் போதனை. ஆண்டவர் இயேசுவின்" அன்பின் நிலைத்திருப்போம்." அவனியில் அவர் சாட்சிகளாவோம்.

ஏ.எஸ்தர் லோஜினி-வவுனியா.

## கவிதைப் போட்டி இல.408



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 26.05.2001

கவிதைப் போட்டி இல.408
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

## பரிசுக்குரிய கவிதை

## கவிதைப் போட்டி இல.405

### நம்பிக்கை நட்சத்திரம்

அடி மேல் அடி அடித்தால்
அம்மியும் நகரும் என்பார்!
அடிக்கும் கை நடுவே
அதோ பார் நம்பிக்கை
நட்சத்திரம்!

த.தமயந்தி-சாம்பல்தீவு.



### பொய்க்கை

யுத்த நிறுத்தம் ஒருகை
வெளிநாட்டு மத்தியஸ்தம் ஒருகை
பேச்சு வார்த்தை ஒருகை
வன்னிப் பொருளாதார தடை ஒருகை
சமாதானம் ஒருகை
அவை அத்தனையும் பொய்க்கை
புரிந்து போனது உங்கள் உண்மைக் கை.

கந்தசாமிப்புத்திரன்- செட்டிக்குளம்.

### "ஒற்றுமை!"

கையுடன்..
கைகள் இணைந்தால்தான்,
கார்மேகம் மறைந்து!-உலகில்,
விடிவெள்ளி பிறக்கும்!

ஜெயா சரவணேஸ்வரி-ஹொப்டன்.

### ஒருகை ஓசையில் சமாதானமா

அருள் வேண்டி இருகரமே!
அன்னை அணைப்பு ஒரு கரமே!
இருந்துண்ண இருகரமே!
இருபாலும் இன்புற இருகரமே-இருந்தும்!
துஞ்சுதே இன சமாதானம்
வட்ட மேசையில்
ஒரு கைக் குரலோசையாய்!

ஈவினைபால சௌந்தரி-புன்னாலைக்கட்டுவன்.

### உயிரா!

பதவிக்குப் படிப்பு
வேண்டும்
உதவிக்கு குணம்
வேண்டும்
உரிமைக்கு உயிரா
வேண்டும்...?

யூ.கே.பௌசர்-
பாலமுனை-05.

### "அக்னி"

எத்திக்கும் ஒலி எழுப்பும்
மத்தளமே நீ சொல்லு!
முள்ளால் முள் எடுக்க முடியும்.
முடியுமா அக்னியால்
அக்னியை அணைக்க......?

கே.தங்கராஜா-சீனக்குடா.

### ச(மா)தா(னம்)!

சமாதானம்...
கைக்கெட்டிய....
தூரத்தில் தானாம்?
கைக்கு...
எட்டுகிறதா என்று
கொஞ்சம் பாருங்களேன்!!!

கயல்வண்ணன்-வவுனியா.

### ஒப்பந்தம்

கைச்சாத்திட்டது
கை கலப்பானதோ...?
ஒருவரை ஒருவர்
குற்றம் சுமத்துவது
மிலேனியத்திலும்
தீராதோ..?

ஏ.ராசேந்திரன்-
கீளியன்குடியிருப்பு.

### புதைத்துவிட்ட பகுத்தறிவு

ஐந்தறிவை அடக்கி
காத்த பகுத்தறிவை,
பகலில் தோன்றும்
நட்சத்திரமாய்
நடுத் தெருவில்
புதைத்து விட்டோமே!

மு.ர.அஸ்ரப்-காத்தான்குடி-06.

### தண்டனை!

தாய்க் குலத்தின் பெருமையிங்கு!
தலைகுனிந்து போயாச்சு!
வேலியே பயிரை மேய்ந்து!
வீதிக்கும் நாம் வந்தாச்சு!
கைரேகை அடையாளமிங்கு!
கயவர்களை காட்டிவிட்டால்!
கழுகு மரம் இவர்களையும்!
தூக்கில்தான் ஏற்றிடுமா?

ஹாப்புத்தளையூர்-மனோ கோபாலன்.

### "மாநாடு"

நாட்டுக்கு நாடுபோய்
வட்டமேசை போட்டது
சமாதானம் பேசவல்ல;
தடை செய்யக் கோரியே!!


லிங்கராஜா-கிரிசாந்தி,
மட்டக்களப்பு.

### கரங்கள்

இன வேறு பாடு
இன்றி இணைந்து
இசைக்கும் கரங்கள் இங்கே
இசைத்திடுதே சமாதானம் இங்கே!

ஏ.சி.எம்.அஸ்லம்- அகுறணை.

# வாசக[ர்] சாலை




கனம் ஆசிரியர் அவர்களுக்கு,

வாரம்தோறும் வழிமேல் விழிவைத்துக் காத்திருந்து வாங்கிப்படிக்கும் பல்லாயிரம் தினமுரசு வாசகர்களில் நானும் ஒருவன். முழடில்யன். வழங்கும் 'இலக்கிய நயம்', இளசுகளின் இதயத்தை ஈர்த்தெடுக்கின்றது. தொடர்கள் ஒவ்வொன்றும் சுவைக்கின்றது. வாரம் ஒரு வார்த்தை அருமையிலும் அருமை.

'எஸ்.டி.எஸ் கண்ட பாரதி.' கட்டுரைத் தொடர் நூலுருப்பெற வேண்டும், ஒவ்வொரு ஈழத் தமிழர்களின் இல்லங்களிலும் அது இருக்க வேண்டும் என்பதே என் அவா. இதை முரசு நிறைவேற்றும் என்ற நம்பிக்கையும் என்னுள் நிறையவே இருக்கிறது.

கவிதைப் போட்டிப் பகுதிக்கு தொலைநகல் மூலம் கவிதை அனுப்பினால் ஏற்றுக் கொள்வீர்களா? வாரம் தோறும் சத்தான ஆக்கங்களோடு, ஒரு நூலகமாய் வலம் வரும் தினமுரசு வையம் உள்ளமட்டும் வளமோடு வலம் வர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

கொற்றையூர் வாசன்-ஜெர்மனி.

## தமிழ் நாட்டில் சாதிக்கட்சிகள்?

*முரசே!*

உன் 20ம் பக்கத்தை அலங்கரிக்கும் புதுமைத் தகவல்களைத் தரும் வண்ணப் படங்களும் 10ம் 11ம் பக்கங்களிலும் முதல் பக்கத்தில் வரும் சினிமா சம்பந்தமான சினிமாப் படங்களும் அற்புதமான வண்ணத்தில் அழகு மிளிர அச்சாகின்றனவே.

தவிர, 'தகவல் பெட்டி'யில் வரும் தகவல்களும் கறுப்பு வெள்ளைப் படங்களும் தத்ரூபமாக அமைகின்றனவே! இவை உண்மையில் முரசே, உனக்கு மட்டும் கைவந்த கலை!

பல சுவையான துணுக்குகளை பக்கம் பக்கமாகத் தருகிறாய்! இவற்றை முரசே! உன்னால் மட்டும் எவ்வாறு பெறமுடிகிறது?

தமிழகத்தின் தேர்தல் தில்லுமுல்லுக்களை 'கானகன்' 'அண்டை மண்டலத்தில்' அருமையாகத் தருகிறார். சாதி பேதங்களை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று தமிழ்நாட்டில் தான் திராவிடக் கட்சிகளின் குரல்கள் ஒலித்து வந்தன. ஆனால் இன்று சாதிக்கொரு கட்சி தோன்றி சனங்களைக் குழப்புகின்றனவே! இது என்ன நியாயம்?

சா.மு.கணேசன்-பதுளை

என் இனிய முரசே!
உன் படைப்புக்கள்
அனைத்தும் அற்புதம்.
வாரந்தோறும் உன்
வரவை எதிர்பார்த்து
தவிக்கும்
பல்லாயிரக்கணக்கான
நெஞ்சங்களில்
நானும்
ஒருவன்.
இனிய படைப்புக்களின்
இன்பமான நினைவுகள்
இலகுவில் அழிந்தாலும்
இனியவனே.. என்
அன்பின் முரசே,
இறுதி வரை உன்
சேவை! என்
இதயத்தில் கேட்டுக்
கொண்டே இருக்கும்
என்று கூறி
விடைபெறும் உன்
வாசகன்.

அப்துல் கையூம் (எம்.எஸ்),
காத்தான்குடி-03.

## இது என் முதல்வாழ்த்து

என் இனிய முரசே..
நீ சுமந்து வரும் 'எக்ஸ்ரே ரிப்போர்ட்',
'அலசுவது ராஜதந்திரி', 'ஸ்போர்ட்ஸ்'
மற்றும் உன் அனைத்து அம்சங்களும்
இனிமையானவை. உன் பணி மென்மேலும்
வளர என் இதயம் கனிந்த
நல்வாழ்த்துக்கள்.
உன் அடுத்த இதழுக்காக காத்திருக்கும்.

கிருஸ்ணா-தோஹாகட்டார்.

*முரசே!*
வாரம் தவறாமல் வருகின்றாய்.
உன் வார்த்தைகளால் புரியவைக்கிறாய்;
படங்களால் எமக்கு தெரிய வைக்கிறாய்;
மக்களைப் பற்றி மக்களிடமே கூறுகின்றாய்.
எல்லோரையும் சமமாக நினைக்கின்றாய்;
இதனால் மக்கள் மனதில் இடம் பிடித்திருக்கின்றாய்.
மக்களுக்காக வரும் நீ என்றும் வளமுடன்
வாழ்க! வளர்க!

க.சசீகரன்-வெம்பிளி, இலண்டன்.

## மர்மத்தீவு

*முரசே!*
மர்மத்தீவு மர்மத் தொடர்
விறுவிறுப்பாகப் போகிறது.
உயிரோட்டமான மாத்திரங்களை
உள்ளடக்கி கதையினை அருமையாக
கையாண்டு வரும் கதாசிரியர்
'தமிழ்வாணன்' அவர்களுக்கு
பாராட்டுக்கள். 'நாம் நாமாக இருப்போம்'
ஆக்கம் சிந்தனைக்கு விருந்தாக
அமைந்திருந்தது நன்றி.

மங்களா வாமதேவன்
தங்களா வாமதேவன்-மட்டக்களப்பு.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்—
உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல்(Fax):- 074-513266


## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# அரசின் போர் நிறுத்தத்தைக் கண்காணிப்பதில் இழுபறி

## புலிகளின் தலைவருடன் பேச சொல்ஹெய்ம் வன்னி விஜயம்

இலங்கை வந்துள்ள நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்காவுடனும் முஸ்லிம் காங்கிரஸ் உட்பட சிறுபான்மை அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் புதன்கிழமை வன்னி சென்று விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களை சந்திக்க ஏற்பாடாகியிருந்தது.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேரடி சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் முயற்சியின் இறுதிக் கட்ட நகர்வை சொல்ஹெய்ம் மேற்கொண்டிருப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன.

வன்னி செல்லும் சொல்ஹெய்ம் இம்முறையும் புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இவருடன் கொழும்பில் உள்ள நோர்வே தூதரக அதிகாரிகளும் வன்னிக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்கும் முன்னோடி நடவடிக்கையாக அரசாங்கம் 3 மாதகால உத்தியோக பூர்வமற்ற யுத்த நிறுத்தத்திற்கு இணக்கம் தெரிவித்துள்ளது.

ஆனால் இந்தப் போர் நிறுத்தம் உத்தியோகபூர்வமானதாக அறிவிக்கப்பட்டு வெளிநாட்டு அவதானிகள் மூலமாக அது கண்காணிக்கப்பட வேண்டும் என்று புலிகள் வலியுறுத்தியுள்ளனர்.

போர் நிறுத்தத்தை கண்காணிக்க சர்வதேச அவதானிகளை அழைக்கும் விடயத்தில் அரச தரப்போ புலிகளோ விட்டுக் கொடுத்தால், பேச்சுவார்த்தைக்கான திகதியை அறிவிக்கக் கூடிய சூழ்நிலை உருவாகும் என்று சுட்டிக்காட்டியிருக்கும் இராஜதந்திரிகள் இதுவிடயத்தில் புரிந்துணர்வை ஏற்படுத்த சொல்ஹெய்ம் கடும் பிரயத்தனம் மேற்கொள்வார் என்றும் தெரிவித்துள்ளனர்.

உத்தியோக பூர்வமான போர் நிறுத்தம் ஒன்றுக்கு அரசு உடன்பட வேண்டும் என்பதில் புலிகள் உறுதியாக இருப்பதாக அவர்களுக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறியுள்ளன.

எவ்வாறெனினும் இந்த விடயம் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதில் மேலும் காலதாமதத்தை ஏற்பட இடமுண்டு என்று சமாதான விரும்பிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

நோர்வேயினால் முன்வைக்கப்பட்டிருக்கும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் புலிகள் தென்னிலங்கையில் தாக்குதல் நடத்துவதை தவிர்ப்பதும், அரசாங்கம் போர் நிறுத்தம் செய்வதும் முக்கிய அம்சங்களாக குறிப்பிடப்பட்டுள்ளன.

இருதரப்பும் இன்னும் கைச்சாத்திடாத போதும் இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்டதன் பிரகாரம் கடந்த காலங்களில் புலிகள் வடக்கு கிழக்குக்கு வெளியில் தாக்குதல்களை தவிர்த்து வருகின்றனர்.

ஆனால் அரச தரப்பு போர் நிறுத்தத்துக்கு தொடர்ந்தும் மறுப்பு தெரிவித்து வந்து கடந்த மாதம் 25ம் திகதி ஆரம்பித்த 'அக்கினிச்சுவாலை' இராணுவ நடவடிக்கை தோல்வி கண்டதன் பின்னர் உத்தியோக பூர்வமற்ற யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு இணங்கியுள்ளது.

இது குறித்து நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்முக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் தனது நிலைப்பாட்டில் மாற்றம் செய்துள்ளதை வரவேற்றிருக்கும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் உடனடியாக சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளனர்.

## புலிகளிடம் அதி நவீன நீர்மூழ்கிக் கருவிகள்

நீருக்கு அடியில் சென்று தாக்குதல் நடத்தக்கூடிய அதி நவீன நீர்மூழ்கிக் கருவிகளை புலிகள் தருவித்துள்ளதாக புலனாய்வு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

(Closed circuit diving Equipment) என்ற இந்த நீர்மூழ்கிக் கருவிகள் புலிகளுக்கு கிடைத்திருப்பது குறித்து படையினர் அதிர்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சில வாரங்களுக்கு முன்னர் முல்லைக் கடற்பரப்பில் புலிகளால் கொண்டு வந்து இறக்கப்பட்டிருக்கும் பெருமளவு நவீன ஆயுதத் தளபாடங்களுடன் இந்த நீர்மூழ்கிக் கருவிகளும் கொண்டு வரப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இவற்றைப் பயன்படுத்தி அதி உயர் கடற்பாதுகாப்பு உள்ள பிரதேசங்களில் கூட தாக்குதல் நடத்தும் வசதியுண்டு.

இந்தப் புதிய நீர்மூழ்கிக் கருவியை அணிந்து கொண்டு நீரினுள் மூழ்கினால் வாயுக் குமிழிகள் எதுவும் வெளிவராதென்பதால், இதை அணிந்து செல்பவரைக் கண்டுபிடிக்க முடியாது.

இதன் மூலம் துறைமுகங்களுக்கும் கரையோர கடற்படை முகாம்களுக்கும் பேராபத்துக்கள் ஏற்படும் அச்சம் ஏற்பட்டுள்ளதாக படைவட்டாரங்கள் கவலை கொண்டுள்ளன.

இதையடுத்து கொழும்பு, திருகோணமலைத் துறைமுகங்களதும் கடற்படைத் தளங்களதும் பாதுகாப்பு பெருமளவில் அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் புலிகளின் நீரடித் தாக்குதல் அச்சுறுத்தலை தடுக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேநேரம் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் முல்லைத்தீவுக் கடற்பரப்பில் கரையிலிருந்து சுமார் 150 கடல் மைல் தூரத்தில் சர்வதேச கடற்பரப்பில் தரித்து நிற்கும் கப்பலிலிருந்து புலிகள் ஆயுதங்களை இறக்கிக் கொண்டிருப்பதாக செய்தியொன்று, இலங்கைக்கு அருகிலுள்ள நட்பு நாடொன்றிடமிருந்து கிடைத்துள்ளது.

இதையடுத்து திருகோணமலைக் கடற்படைத் தளத்திலிருந்து இரு அதிவேக டோரா பீரங்கிப் படகுகள் சரியான இடத்தை நோக்கி உடனடியாகப் புறப்பட்டன. எனினும், கடுமையான கடல் கொந்தளிப்பால் இவ்விரு படகுகளும் புலிகளின் ஆயுதக் கப்பல் நின்ற இடத்தின் இலக்கை தவறவிட்ட நிலையில் திரும்பியுள்ளன.

இதேவேளை, ஏப்ரல் மாத நடுப்பகுதியில் முல்லைத்தீவு கடற்பரப்பில் நடைபெற்ற கடற்சமரின்போது கைது செய்யப்பட்ட எட்டு கடற்புலிகளிடமிருந்தும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் சில முக்கிய தகவல்களைப் பெற்றுள்ளனர்.

அன்றைய தினம் முல்லைத்தீவுக் கடற்பரப்புக்கு அப்பால் ஆயுதக் கப்பலிலிருந்து சிறிய 'பாஜ்'கள் மூலம் ஆயுதங்கள் தரையிறக்கப்பட்டுள்ளன.

சிறிய பாஜ்கள் ஒவ்வொன்றும் 250 குதிரை வலு சக்தி கொண்ட எட்டு வெளியிணைப்பு இயந்திரங்களைப் பொருத்தியிருந்ததுடன் ஒவ்வொரு பாஜ்களிலும் 14 முதல் 18 புலி உறுப்பினர்கள் இருந்துள்ளனர்.

மோதல் நடைபெறு முன் எட்டு பாஜ்கள் ஆயுதங்களை தரையிறக்கியுள்ளன. ஒவ்வொரு பாஜும் ஆழ்கடலிலிருந்து கரையை அடைய ஒன்றரை மணி நேரத்தை எடுத்துள்ளன.

இவற்றுக்குப் பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்த கடற்புலிப் படகுகளுக்கும் கடற்படையினருக்குமிடையே மோதல்கள் நடைபெற்றுள்ளன. இதிலிருந்த எட்டு கடற்புலிகளே பின்னர் கடற்பரப்பிலிருந்து கைது செய்யப்பட்டனர்.

## தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகளுக்கு ஜெயலலிதா ஆதரவு வழங்குவாரா?

தமிழகத்தில் நடந்து முடிந்த தமிழக சட்டசபைக்கான தேர்தல்களில் செல்வி ஜெயலலிதா ஜெயராமின் அ.இ.அ. தி.மு.க. அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றதைத் தொடர்ந்து தமிழ் நாட்டின் முதலமைச்சராக திங்கட்கிழமையன்று ஜெயலலிதா பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். தமிழகத்தில் ஏற்பட்டிருக்கும் இந்த ஆட்சி மாற்றம் இலங்கை இனப் பிரச்சனை குறித்த விடயத்தில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தப் போவதில்லை என்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தமிழ் நாட்டின் புதிய முதலமைச்சராக ஜெயலலிதா தெரிவுசெய்யப்படலாம் என்று தேர்தலுக்கு முன்பாக நடைபெற்ற கணிப்பீடுகள் தெரிவித்திருந்த போதிலும், கலைஞர் கருணாநிதியின் தி.மு.கவும் அத்துடன் இணைந்த கூட்டணிக் கட்சிகளும் கணிசமான ஆசனங்களைப் பெற்று, பலம் பொருந்திய எதிர்க்கட்சியாக விளங்கும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் முடிவுகள் அவ்வாறு அமையவில்லை.

மத்திய ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் பாரதிய ஜனதாக்கட்சியானாலும் எதிர்க் கட்சியான காங்கிரஸ் ஆனாலும் இன்றுள்ள வரையில் இலங்கையின் இனப்பிரச்சனைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டையே கடைப்பிடித்து வருகின்றன.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் இதுவரை ஆட்சிபுரிந்து வந்த தி.மு.கவும் அதே முடிவைத்தான் கடைப்பிடித்து வந்துள்ளது. எனவே தமிழ் நாட்டின் புதிய தலைமைப் பீடமும் இலங்கைப் பிரச்சனையில் புதிதாக எதையும் முன்வைக்கப் போவதில்லை எனவும் தமிழக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

செல்வி ஜெயலலிதா ஏற்கனவே முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை கடுமையாக விமர்சனம் செய்து வந்துள்ளார்.

இருப்பினும் அவருடைய அரசியல் வழிகாட்டியான 'புரட்சித் தலைவர்' எம்.ஜி.ஆர். விடுதலைப் புலிகளுக்குப் பெருமளவு ஆதரவளித்தார்.

விடுதலைப் புலிகளால் தனக்கு ஆபத்து ஏற்படும் என்று ஜெயலலிதா அவ்வப் போது பகிரங்கமாகவே தெரிவித்து வந்துள்ளார். இதற்காகவே தன்னைப் பாதுகாத்துக் கொள்ள தனியான பாதுகாப்பு படைப் பிரிவும் வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் நாட்டில் கணிசமானளவு ஈழத் தமிழ் அகதிகள் தனியான முகாம்களிலும் ஆயிரக்கணக்கில் தனிப்பட்ட வகையிலும் வாழ்ந்து வருகின்றனர். முகாம்களில் வாழும் அகதிகளுக்கு மத்திய அரசாங்கம் உதவி வருவது போல குறிப்பிட்ட சில உதவிகளை தமிழ் நாடு அரசும் செய்து வருகிறது.

ஜெயலலிதாவைப் பொறுத்த வரையில் ஈழத்தமிழ் அகதிகளுக்கு உதவி வழங்குவதில் எத்தகைய நிலைப்பாட்டை எடுக்கப் போகின்றார் என்பதையிட்டு உடனடியாக எதனையும் தெரிவிக்க முடியாமலுள்ளது.

## யாழ். மத்திய கல்லூரியில் குறைநிவர்த்தி சேவை

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் எதிர்வரும் 19ம் 20ம் திகதிகளில் குறை நிவர்த்தி சேவை ஒன்று நடைபெறவுள்ளது.

இந்த குறைநிவர்த்தி சேவையின் போது மக்களது பிரச்சனைகளுக்கு தீர்வு காணுவதற்காக மத்திய, மாகாண அரசுகளின் கீழ் பணிபுரியும் அதிகாரிகள் பலரும் வருகை தரவுள்ளனர்.

15 இற்கும் மேற்பட்ட அமைச்சுக்களின் உயர் அதிகாரிகள் உட்பட பல திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களின் உயர் அதிகாரிகளும் மாகாண சபைகளின் கீழ் உள்ள அமைச்சு செயலாளர்கள், உயர் அதிகாரிகள் மற்றும் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களின் தலைவர்களும் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மக்கள் குறை நிவர்த்தி சேவையை நடாத்துவதற்குரிய சகல ஒழுங்குகளையும் யாழ் அரச செயலகம் மேற்கொண்டு வருகின்றது. இதேவேளை மக்கள் குறை நிவர்த்தி சேவைக்கு வருகை தருகின்ற மக்கள் தங்கள் பிரச்சனைகளை தெளிவாகவும், சுருக்கமாகவும் எழுத்துவடிவில் உரிய ஆவணப் பிரதிகளுடன் இணைத்து எடுத்து வரும்படி வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது.

## மாவனெல்லையில் சேதமாக்கப்பட்ட உடமைகளுக்கு முழுமையான நஷ்டஈடு வழங்கப்படமாட்டாது!

மாவனெல்லையில் இடம்பெற்ற வன்முறைகளின் போது சேதமாக்கப்பட்ட முஸ்லிம்களின் உடமைகளுக்கான நஷ்டஈட்டுத்தொகை முழுமையாக வழங்கப்படமாட்டாதெனத் தெரிய வருகின்றது.

நஷ்டஈடு கோரி விண்ணப்பிப்போருக்கான படிவங்கள் தற்போது மாவனெல்லை பிரதேச செயலாளர் காரியாலயத்தினால் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

உள்ளூர் அதிகாரிகளினால் மதிப்பிடப்படும் முழுத்தொகையும் நஷ்டஈடாக வழங்கப்படமாட்டாது என்று தெரிவித்த புனர்வாழ்வு அமைச்சின் உயரதிகாரி ஒருவர் அரசாங்க மதிப்பீட்டுத்திணைக்களத்தினால் தயாரிக்கப்படும் மதிப்பீட்டறிக்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப் பெற்ற பின்னரே நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகள் குறித்த இறுதித்தீர்மானம் எடுக்கப்படும் என்றும் கூறினார்.

உடமைகள் சேதமாக்கப்பட்டது தொடர்பாக 250க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சேதமடைந்த வணக்கஸ்தலங்களை புனரமைப்புச் செய்வதற்கான ஒரு தொகை நிதி ஏற்கனவே குறிப்பிட்ட வணக்கஸ் தலங்களின் நிருவாகிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கும் ஏனையவர்களுக்குமான கொடுப்பனவுகளை பெற்றுக் கொடுக்க சிறிது காலம் எடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் மாவனெல்லை சம்பவம் தொடர்பாக முறையான விசாரணை நடத்தப்படாதவிடத்து அரசாங்கத்தை விட்டு விலகப் போவதாக கூறிய அமைச்சர் ரவூப் ஹகீம் தமது நிலைப்பாட்டை கைவிட்டு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்காவுடன் ஒத்துழைப்பு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட முடிவு செய்துள்ளார்.

இது தொடர்பாக ஏற்கனவே ஜனாதிபதியுடன் பேச்சு வார்த்தை நடத்தியுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இம்மாத முடிவுக்குள் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்திடம் இருந்து மேலும் பல சலுகைகளை பெறவுள்ளதுடன் முஸ்லிம்கள் தொடர்பான பிரச்சனைகளின் போது 'பொறுப்புடன்' நடந்து கொள்ளவுள்ளது.

## அறநெறிப் பாட ஆசிரியர்களுக்கு பயிற்சிக் கருத்தரங்கு

இந்து சமயப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் நாடெங்கணும் இயங்கும் அறநெறிப்பாடசாலை ஆசிரியர், ஆசிரியைகளுக்கான விசேட பயிற்சிக் கருத்தரங்கு மே 21ம் திகதி தொடங்கி மே 26ம் திகதி வரை, கொழும்பு வெள்ளவத்தை ஸ்ரீ இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

இவ்வதிவிடக் கருத்தரங்கில் இந்தியா-மைசூரிலுள்ள இராமகிருஷ்ண ஆன்மீக கல்வி நிலையத்தின் முதல்வர் டாக்டர் ஏ.ஆர்.சீதாராம் பிரதம விரிவுரையாளராக பங்கு பற்றுகின்றார்.

தொடக்க தினத்தன்று ஸ்ரீ இராம கிருஷ்ண சங்கத் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகணாநந்தாஜி அவர்கள் ஆசியுரை வழங்கவிருக்கிறார்.

## புலிகள் விநியோகித்த துண்டுப் பிரசுரம்

கிழக்கில் இயங்கும் விடுதலைப் புலிகளின் அம்பாறை, மட்டக்களப்பு பிரதேச அரசியல் பிரிவு கடந்த வாரம் இரண்டு வகையான அறிவித்தல்களை விடுத்துள்ளது.

'பாதை மாறிய தமிழ் இளைஞர்களுக்கு ஓர் அன்பான அழைப்பு' என்ற தலைப்பில் விநியோகிக்கப்பட்டிருக்கும் துண்டுப் பிரசுரத்தில்,

"இன்று தமிழ் மக்களுக்கு ஒரு பாதுகாப்பு அரணாக தமிழீழ விடுதலைப் புலிகள் விளங்குகிறார்கள்.

இவ்வேளையில் பல இளைஞர்களும், அமைப்புக்களும் விடுதலைப் புலிகளோடு இணைந்து பொது எதிரியை எதிர்த்துப் போராடி வருகிறார்கள்.

பொது எதிரியான ஸ்ரீலங்கா இராணுவத்தின் நயவஞ்சக நடவடிக்கையால் பாதைமாறிய தமிழ் இளைஞர்கள் தமது சொந்த சகோதரர்களையே காட்டிக் கொடுக்கும் செயலிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

நீண்ட கடின உழைப்பின் பயனாய் கட்டியெழுப்பிய எமது விடுதலைப் போராட்டத்தில் பங்காளிகளாகி தோள் கொடுங்கள். அதன் மூலம் உங்கள் ஆற்றலையும் அறிவையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை 'இஸ்லாமிய சமூகத்துக்கு ஓர் அன்பான வேண்டுகோள்' என்ற தலைப்பிலான துண்டுப்பிரசுரங்களையும் புலிகள் விநியோகித்துள்ளனர்.

## விவசாயிகள் பாதிப்பு

ஓட்டமாவடி பிரதேச விவசாயிகளுக்கு இம்முறை சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட முடியாத நிலை தோன்றியுள்ளது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான வயற்காணிகளில் விவசாயத்தில் ஈடுபட கடந்த இரண்டு வருடகாலமாக புலிகள் அனுமதியளித்து வந்தனர்.

ஆனால் தற்பொழுது அங்கு நிலவும் அச்சம் காரணமாக பயிர்ச் செய்கை தேவைகளுக்காக அங்கு செல்ல விவசாயிகள் தயக்கம் காட்டுகின்றனர்.

அடுத்த போகத்தில் விவசாயம் செய்வதற்கான வயற்காணிவரி, நீர்வரி, உழவு இயந்திரவரி போன்றவற்றை விவசாயிகள் புலிகளுக்கு செலுத்தியுள்ள வேளையில் பயிர்ச்செய்கையில் ஈடுபடமுடியாத சூழ்நிலை தோன்றியுள்ளது குறித்து அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கட்டுப்பாடற்ற பகுதிகளுக்குச் செல்லும் சில பாதைகள் படையினரால் மூடப்பட்டுள்ளன.

## மாவனெல்லை சம்பவத்தை கண்டித்து இலண்டனில் ஆர்ப்பாட்டம்

அண்மையில் மாவனெல்லை நகரில் இடம்பெற்ற வன்முறைகளை கண்டித்து இலண்டனில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெற்றுள்ளது.

இலண்டனில் வசிக்கும் இலங்கை முஸ்லிம்களின் கூட்டமைப்பு கடந்தவாரம் அங்குள்ள இலங்கைத்தூதரகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

பெருந்தொகையான முஸ்லிம்கள் கலந்து கொண்ட இந்த பேரணியின்போது சிங்களப் பேரினவாதிகளால் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அடாவடித்தனங்களை கண்டிக்கும் சுலோகங்கள் கொண்டு செல்லப்பட்டன.

ஒரு புறத்தில் புலிகளின் செயற்பாடுகளால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் இன்னமும் அகதிகளாக வாழும் நிலையில் சிங்களவர்களின் அடாவடித்தனங்களுக்கும் முகம் கொடுக்க வேண்டிய நிலமை இலங்கை முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ளது குறித்து இந்த ஆர்ப்பாட்டத்தின் போது கடும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டது.

## மீளக் குடியமர்வு

யுத்தத்தினால் இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி நிலையங்களில் நீண்டகாலமாக வசித்து வந்த 212 குடும்பங்கள் வவுனியா தரணிக்குளத்தில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளார்கள். இவர்களது மீள் குடியேற்றத்திற்காக மூன்றுகோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது.

மீள் குடியேற்றத்தின் மூலம் புனர்வாழ்வளிக்கப்பட்டிருப்பவர்களில் கிளிநொச்சியைச் சேர்ந்த 25 குடும்பங்களும் அடங்கும்.

நலன்புரி நிலையத்திலுள்ளவர்கள் குடியேற்றப்பகுதிகளைத் தவிர வெளியிடங்களில் சென்று குடியமர விரும்பினால், அவர்களில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 40 பேர்ச் காணி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் மே 20 முதல் 25 வரை**

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492

New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street, No. 10, Reclamation Road, Colombo 11. T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 664867.

கண்டியிலும் சந்திக்கலாம்

**கண்டியில் மே 25 - 27 திகதிகளில்**

ஆசிரி மெடிக்கல் ஹோல் 45, பேராதெனிய ரோட், கண்டி T.P.074-474156

**கல்முனையில் ஜூன் 02, 03 திகதிகள்.**

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் ஜூன் 09, 10 திகதிகள்.**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019

DR.P.ARUMUGAM NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.





## கலை அலங்கார வகுப்புக்கள்

- சிகை அலங்காரம்
- அழகுக்கலை
- மணப்பெண் அலங்காரம்
- 4 மாத கற்கைநெறி

வகுப்புக்கள் வார, வார இறுதி நாட்களிலும் நடைபெறும்.

**ஆரம்பம்: 25.05.2001**

சான்றிதழ்கள் வழங்கப்படும்

FASNAZ BEAUTY SALON

142, டபிள்யூ, ஏ.சில்வா மாவத்தை, கொழும்பு-06. தொலைபேசி: 589457


## கோபாலரத்தினத்துக்கு கைலாசபதி விருது

இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தினால் வழங்கப்படும் பேராசிரியர் க.கைலாசபதி விருது இம்முறை பிரபல பத்திரிகையாளர் எஸ்.எம்.கோபாலரத்தினத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

'எஸ்.எம்.ஜீ' மற்றும் 'கோபு' ஆகிய பெயர்களில் பிரபலமாகிய இவர் 1953 ஆம் ஆண்டு முதல் பத்திரிகைத்துறையில் இருந்து வரும் ஒருவராவார். 1953ல் வீரகேசரி நிறுவனத்தில் ஒப்பு நோக்குநராக தனது பணியை ஆரம்பித்த இவர் குறுகிய காலத்திலேயே உதவி ஆசிரியராக நியமனம் பெற்றார். 1960ல் வீரகேசரி நிறுவனத்தைவிட்டுச் சென்ற இவர், யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த 'ஈழநாடு' பத்திரிகையில் செய்தியாளராக இணைந்து பின்னர் பிரதம ஆசிரியராக மாறி 21 ஆண்டுகள் சேவையாற்றினார்.

1982ல் 'ஈழமுரசு' பத்திரிகை ஆசிரியராகவும், 1985ல் 'ஈழநாதம்' பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றிய கோபு கடந்த வருடம் ஏப்ரலில் மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட்ட 'தினக்கதிர்' தினசரியின் பிரதம ஆசிரியராக நியமிக்கப்பட்டு இன்றுவரை பணியாற்றி வருகின்றார்.

## அமுது ஆசிரியர் அதிருப்தி

முரசு 406ல் அமுது சஞ்சிகை எரிக்கப்பட்டது தொடர்பாக வெளியான விடயம் குறித்து அந்த சஞ்சிகையின் ஆசிரியர் முரசுக்கு தனது அதிருப்தியை தெரிவித்துள்ளார்.

சக பத்திரிகை ஒன்றை தரக் குறைவாக விமர்சிக்கும் எண்ணம் முரசுக்கு கிடையாது என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

-ஆசிரியர்-


## மலையாள மாந்திரீகம்





மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாகக் கற்றவர் டாக்டர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை, எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கு மட்டுமே இடமுண்டு எண்ணியவன்-எண்ணியவளைத் திருமணம் முடிப்பதற்குச் சிற்சில தடைகளா, திருமணமே நடக் காதா என்ற ஏக்கமா. காதல் தோல்வியாகிவிட்டதா, கணவன்-மனைவி ஒற்றுமை குறைகிறதா, கையில் பணம் தங்கவில்லையா, பணவருவாய் குறைவா, கொடுத்த கடன் திரும்பி வரவேண்டுமா, குடும்ப வாழ்க்கை இனியவையாக அமையவேண்டுமா, லக்சுமி கடாட்சம் பெறவேண்டுமா, வெளிநாட்டுப் பயணத்தில் தங்கு தடை ஏற்படுகின்றதா, தான் பெற்றபிள்ளை தன் பேச்சைக் கேட்கவில்லையா, பெருவாழ்வு-குபேர வாழ்வு பெற வேண்டுமா, குழந்தைப்பேறு கிட்டவில்லை எனக் கவலையா, கல்வியில் சித்தி பெற வேண்டுமா, கடந்த 33 வருடமாக ஸ்ரீ துர்க்கையின் அருட் கடாட்சத்தால் 100க்கு 100% வெற்றி பெற்றவர்கள் எமது பதிவேடு மூலம் தெரிந்து கொள்ளலாம், வெளிநாட்டவர்களுக்கு கடல் கடந்து செயல்பட கூடிய வண்ணம் அதிவிசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்புவதால் வெற்றியும் உடனுக்குடன் கிடைக்கிறது. இது ஒரு பிரமாண்டமான அங்கீகாரம் பெற்றதும் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தில் மாந்திரீகப் பிரிவாக அதி உன்னத சேவையின் நிமித்தம் வெற்றி கிட்டுவது மிக மிகச் சுலபம், மாந்திரீக வேலைகள் வெற்றிக்கு அச்சொட்டான திட்டவட்டமான சரிவரும் திகதியும் கொடுப்பது என்றால் அது எமது திருவருளே, அதுமட்டுமல்ல காண்ட அடிப்படையில் ஜாதகங்களையும் கைரேகைகளையும் தெட்டத் தெளிவாக எழுதி அறிந்து கொள்ளலாம். இன்னும், அனைத்து உலக நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் பிரச்சனைகளை உடனுக்குடன் மாந்திரீக சக்தியால் தீர்வு கண்டமையால், எண்ணற்ற வாடிக்கை யாளர்களின் நற்சாட்சிப் பத்திரங்களை எமது நிருவாக பதிவேட்டில் காணலாம்.

**வெளிநாட்டவர்களுக்கென அதி தொழிநுட்பம் வாய்ந்த 24 மணித்தியால தொலைபேசிச் சேவை உண்டு.**

Tel-466620, 466820 **தேவைகளுக்கு:-**

உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி

Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika
Uchchada Peedam.

கொழும்பில்
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

நுவரெலியாவில்
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 431137
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்ப கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-466271, 466571
E-mail:drpksamy@sltnet.lk
www.imcxpolanka. com/drpksami.



## எக்ஸ் ஒயில்

AXE OIL

3ml

Rs. 25/-

தலைவலிக்கு
தலைப்பாரத்திற்கு
தலைச்சுற்றுக்கு

காய்ச்சல்
ஜலதோஷம்
இருமல்

சிங்கப்பூரில் உற்பத்தி செய்யப்பட்ட உலகப் புகழ்பெற்ற
**எக்ஸ் ஒயில்**
சகலவேதனைகளுக்கும் உடனடி நிவாரணம் தரும். பல்வலி, காது வலிகளுக்கும் சிறந்த நிவாரணி
(வெளிப்பூச்சுக்கு மட்டும்)

பூச்சிக்கடிகள்

மதுபோதை குறைய

சுளுக்கு மற்றும் அடிபட்டு வீங்கிய பகுதிகளுக்கு

**எக்ஸ் ஒயில் கிடைக்காத பகுதிகளுக்கு விற்பனையாளர்கள் தேவை. விண்ணப்பிக்கவும்.**

**SINGHA HOLDINGS (PVT) LTD.**

14, Ground Floor, Welikada Plaza, Rajagiriya, Sri Lanka.
Tel: 888214, Fax: 874621, 682984 E-Mail: MAXX@dynaweb.lk


## உதவி கோருகிறார்

இரத்தினபுரி ஹப்புகஸ்தன்னையைச் பிறப்பிடமாகவும், கொழும்பு-15, அளுத்மாவத்தை வீதி. இல. 737/118 முகவரியை வசிப்பிடமாகவும் கொண்ட வடிவேல் முருகானந்தன் (26 வயது) இதய நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்.



இவரது உயிரைக் காப்பாற்ற இதய வால்வு மாற்று சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டுமென கோட்டை ஸ்ரீஜயவர்த்தனபுர வைத்தியசாலை டாக்டர் பி.ஏ. குணவர்த்தன ஆலோசனை வழங்கியுள்ளார்.

சத்திரசிகிச்சைக்காக 250,000 ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. சாதாரண கூலி வேலை செய்யும் முருகானந்தன் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார் மிகவும் வறுமை நிலையிலுள்ள இவர் வைத்தியச்செலவுக்கான பணத்தை செலுத்த முடியாமல், தனவந்தர்களிடமும். மனித நேயமிக்கவர்களிடமும் உதவி கோருகிறார்.

சிகிச்சைக்காக உதவ விரும்புவோர் புறக்கோட்டை கொமர்ஷல் வங்கி 8392699001 என்ற கணக்கிலக்கத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றார்.


## அற்புத சித்தர் மாந்திரீகம்

உங்கள் பிரச்சனை எதுவானாலும் அதில் உடன் வெற்றிகாண மட்டக்களப்பு-மலையாள-சோதிட மாந்திரீகச் சித்தர். பேராசிரியர்-கலாநிதி. "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். காதல் விவகாரம். குடும்பப் பிணக்கு. தொழில் விருத்தி, திருமணத் தடங்கல், பிரயாணத்தடை, சத்துரு ஜெயம் முதலான சகல விடயங்களிலும் நிச்சயம் வெற்றி பெறலாம். ஏழு தலைமுறை பாரம்பரியமும், 30 வருட சுய அனுபவ ஆற்றலும் கொண்ட "சக்தி சரவணா"வினால் நினைத்த காரியம், ஜாதகபலன், சோதிட அருள்வாக்கு, எண்சோதிடம் முதலான பிற சோதிட சேவைகளும் பெறலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கு விசேட துரிதசேவை மேற்கொள்ளப்படுகிறது. தபால் மூலம் தொடர்பு கொள்ளும் உள்ளூர் அன்பர்கள் 20 ரூபா முத்திரையுடன் தொடர்பு கொண்டு பதில் பெறலாம். இரகசியங்கள் அந்தரங்கமாகப் பேணப்படும். காலதாமதம்-பணவிரயம் இன்றி உடன் பரிபூரண வெற்றி பெற தொடர்பு கொள்ளுங்கள். நேரில் சந்திக்க- காலை 8 மணி முதல் மாலை 3 மணிவரை.

தொடர்பு

HON.PROF.DR.SHAKTHY SARAVANA;
NO. 82, MANIKKAVASAKAR STREET,
TRINCOMALEE, SRI LANKA.
TP: 026 20347

(வியாழன் விடுமுறை)

வெளிநாட்டினர் தொடர்பு கொள்ள
T.P. 009426 20347



## மலிவு விற்பனை

R.N.K. Products

RNK மாக்கற்றிங்

(சுப்பர் மார்க்கட்)

**STAUFACHERSTRASSE 141, 8004 Zürich.**

ஸ்தாபனத்தில் மீன், மரக்கறி, மளிகைப் பொருட்கள் அனைத்தும் மறு அறிவித்தல் வரை மலிவு விலைகளில் கிடைக்கும்

TEL: 01-240 16 86
078 666 5277.
Fax: 01-322 2755

சில உதாரணங்கள் — மீன் 1Kg 6/90 CHF — மரக்கறி 1Kg 3/90 CHF

RNK மாக்கற்றிங் திறந்திருக்கும் நேரங்கள்: திங்கள்-வெள்ளி காலை 8.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணிவரை

சனி காலை 8.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை


## நினைவஞ்சலி



மலர்வு 14 ❖ 02 ❖ 1973 — உதிர்வு 31 ❖ 05 ❖ 2000

### செல்வரட்ணம் நளாயினி

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
அழுகை ஒலி மறையவில்லை
எங்கள் குலவிளக்கே நீ எங்கு சென்றாய்?
பட்டதாரியானாய் என உள மகிழ்ந்தோம்-எமை
பட்டமரமாக்கி விட்டு நீ செல்லலாமோ?
சத்தியமாய் காலனவன் வஞ்சகனடி-நீயோ
சக்தியானாய் சிவனடியில் அவள் தோற்றுவிட்டாள்.

*உங்கள் பிரிவால் துயருறும் அப்பா அம்மா தங்கை தம்பிமார்.*



தோற்றம் 06 ❖ 04 ❖ 1921 — மறைவு 26 ❖ 05 ❖ 2000

### கந்தசாமி அரியநாயகம்

அள்ளி அள்ளிதனமுவந்து மாதவியே
சொல்லிடாமல் சட்டென்று சென்றாயேனோ
கொள்ளி வைக்கப் பிள்ளைகள் கொண்டிருந்தும்
கொள்ளி வைப்பான் கருணையின்றி கொன்றது ஏன்?
வள்ளியினை கந்தசாமி அழைத்தாரோ-விடி
வெள்ளியாக எங்கள் வானில் அமர்வாயோ-எம்
சித்தத்துள் என்றும் நீ அது போதும்!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்
மகள்மார், மருமகன், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

தகவல்: செ. நவதீஸ், 156/50 டொக்கியாட் றோட், திருகோணமலை.

## ஏழாம் மாத நினைவஞ்சலி



தோற்றம் 29 02 1940 — மறைவு 16 10 2000

### அமரர் செபஸ்ரியன் பேர்க்மன்ஸ் சபாநாயகம்

(முன்னாள் தொழில் நுட்பவியலாளர் யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்பநிறுவகம் ஜேர்மன் மொழிப் போதனாசிரியர்)

**காலமெல்லாம் எம் நெஞ்சில்**
**காவியமாக வாழ்ந்த எம் நாயகமே!**
**ஏழாம்மாதமாகியும் மறையுமோ**
**உன் நினைவு**
**மாறாத சோகத்தில்**
**உம் பிரிவால் வாடுகின்றோம்**
**ஆத்மா சாந்தி பெற**
**ஆண்டவனை வேண்டுகின்றோம்**

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி- ஆனந்தராணி சபாநாயகம்
மகன்- றூடி (நிரஞ்சன்)
மருமகன் ஜெஹி
பேரப்பிள்ளைகள் ராகுல் நந்தினா

56, டிலாசால் வீதி, முகத்துவாரம். தொலைபேசி: 522300

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# மூன்றாம் தரப்பு முயற்சியில் மீண்டும் ஒரு பேச்சுவார்த்தை

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும்இடையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடனான மற்றுமொரு பேச்சுவார்த்தை ஆரம்பமாவதற்கான ஏற்பாடுகள் பெரும்பாலும் பூர்த்தியாகி விட்டதாக கூறப்படும் நிலையில், உத்தியோகபூர்வ அறிவிப்புகள் விரைவில் வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு ஏதுவாக அரசாங்கம் போர்நிறுத்தம் ஒன்றை அறிவிக்கவுள்ளது. செவ்வாய்க்கிழமை அதிகாலை கொழும்பு வந்துள்ள நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம்



புதன கிழமைகுப பினனா வனனி செனறு புலிகளின் தலைவர்களை சந்திக்கவிருக்கிறார்.

இந்த சந்திப்பைத் தொடர்ந்து அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை குறித்த முக்கிய தகவல்கள் வெளியாகவுள்ளன.

போர் நிறுத்தம் ஒன்றைஅமுல்செய்வது தொடர்பாக பாதுகாப்பு தரப்பினரும் அரசாங்க உயர்மட்டமும் கடந்த இருவாரகாலமாக தீவிர ஆலோசனை நடத்தியுள்ளன. 3 மாத காலத்துக்குள் புலிகளுடனான உத்தியோகப் பூர்வ பேச்சுவார்த்தைகளை நடத்தி முடிப்பதென்றும்அதுவரைகாலம் போர் நிறுத்தம் ஒன்றுக்கு உடன்படுவதெனவும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அறியக்கிடைக்கின்றது.

போர் நிறுத்தம் அமுலில் உள்ள காலப் பகுதியில் பாதுகாப்பு படைகளின் நடவடிக்கை எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

'தீச்சுவாலை' இராணுவ நடவடிக்கைக்கு முன்னதாக போர் நிறுத்தம் என்ற சொல்லையே வெறுத்து வந்த அரசாங்கம் அந்த படை நகர்வில் ஏற்பட்ட சேதத்தின் பின்னர் தானாக இறங்கிவந்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதற்காக இருதரப்பும் யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு உடன்படுமானால் இலங்கையின் இரண்டு தசாப்த கால யுத்தத்தில் மூன்றாவது ஈழப்போர் முடிவுக்கு வரவிருக்கிறது.

21ம் நூற்றாண்டிலும் மீண்டும் ஒரு யுத்த காண்டத்தை தொடர்வதா அல்லது சுமார் 70 ஆயிரம் உயிர்களை பலிகொண்ட யுத்தத்தை இத்தோடு முடித்துக் கொள்வதா என்பதை பேச்சுவார்த்தை மேசைதான் தீர்மானிக்கும். அதனால் இந்தப் பேச்சுவார்த்தை அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் போலவே போரினால் மெய்யாகவே பாதிப்புக்களை எதிர்கொள்ளும் இந்த நாட்டு அனைத்து மக்களுக்கும் மிகவும் முக்கியமானதாகும்.

ஆனால் இலங்கையின் இனப்பிரச்சனைத் தீர்வுக்கு முன்னைய காலங்களில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளுக்கு ஏற்பட்ட கதியை பற்றி சிந்திக்குமிடத்து எதிலும் அதிகப்படியான நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் வளர்த்துக் கொள்ளக் கூடாது என்ற உண்மை புரியும்.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் மூன்றாம் தரப்பு முயற்சியில் நடைபெறும் மூன்றாவது பேச்சுவார்த்தையாக இதனைக் கருத முடியும்.

1984ம் ஆண்டு இந்தியாவின் முயற்சியில் பூட்டானின் தலைநகரமான திம்புவில் இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழ் இயக்கங்களுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. அதில் இயக்கங்களினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை அப்போதைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவின் அரசாங்கம் நிராகரித்ததையடுத்து யுத்தம் தொடர்ந்தது.

அதன் பின்னரும் மீண்டும் ஒரு முறை இந்தியாவின் தலையீட்டில் சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அது அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான நேரடிப் பேச்சுவார்த்தையாக இல்லாமல் புலிகளினதும் ஏனைய தமிழ் இயக்கங்களினதும் உடன்பாட்டின் பேரில் இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானது. இந்திய அமைதி காக்கும் படை இலங்கைக்கு வந்து சிறிது காலத்திலேயே புலிகளுடன் போரிட வேண்டி நிலைக்குத் தள்ளப்பட்டது.

1990ம் ஆண்டு மார்ச் மாதம் 24ம் திகதி இந்தியப் படையினர் இலங்கையை விட்டு வெளியேறியதன் பின்னர், ஜனாதிபதி பிரேமதாசாவுடன் புலிகள் பேச்சுவார்த்தை நடத்தினர். கொழும்பில் நடந்த இந்த சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்ததும் 1990ம் ஆண்டு ஜூலை 10ம் திகதியின் பின்னர் இரண்டாவது ஈழப்போர் தொடங்கியது.

அதன் பிறகு 1995ம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையில் போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்று செய்து கொள்ளப் பட்டது.

1995ம் ஆண்டு ஜனவரி 8ம் திகதி முதல் அமுலில் இருந்த போர் நிறுத்தம் ஏப்ரல் 19ம் திகதியோடு முடிவுக்கு வந்து 3வது ஈழப்போர் ஆரம்பமானது. இது மிகமோசமான அழிவுகளை ஏற்படுத்திய போராகவும் அமைந்தது.

இப்பொழுது மீண்டும் ஒரு தடவை யுத்த களம் அமைதிகாக்க தயாராகின்றது. ஆனால் இந்தத்தடவை மேற்கொள்ளப் படும் சமாதான முயற்சகிள் முன்னைய



காலங்களில் எடுககபபட்ட பிரயததனஙகளில இருந்து ஓரளவு வேறுபட்டதாகவும் சற்று முன்னேற்றகரமான ஒன்றாகவும் காணப் படுகின்றன.

இனப்பிரச்சனைக்கான சமாதான முயற்சியில் முதல் தடவையாக மேற்கு நாடொன்று பங்குகொண்டுள்ளதையும், முன்னைய காலங்களை விடவும் சமாதானம் குறித்து உள்நாட்டு சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்திருக்கும் நிலையில் இரு தரப்பும் பேச்சுவார்த்தைக்கு தயாராவதையும் அவதானிக்க முடியும்.

விரைவில் ஆரம்பமாக இருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தை மேசையின் முன்னாலும் ஏராளமான சிக்கல்கள் நிறைந்து காணப் படுகின்றன. தமக்கு முன் இருக்கும் பிரச்சனைகளுக்குத் தெளிவான தீர்வின்றியும் ஒரு தரப்பை திருப்தி செய்யக்கூடிய அளவுக்கு மறுதரப்பு விட்டுக்கொடுக்குமா என்ற சந்தேகத்துக்கும் மத்தியிலேயே இந்தப் பேச்சுவார்த்தையும் நடக்கப்போகின்றது.

சமாதான பேச்சை தொடங்குவதற்காக நோர்வே கடுமையாக உழைக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. இருதரப்பையும் பேச்சுவார்த்தை குறித்த இணக்கப்பாடொன்றுக்கு கொண்டுவருவதிலேயே இத்தனை சிரமமும் சிக்கலும் இருக்குமென்றால், விட்டுக்கொடுப்புடனும் திறந்த மனதுடனும் பேசி பிரச்சனைக்கான தீர்வை எய்துவார்களா என்ற நியாயமான கேள்வி எழவே செய்கின்றது.

கடந்த சில வாரங்களாக இது குறித்து எத்தனை குழப்பங்கள்?!

அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் பல விடயங்களில் உடன்பாடு ஏற்பட்டு விட்டதாக வெளியுறவு அமைச்சர் கதிர்காமர் அவசரப் பட்டு அறிக்கைவிட அதை அன்டன் பாலசிங்கம் நிராகரித்தார். சொல்ஹெய்மும் மறுத்துரைத்தார். ஆனால் அதற்கு முன்னர் மே 15ம் திகதி அளவில் பேச்சுவார்த்தை தொடங்கி விடும் என்று சொல்ஹெய்ம்தான் சொல்லியிருந்தார். இதில் யார் பொய்சொல்கிறாா என்றே புரியாமல் இருக்கிறது.

சில நேரங்களில் புலிகளின் வன்னித் தலைமை எடுக்கும் முடிவுகள் உடனடியாக லண்டனில் இருக்கும் பாலசிங்கத்தாருக்கு தெரியவருவதில்லையோ என்ற சந்தேகமும் எழுகிறது. அதே நேரம் சில விஷயங்களை பாலசிங்கத்துடன் கதைத்து சரிப்பட்டு வராது என்பதாலோ என்னமோ சொல்ஹெய்ம் நேரடியாகவே வன்னிக்குச் சென்றுள்ளார்.

அன்டன் பாலசிங்கத்துக்கும் புலிகளின் வடபகுதி தலைமைக்கும் இடையிலான இவ்வாறான கருத்துப் பரிமாற்ற இடைவெளிகள் முன்னைய காலங்களிலும் ஏற்பட்டுள்ளன.

## சத்தியன்

பிரேமதாசா அரசாங்கத்துடன் பேச்சு நடத்த கொழும்பு வந்திருந்த அன்டன் பாலசிங்கம் குழுவினர் வடபகுதிக்கு திரும்பிச் செல்ல இரத்மலானை விமான நிலையத்தில் காத்திருக்கும் போதே புலிகள் தமது போர் நிறுத்தத்தை கைவிட்டு போரை ஆரம்பித்து விட்டார்கள்.

இது போன்ற சில தகவல் பரிமாற்றக் குழப்பங்கள் இந்தப் பேச்சுவார்த்தை முயற்சியிலும் தாக்கம் செலுத்தியதை அவதானிக்க முடிந்தது.

எவ்வாறிருந்தாலும் அடிப்படை விடயங்களில் விட்டுக் கொடுப்புகளுக்கு தயாரில்லாமல்தான் இம்முறையும் பேச்சுக்கள் தொடங்கப் போகின்றன.

இதுவரைகாலமும் 'தனித்தமிழீழம் தவிர வேறெதனையும் ஏற்கமாட்டோம்' என்று கூறிவந்த புலிகள் இப்போது என்ன கேட்கப் போகிறார்கள்?

அரசாங்கம் எந்தளவுக்கு விட்டுக் கொடுக்கும்? குறைந்த பட்ச அதிகாரங்களுடனான மாநில சுயாட்சியேனும் வழங்கப்படுமா? புலிகளின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்று அரசாங்கம் கேட்டால் அடுத்தகட்டம் என்ன எதைக்கொடுப்பது? எதை ஏற்பது? இத்தகைய எந்தவொரு கேள்விக்கும் தெளிவான பதில் கைவசம் இருப்பதாகத் தெரியவில்லை.

தெளிவில்லாத விடயங்களுக்கு விடை காண்பதற்கும் முரண்பாடுகளை தீர்ப்பதற்காகவும்தான் பேச்சுவார்த்தைகள் நடத்தப் படுகின்றன. எல்லாவற்றுக்குமான தீர்வுகளும் உடன்பாடுகளும் இருக்குமென்றால் ஏன் பேச்சுவார்த்தை என்ற சாதாரண சந்தேகம் எழக்கூடும்! ஆனால் இங்கே பிரச்சனை வேறுபட்டது. போர் நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டால் அது காலத்தை இழுத்தடிக்கும் ஏமாற்று வித்தையாக இருக்கக் கூடாது என்பதில் இரு தரப்பும் கவனம் செலுத்தும்.



காலம் செல்லச் செல்ல அரசாங்கம் படைக்கு ஆள் சேர்ப்பதாக குற்றச்சாட்டு கிளம்பும். புலிகள் கப்பலில் ஆயுதம் கொண்டு வந்து இறக்குவதாக கதை பரவும் இத்தகைய தொரு சூழ்நிலை நீண்டகாலம் இழுத்துக் கொண்டிருக்க முடியாது. அவசரமாக பேசி முடிக்க வேண்டிய நிலைக்கு இரண்டு தரப்பும் தள்ளப்படும். அதனால் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக தமது கோரிக்கைகள், விட்டுக் கொடுப்புகள் குறித்த தெளிவு இருசாராருக்கும் அவசியம். அது இருப்பதாகத் தெரியவில்லை.

எவ்வாறிருந்தாலும் இம்முறை நடைபெறும் பேச்சுவார்த்தைகளை நோர்வேயும் ஏனைய வெளிநாடுகளும் உன்னிப்பாக அவதானிக்கும் என்பதால் முன்னைய காலங்களில் போன்று பகிரங்கமான ஏமாற்று வித்தைகளில் ஈடுபடுவதில் இரண்டு தரப்புக்கும் சில சங்கடங்கள் இருக்கின்றன. அதனால் முன்னைய காலங்களில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை விட இதில் சற்று நம்பிக்கை கொள்ளலாம். ஆனால் உண்மையான அமைதியை விரும்பி நேர்மையான முறையில் அரசும் புலிகளும் பேச்சுவார்த்தையில் ஈடுபடவில்லை என்றால் மூன்று தரப்பென்ன முப்பது தரப்பினர் வந்தாலும் அவ்வளவுதான்! ■

---

# குப்பைத் தொட்டியில் போட முடியாததை கமிஷனில் போட்டு........

மாவனெல்லை நகரில் அண்மையில் ஏற்பட்ட வன்முறைகளின் பின்னர் நாட்டில் ஆங்காங்கே தலைதூக்கிய இன ரீதியிலான முரண்பாடுகள் தற்போது ஓரளவு தணிந்துள்ளன.

மாவனெல்லை சம்பவத்தை கண்டித்து மருதானையில் முஸ்லிம்கள் நடந்து கொண்ட விதம் தமக்கு பெரும் கௌரவப் பிரச்சினையை ஏற்படுத்தி விட்டதாகக் கருதிய 'சிஹல உருமய' அமைப்பு கடந்த வியாழக்கிழமை 'அபி சிங்ஹல' என்ற பெயரில் ஆர்ப்பாட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்திருந்ததும் அந்தப் பேரணி பின்னர் பொலிஸாரினால் கலைக்கப்பட்டதும் தெரிந்ததே!

கண்ணீர் புகை வீசி ஆர்ப்பாட்டம் கலைக்கப்பட்டாலும், அதில் கலந்து கொள்ள கணிசமான எண்ணிக்கையிலானவர்கள் வந்திருந்தனர்.

இனங்களுக்கிடையிலான வன்முறைகளை வளர்க்க சிங்கள மக்களில் பெரும்பான்மையானவர்கள் விரும்புவதில்லை என்பது உண்மைதான். ஆனால் இந்தகைய செயல்களில் ஆர்வம் கொண்ட ஒரு கூட்டமும் எப்பொழுதும் தயாராகவே இருக்கின்றது என்பதையும் மறக்க முடியாது.

மாவனெல்லை சம்பவத்தை பயன்படுத்தி முடிந்த அளவுக்கு அரசியல் இலாபம் தேடிக் கொள்வது என்று அரசியல் கட்சிகள் கங்கணம் கட்டிக் கொண்டு களத்தில் இறங்கிவிட்டன. அமைச்சர் மஹீபால ஹேரத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவர ஐ.தே.க. முடிவு செய்துள்ளது. இது முஸ்லிம்கள் மீதுள்ள அன்பினால் செய்வதல்ல. சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது, பயன்படுத்திக் கொள்ளலாம் என்று பார்க்கிறார்கள் அவ்வளவு தான்.

ஆனால் ஐ.தே.க. முஸ்லிம்கள் மீது காட்டும் இந்த 'அக்கறைக்கு' முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளிக்கும் என்று எதிர் பார்க்க முடியாதுள்ளது. இது விடயத்தில் 'பொறுப்புடன்' நடந்து கொள்ளப்போவதாக அமைச்சர் ரவூப் ஹகீம் கூறியிருக்கிறார்.

அத்தோடு மாவனெல்லைச் சம்பவத்துடன் அமைச்சர் மஹீபால ஹேரத் நேரடியாக சம்பந்தப்பட்டுள்ளார் என்பதற்கான எந்தவித சாட்சியமும் இல்லை என்றும் கூறி, அமைச்சர் ஹகீம் சட்டத் துறையில் தனக்கிருக்கும் அறிவை காட்டியிருக்கிறார்.

உண்மைதானே! மஹீபால ஹேரத் நேரடியாக வீதியில் இறங்கி யாருடைய கடைக்காவது தீ வைத்தார் என்று ஒருவரும் சொல்லவில்லையே! அதனால் அவருக்கு எதிராக கொண்டு வரப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது 'பொறுப்புடன்' நடந்து அந்த தீர்மானத்தை எதிர்த்து வாக்களிப்பதுதான் சாலப் பொருத்தம்!

இந்தச் சம்பவத்தை விசாரணை செய்வதற்காக பல்வேறு தரப்பினராலும் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

'குப்பைத் தொட்டியில் போட முடியாததை தூக்கி கமிஷனில் போடு' என்று இந்திய அரசியல் வட்டாரங்களில் சொல்வார்கள். மாவனெல்லை வன்முறைகளை விசாரணை செய்யும் குழுக்களுக்கும் இந்த வாசகம் பொருந்திவிடக்கூடாது! அதா கப்பட்டது 'முறைப்பாடுகளை குப்பை தொட்டியில் போட முடியாது என்பதற்காக ஆணைக்குழுவில் போட்டோம்' என்றாகி விடக்கூடாது.

இத்தகைய சம்பவங்கள் தொடர்பில் விசாரணை செய்த ஆணைக் குழுக்களின் வரலாற்று நிகழ்வுகள் மிகவும் கசப்பானவை. கடமையிலிருந்து ஒய்வு பெற்று பொழுது போகாமல் வீட்டில் இருக்கும்

**எம்.பி.எம். பர்ஸான்**

நீதிபதிகள் சிலருக்கு வேலை கிடைத்ததைத் தவிர அநேகமான ஆணைக் குழுக்களால் கண்ட பலன் எதுவுமில்லை. சந்திரிகா அம்மையாரின் அரசாங்கத்தில் எதிர்த்தரப்பினரின் முறைகேடுகளை விசாரிக்க அமைக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் கூட தமது விசாரணைகளை முழுமையாகப் பூர்த்திசெய்து குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டதாக இல்லை. இந்நிலையில் ஆளும் தரப்பு அமைச்சர் ஒருவரை நோக்கி விரல் நீட்டப்படும் ஒரு சம்பவம் குறித்த விசாரணையின் கதியை சொல்லத் தேவையில்லை.

சம்பவம் நடைபெற்று இரண்டு தினங்களில் பிரதமர் இரட்ணசிறி விக்கிரமநாயக தலைமையில் ஒரு விசாரணைக்குழு அமைக்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் அறிவித்தது. இதில் அமைச்சர்களான பௌஸி, அலவி மௌலானா, ஜி.எல்.பீரிஸ் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். (இதில் அமைச்சர் மஹீபால ஹேரத்தையும் சேர்த்துக் கொண்டால் இன்னும் நன்றாக இருந்திருக்கும்.)

சிங்களத்தில் பழங்கதை ஒன்று சொல்வார்கள். அதன் சுருக்கம் இதுதான், ஒரு பொருள் திருட்டுப் போய் விட்டது. அதனைக் கண்டுபிடிக்க திருடனின் தாயாரிடம் போய் சாஸ்திரம் கேட்டால் சரிவருமா? அவளது 'மை வெளிச்சம்' ஒரு போதும் தன் மகனை காட்டிக் கொடுக்காது.

மாவனெல்லை சம்பவத்தை விசாரிக்க அரசாங்கம் அமைத்த விசாரணைக் குழுவின் விபரம் தெரிந்ததும் இந்தக் கதைதான் ஞாபகத்துக்கு வந்தது.

பிரதி பொலிஸ்மா அதிபர் ஆனந்த ராஜா தலைமையில் பொலிஸ் திணைக்களமும் இது குறித்து விசாரணை செய்து வருகிறது. இந்த பொலிஸ் குழுவிடம் விவரங்களை தெரிவிப்பதில் பாதிக்கப்பட்ட மக்கள் பல நடைமுறைச் சிக்கல்களை எதிர்நோக்குவதாக அறியக்கிடைக்கிறது.

இந்நிலையில் சேதமாக்கப்பட்ட உடமைகளுக்கு நஷ்டஈடு பெற்றுக் கொடுப்பதில் இழுபறிகள் ஆரம்பமாகியுள்ளன. அரசாங்க மதிப்பீட்டாளர்களினால் மதிப்பிடப்பட்ட தொகைதான் பெரும்பாலும் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. பொதுவாக இத்தகைய சம்பவங்களில் முழு நட்டத்தையும் அரசு பொறுப்பேற்பதில்லை. அரசாங்க மதிப்பீடென்பது சேதமாக்கப்பட்ட உடமைகளின் சந்தைப் பெறுமதியினின்றும் அரைவாசியோ அல்லது அதைவிட சற்று அதிகமாகவோதான் இருக்கும். நஷ்டஈடு வழங்குதலை வெறுமனே கண் துடைப்பாக்க அரசு முயற்சிக்குமானால், தமது தொழிற்துரவுகளை இழந்து நிற்கும் மாவனெல்லை மக்களின் நிலமை மேலும் மோசமாகும்.

சேதமாக்கப்பட்ட பள்ளி வாசல்களுக்கு காசோலை வழங்கி அதனை விளம்பரப்படுத்திக் கொண்டால் மட்டும் போதாது. அனைத்தையும் இழந்து நிற்கும் மக்களுக்கு நஷ்டஈட்டுத் தொகையை முழுமையாகவும் அவசரமாகவும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

நஷ்டஈடு வழங்கும் வேலைகள் வழமையான 'அரசபணி' வேகத்தில் தான் நடக்கின்றன. அதற்கிடையில் இன்னும் எங்காவது ஒரு முஸ்லிம் ஊரை தீ வைக்காமல் இருந்தால் சரி! ▫

# அண்டை மண்டலத்தில்...

காணகன்

ஒரு தெளிவான, ஆனால் யாரும் எதிர்பார்க்காத ஒரு தீர்ப்பைத் தமிழக மக்கள் இத்தேர்தலில் வழங்கியுள்ளனர். கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் மிகப் பெரிய தோல்வியைத் தழுவிய அ.தி.மு.க மட்டுமே தற்போது 132 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. கூட்டணிக்கட்சிகள் வெற்றி பெற்ற இடங்களையும் எடுத்துக் கொண்டால் அந்த எண்ணிக்கை 196 ஆக உயர்கிறது.

# தமிழக மக்கள் அளித்த ஆச்சரியத் தீர்ப்பும்

இந்த அசுர பலம் என்பது யாரும் எதிர்பார்க்காத ஒன்று. ஏனெனில், சமீபத்தில் வெளியான கருத்துக் கணிப்புகள் எல்லா வற்றையுமே இந்த வெற்றி பொய்யாக்கி விட்டது. கருத்துக் கணிப்புகள் அ.தி.மு.க கூட்டணி 123 இடங்களில் இருந்து 130 இடங்கள் வரை வெற்றி பெறும் என்றும் தி.மு.க கூட்டணி 105 இடங்களில் வெற்றி பெறும் என்றும் ஆரூடம் கூறின. ஆகவே தமிழகத்தில் எந்தக் கூட்டணி வெற்றி பெற்றாலும் எந்தக் கூட்டணிக்கும் தனிப் பெரும்பான்மையான பலம் கிடைக்காது என்ற கருத்து நிலவியது. தற்போது அந்தக் கருத்து தகர்ந்துவிட்டது.

எதிர்க்கூட்டணியான தி.மு.க. மிகவும் அவமானகரமான ஒரு தோல்வியை தழுவி யிருக்கிறது. நல்ல அரசு, மக்களுக்குப் பயன்தரும் திட்டங்கள், திறமையான நிர்வாகம் ஆகியவை தங்களுக்கு வெற்றியைத் தேடித்தரும் என்று தி.மு.க தலைவரும் முதல்வருமான மு.கருணாநிதி நம்பினார். ஆனால் அவருடைய நம்பிக்கை பொய்த்து விட்டது. வெறும் 27 இடங்களில் மட்டுமே அக்கட்சி வெற்றி பெற்றுள்ளது. தி.மு.க. அமைச்சரவையில் பங்கேற்றிருந்த முக்கிய மான அமைச்சர்கள் மிகப்பெரிய தோல்வி யைத் தழுவியுள்ளனர். முதல்வர் கருணாநிதி உட்பட வெற்றி பெற்றவர்கள்கூட மிகவும் குறைந்த வாக்குகள் வித்தியாசத்திலேயே வெற்றி பெற்றுள்ளனர். 1996ம் ஆண்டு தேர்தலில் 40 ஆயிரம் வாக்குகள் வித்தியா சத்தில் வெற்றி பெற்ற கருணாநிதி தற்போது வெறும் 4 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத் தில்தான் வெற்றி பெற்றுள்ளார். மற்றவர்கள் நிலைமையும் இதுதான்.

மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சம் என்ன வெனில், தமிழகத்தில் உருவான சாதிக்கட்சி களுக்கு ஏற்பட்டிருக்கும் தோல்வி. அ.தி.மு.க கூட்டணியில் இடம் பெற்றிருந்த வன்னியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாட்டாளி மக்கள் கட்சியைத் தவிர, தி.மு.க கூட்டணியில் இடம்பெற்றிருந்த எல்லா சாதிக் கட்சிகளும் படுதோல்விக்கு உள்ளாகி யுள்ளன. பாட்டாளி மக்கள் கட்சி 37 இடங் களில் போட்டியிட்டு 20 இடங்களை கைப் பற்றியுள்ளது.

தி.மு.க கூட்டணிக் கட்சிகளான தலித்துகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விடுதலைச் சிறுத்தைகள், புதிய தமிழகம் ஆகியவற்றுக்கு ஏற்பட்டுள்ள தோல்வி ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. 10 இடங் களில் போட்டியிட்ட புதிய தமிழகம் கட்சியானது ஒரு இடத்திலுமே வெற்றி பெற முடியவில்லை. அக்கட்சியின் தலைவர் கிருஸ்ணசாமி போட்டியிட்ட இரண்டு இடங் களிலுமே தோல்வியைச் சந்தித்துள்ளார். விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன் நிலைமை ஓரளவுக்குப் பரவா யில்லை என்றுதான் சொல்ல வேண்டும். அவர் மங்களூர் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ஆனால் அவர் கட்சியைச் சேர்ந்த மற்ற ஏழு வேட் பாளர்களும் தோற்றனர்.

இது ஒருபுறம் இருக்க "முதலியார்கள், யாதவர்கள் ஆகியோரின் நலன்களைப் பாதுகாப்போம்" என்ற முழக்கத்துடன் தொடங்கப்பட்ட கட்சிகளின் கதியும் அதோ கதிதான். முதலியார்கள் கட்சியான புதிய நீதிக்கட்சியின் தலைவர் ஏ.சி.சண்முகம் உள்பட்ட கட்சி வேட்பாளர்கள் அனைவரும் தோல்வியடைந்துள்ளனர். யாதவர் கட்சி யான மக்கள் தமிழ்த் தேசக் கட்சியின் தலைவர் எஸ்.கண்ணப்பனும் மற்ற வேட் பாளர்களும்கூட அ.தி.மு.க.வுக்கு ஆதர வாக வீசிய அலையின் வேகத்தில் இருந்து தப்ப முடியவில்லை.

தற்போது எழுப்பப்படும் கேள்வி இதுதான். அ.தி.மு.க பெற்றுள்ள மிகப் பெரிய வெற்றிக்கு யார் காரணம்?

முதலில் கூட்டணி பலம் என்ற வாதம் முன் வைக்கப்படுகிறது. அ.தி.மு.க கூட்ட ணியை எடுத்துக் கொண்டால் நம்பகமான வாக்கு வங்கியை தக்கவைத்துக் கொண் டுள்ள எல்லா அரசியல் கட்சிகளுமே அதில் இடம் பெற்றிருந்தன. காங்கிரஸ், மூப்பனார் தொடங்கிய தமிழ் மாநில காங்கிரஸ், இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகள், முஸ்லிம் லீக் என அப்பட்டியல் நீள்கிறது.

அதே சமயத்தில் தி.மு.க கூட்டணியில் பாரதிய ஜனதா கட்சியைத் தவிர மற்றவை எல்லாமே சமீப காலத்தில் அரசியல் களத்தில் புகுந்துள்ள இளம் சாதிக் கட்சிகள்.

தமிழகத்தில் புதிய தலைமையின் கீழ் உத்வேகம் பெற்றுள்ள தலித்துகள் புதிய சக்தியாக எழுந்து வருகின்றனர். இது மற்ற சாதியினருக்கு பிடிக்கவில்லை. ஆண் டாண்டு காலமாக அடிமைப்பட்டுக் கிடந்த ஒரு சமுதாயம் தங்களை எதிர்த்து கேள்வி கேட்பதை சாதி இந்துக்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. ஆகவே தலித் கட்சிகளுடன் கூட்டணி வைத்துக் கொண்ட தால் மற்ற சமுதாயத்தினரின் வாக்குகள் தி.மு.க கூட்டணிக்கு கிடைக்கவில்லை என்ற வாதம் தற்போது பரவலாக முன் வைக்கப்படுகிறது. மற்றபடி முன்னேறிய சமுதாயமான முதலியார்களை ஒரு தலைமை யின் கீழ் ஒருங்கிணைத்து வாக்குகளைப் பெறுவது நடைமுறையில் சாத்தியம் இல்லா மல் போயிருக்க வேண்டும்.

இன்னொரு முக்கிய காரணம் என்ன வென்றால், கூட்டணி அமைக்கும் போது முதல்வர் கருணாநிதி நடந்து கொண்ட முறைதான். தொகுதிகளை ஒதுக்கீடு செய்யும் போது ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக விடுதலைப் புலிகளின் ஆதர வாளரும் மறுமலர்ச்சி தி.மு.கவின் பொதுச் செயலருமான வை.கோ, தி.மு.க கூட்டணி யில் இருந்து வெளியேறினார். தற்போது தேர்தல் முடிவுகளைப் பார்க்கும் போது சுமார் 23 இடங்களில் தி.மு.க கூட்டணி யின் வெற்றியை ம.தி.மு.க பறித்துள்ளது தெரிய வருகிறது.

வெற்றி பெற்றது. வெற்றி வாய்ப்புகளும் மிகக்குறைந்த வாக்குகள் வித்தியாசத்தி லேயே அமைந்துள்ளது. கல்வி அமைச்சர் அன்பழகன் 300 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். துணை சபாநாயகர் பரிதி இளம் வழுதியின் நிலையோ இன்னும் பரிதாபமாகப் போய்விட்டது. சுமார் 85 வாக்குகள் வித்தியாசத்தில்தான் அவர் வெற்றி பெற முடிந்தது.

மேற்கூறிய காரணங்களை எல்லாம்விட ஒரு குறிப்பிடத்தக்க அம்சம், இந்தத் தேர் தலில் முக்கிய பங்காற்றியது. பணப்புழக்கம் மக்கள் மத்தியில் இல்லை என்ற ஒரு வாதம் பரவலாக தமிழகம் முழுவதுமே நிலவியது.

# விடைதெரியாத கேள்விகளும்

இப்பிரச்சனைகள் ஒரு பக்கம் என்றால் மத்திய அரசு நடைமுறைப்படுத்தி வரும் புதிய பொருளாதாரக் கொள்கையின் தாக் கத்தின் காரணமாக ஏற்பட்ட நெருக்கடிகள் மிகப்பெரிய காரணம். தாராளமான இறக்கு மதிக் கொள்கையின் காரணமாக உள்ளூர் தொழில்கள் நசிந்து வருகின்றன. கோயம் புத்தூர் மாவட்டம் ஜவுளி உற்பத்திக்கு பெயர் பெற்றது. ஆனால் இன்று அங்குள்ள பெரிய டெக்ஸ்டைல் தொழிற்சாலைகள் மூடப்பட் டுள்ளன.

விவசாயிகளின் பிரச்சனை, குறிப்பாக, பணப்பயிர்களை உற்பத்தி செய்யும் விவசாயி களின் பிரச்சனை, தி.மு.க தோல்விக்கு ஒரு காரணம் என்று கருதப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விவசாயிகள் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். அவர்கள் உற்பத்தி செய்யும் தேயிலைக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை. கடந்த ஓராண்டு முன்பாக, அவர்கள் போராட்டத் தில் ஈடுபட்டு அதன் காரணமாக சட்டம் ஒழுங்குப் பிரச்சனை ஏற்பட்டது. கரும்பு விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலையில் இருந்து வர வேண்டிய பாக்கித்தொகை கிடைக்கவில்லை என்ற புகாரும் தி.மு.க அரசுக்கு எதிராகத் திரும்பியது. தேங்காய் உற்பத்தியாளர்கள், ரப்பர் விவசாயிகள் என எல்லா தரப்பினருக்கும் தி.மு.க அரசின் மேல் இருந்த அதிருப்தி தேர்தலில் வெளிப்பட்டுள்ளது.

மேற்கூறியவை கிராமப் புறங்களில் உள்ள பிரச்சனை. ஆனால் சென்னை மாநகரை எடுத்துக் கொண்டால் முக்கியக் காரணியாக விளங்கியது என்னவெனில் குடி தண்ணீர் பிரச்சனைதான். சென்னைக் குக் குடிநீர் வழங்கும் எல்லா ஏரிகளுமே ஏறக்குறைய வறண்டு விட்டன. பிரச்சனை யைச் சமாளிக்க லாரிகள் மூலமாக தொடர்ச்சியாக நீர் வழங்கப்பட்டு வந்தாலும் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அதனால்தான் தமிழகம் முழுவதும் தோல்வியைச் சந்தித்த போதெல்லாம் சென்னையில் தனது பலத்தை நிரூபித்து வந்த தி.மு.க. இம்முறை அங்கேயும் ஆட்டம் கண்டது. 12 இடங்களில் போட்டி யிட்ட அக்கட்சி 8 இடங்களில் மட்டுமே

அ.தி.மு.க ஆட்சிக்கு வந்தால்தான் கையில் காசு புரளும் என்று சாதாரணமான ஜனங் களில் இருந்து மெத்தப்படித்த மேதைகள் வரை ஓயாமல் சொல்லிக் கொண்டிருந்தனர். தேர்தலில் அது ஏற்படுத்திய தாக்கம் அள விட முடியாதது என்றுதான் கூற வேண்டும்.

அ.தி.மு.க ஆட்சி அமைக்கப்போவது உறுதியாகிவிட்டது. ஆனால் யார் முதல்வர் என்ற கேள்விக்கு இன்னும் விடை கிடைக்க வில்லை. கூட்டணிக்குக் கிடைத்துள்ள வெற்றி என்பதே, 'நான் முதல்வராக வேண் டும் என்பதற்காகக் கிடைத்த வெற்றிதான்' என்று ஜெயலலிதா பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார். வேறு யாரையாவது முதல்வர் பதவியில் அமர்த்தினால் மக்களுடைய தீர்ப் புக்கு மரியாதை கொடுப்பதாக அமையாது என்றும் அவர் கூறினார். ஆனால் அவர் முதல்வராக வருவதற்கு சட்டச் சிக்கல்கள் உள்ளன.

அரசுக்குச் சொந்தமான டான்சி நிலத்தை வழங்கிய வழக்கில் ஜெயலலிதா வுக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை பெற்றவர்கள் தேர்தலில் நிற்க முடியாது என்பது இந்திய மக்கள் பிரதி நிதித்துவச் சட்டம் கூறுகிறது. இதனால் போட்டியிடுவதற்காக ஜெயலலிதா தாக்கல் செய்த 4 வேட்பு மனுக்களுமே நிராகரிக்கப் பட்டு விட்டன. சட்டப் பேரவை உறுப்பின ராக இல்லாத ஜெயலலிதா எப்படி முதல்வராக முடியும்? அவருக்கு மாநில ஆளுநர் பதவிப் பிரமாணம் செய்து வைக்க முடியுமா?

முடியாது என்று ஒரு தரப்பினரும், முடி யும் என்று மற்றொரு தரப்பும் வாதிடுகின்ற னர். கீழ் நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்ட அவருடைய மேல் முறையீட்டு மனுவானது உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. அதில் தீர்ப்பு வெளியாகும் வரை ஜெயலலிதா முதல்வராக பதவியில் அமர்வதைத் தடுக்க முடியாது என்று கூறப்படுகிறது. அண்டை மாநிலமான கேரளத்தில் இதே போல் ஒரு வழக்கில் தண்டிக்கப்பட்ட சட்டப்பேரவை உறுப்பினர் பாலகிருஸ்ணபிள்ளையின் வேட்பு மனு நிராகரிக்கப்படவில்லை. ஆகவே ஜெய லலிதாவின் மனுக்களை மட்டும் எப்படி நிரா கரிக்க முடியும் என்று ஜெயலலிதாவின் ஆதரவாளர்கள் கேட்கின்றனர்.

ஆனால் பாலகிருஸ்ணபிள்ளை ஏற்கெனவே சட்டப் பேரவை உறுப்பினராக இருப்பவர். ஜெயலலிதா அப்பதவியில் இல்லை. ஏற்கெனவே உறுப்பினராக இருப்ப வரின் மனுவை நிராகரிக்க முடியாது என்று மக்கள் பிரதிநித்துவச் சட்டம் கூறுகிறது. சட்டம் எப்படி பாரபட்சமாக நடந்து கொள்ள முடியும்? ஆறு மாத காலம் வரை முதல்வராக நீடிக்க ஜெயலலிதாவுக்கு அனுமதி வழங்க வேண்டும் என்று ஜெய லலிதா தரப்பில் கூறப்படுகிறது. இறுதியில் முடிவுசெய்ய வேண்டியது ஆளுநர்தான். சட்டம் ஒரு இருட்டறை என்று தி.மு.க நிறுவனரான சி.என் அண்ணாதுரை கூறி யதை இந்நேரத்தில் நினைவு கூர வேண்டும்.

இந்த கேள்விகளுக்கு இன்னும் சில நாட்களில் முடிவு தெரிந்து விடும். ஆனால் தற்போது அ.தி.மு.க பெற்றுள்ள வெற்றி மத்திய, மாநில அரசியலில் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது ஒரு முக்கியக் கேள்வி. மத்திய அரசுடன் மோதல் போக்கைக் கடைபிடிப்பதில் எந்த பலனும் ஏற்படப்போவதில்லை என்று வெற்றி பெற்ற உடனேயே ஜெயலலிதா அறிவித்துவிட்டார். பாரதீய ஜனதா பக்கம் அவர் மறுபடியும் சென்று விடுவாரா என்று ஐயப்பாடு இன்னும் இருக்கிறது. அதற்கு முதல் காரணம் என்ன வென்றால் ஜெயலலிதாவுடன் தன்னுடைய நட்பைப் புதுப்பித்துக்கொண்டுள்ள பத் திரிகையாளர் சோ.ராமசாமிதான். பா.ஜ.க சார்பில் நாடாளுமன்றத்தில் நியமன உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள சோ, அரசியலில் எது வேண்டுமானாலும் நடக்க லாம் என்று கூறி வருகிறார்.

இதுதவிர நடைபெற்றத் தேர்தலில் எதிர்பார்த்த வெற்றியை பா.ஜ.க பெற வில்லை. 27 இடங்களில் போட்டியிட்டு 4 இடங்களை மட்டுமே அக்கட்சி கைப்பற்றி யுள்ளது. இதனால் அக்கட்சியுடன் கூட்ட ணியை மறுபரிசீலனை செய்ய கருணாநிதி முன்வந்தால், ஜெயலலிதா பா.ஜ.க பக்கம் போய் விடுவார் என்று கூறப்படுகிறது. அப்படி ஒரு முடிவை ஜெயலலிதா மேற் கொண்டால் தமிழக அரசியல் சூழல் தலை கீழாக மாறும். அ.தி.மு.க. கூட்டணியில் உள்ள பாட்டாளி மக்கள் கட்சியைத் தவிர மற்ற எல்லாக் கட்சிகளுமே தி.மு.க பக்கம் போய் விடும். இது நடைபெறுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஆனால் எல்லோரும் கேட்கும் கேள்வி இதுதான்- ஜெயலலிதா திருந்தி விட்டாரா அல்லது முன்னர் நடந்து கொண்டதுபோல் தான் நடந்து கொள்வாரா? தவறில் இருந்து அவர் பாடம் கற்றுக் கொண்டார். இனிமேல் அந்தப்பாதையில் செல்ல மாட்டார் என்று கூறுகிறார்கள். ஆனால் ஜெயலலிதா என்ன நினைக்கிறார் என்பதை அறிந்து கொண்ட வர் அவரைத் தவிர யாரும் இல்லை.

# தலைவிதிகளை மாற்றுமா தமிழகத் தேர்தல் முடிவுகள்?

தமிழக சட்டமன்றத் தேர்தல்க ளில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் அமோக வெற்றிபெற்று செல்வி ஜெய லலிதா ஜெயராம் முதலமைச்சராகும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

234 ஆசனங்களைக்கொண்ட தமிழக சட்டமன்றத்தில் ஜெயலலிதாவின் கட்சி அறுதிப்பெரும்பான்மையை பெற்றுள்ள துடன் முதலமைச்சராக இருந்த கலை ஞர் கருணாநிதியின் தி.மு.க.படுதோல்வி அடைந்துள்ளது.

தமிழகத்தில் நிகழ்ந்திருக்கும் இந்த ஆட்சி மாற்றம் இலங்கைத் தமிழ் மக் களைப் பொறுத்தவரையில் பாரியதாக்கம் எதனையும் ஏற்படுத்தப்போவதில்லை, என் றாலும் கடும் போக்காளரான ஜெய லலிதாவின் ஆட்சி, இலங்கை தமிழர்கள் விடயத்தில் தமிழக அரசின் கொள்கைகள் மேலும் இறுக்கமடைவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தலாம்.

கலைஞர் கருணாநிதி இலங்கைத் தமிழர்களின் அனுதாபியல்ல. இங்குள்ள தமிழ் மக்களின் பிரச்சனை தொடர்பாக தமிழக மக்கள் கொண்டிருக்கும் உணர் வுத் தடத்தில் தனது அரசியல் பயணத்தை மேற்கொள்வதற்கு ஏதுவாக சிற்சில காரி யங்களை செய்தாரேயன்றி மெய்யாகவே அவர் இலங்கையில் பாதிக்கப்பட்ட மக் களுக்காக குரல் கொடுத்த ஒருவர் எனக்கருத முடியாது.

தனது தேவைக்கு ஏற்றவாறு இலங் கைத் தமிழர்கள் குறித்து சில சர்ச்சைக் குரிய கருத்துக்களை கருணாநிதி வெளியிட்டு வந்தார். யூகோஸ்லாவியாவில் போன்று இலங்கையிலும் பிரிக்கப்பட்ட மாநிலங்களின் சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என்று சிறிது காலத்துக்கு முன்னர் அவர் வெளியிட்ட கருத்து பெரும் சர்ச்சையைக் கிளப்பியது ஞாபக மிருக்கும். பின்னர் அவரே அதனை மறுத்துக் கூறினார்.

எவ்வாறிருந்தாலும் கருணாநிதி தமது ஆட்சிக்காலத்தில் சில விடயங்களை 'கண்டுகொள்ளாமல்' இருந்ததன் மூலம் இலங்கை தமிழர்களுக்கு நல்ல காரியம் செய்தார்!

வடக்கில் இருந்து தமிழ்நாட்டுக்கு இடம் பெயரும் அகதிகள் வருகையில் கருணாநிதியின் நிருவாகம் ஓரளவு தளர்வுப் போக்கையே கடைபிடித்தது. அகதிகளை திருப்பி அனுப்ப வேண்டும் என்றோ அல்லது அவர்கள் அனைவரை யும் சிறையில் அடைக்க வேண்டும் என்றோ உறுதியான சட்டங்கள் எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அதேபோன்று வடக்கு கிழக்கு யுத் தத்தில் காயங்களுக்கு உள்ளான விடு தலைப்புலி உறுப்பினர்கள் தமிழ்நாட்டில் சிகிச்சை பெறுவதுண்டு. பல சமயங்களில் மருத்துவமனைகளில் தங்கியிருந்து புலி உறுப்பினர்கள் சிகிச்சை பெற்றுள்ள னர். அவர்கள் விடயத்தில் கடுமையான நடவடிக்கை எதனையும் கருணாநிதி எடுக்கவில்லை.

அத்துடன் புலிகள் தமக்குத் தேவை யான மருந்துப்பொருட்கள் எரிபொருள் போன்றவற்றை தமிழ் நாட்டில் இருந்து



தாராளமாக கடத்தி வருகின்றனர். இவற்றை தி.மு.க.நிருவாகம் பெரிதாக கண்டுகொள்வதில்லை.

கருணாநிதி ஈழப்போராட்டத்துக்கு அளிக்கும் ஆதரவுதான் இதுவெனக் கருதி விட முடியாது. தன் உயிர்மீதுள்ள ஆசையில்தான் அவர் இவற்றை செய் கின்றார். புலிகளை கடுமையாக எதிர்த்து ஏன் ஆபத்தை தேடிக்கொள்வான் என்ற சிந்தனை!

இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் கருணாநிதி நேர்மையான ஆதரவு வழங்க வில்லை என்பதை அவர் பலமுறை நிரூபித்திருந்தார். தமிழீழம் ஒன்று அமை யப்பெற்றால் ஆகக் கூடுதல் சந்தோஷம் அடைவது தான்தான் என்பார், மறு நாளே ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காணப்படுவதையே தான் விரும்புவதாக மற்றொரு கூட்டத்தில் அழகு தமிழில் பேசுவார்.

இது இலங்கைத் தமிழர் பிரச்சனை யில் அவரது கபடத்தனத்தையும் அந்த மக்கள்மீது தமிழகத்தவருக்கு இருக்கும் அனுதாபத்தை தனது அரசியலுக்கு பயன்படுத்துவதையுமே காட்டுகிறது.

ஆனால் ஜெயலலிதா இப்படிக்கூட இருக்கப் போவதில்லை. அவர் நேரடியா கவே புலிகளுக்கு எதிரான கடும் போக்கை கடைபிடிப்பவர். அதனால் தமிழகத்துக்கு இடம்பெயரும் இலங்கைத் தமிழர்கள் புலி என முத்திரை குத்தப் பட்டு கைது செய்யப்படுவது இனிமேல் அதிகரிக்கக்கூடும். ஆனால் என்னதான் இருந்தாலும் தமிழகக் கரையோரங் களின் ஊடாக புலிகள் நடத்தும் பொருட் போக்குவரத்தை முற்றிலுமாக ஜெயலலி தாவினால்கூட தடை செய்ய முடியாது. என்றாலும் தனது புலி எதிர்ப்புப் போக்கை வெளிப்படையாகவே அவர் கடைபிடிப்பார்.

~சத்தியன்~

அத்தோடு ஜெயலலிதாவின் காங்கிரஸ் கூட்டு நிலைமையை இன்னும் இறுக்கமாக் கவே உதவும். புலிகள் தொடர்பில் கிஞ் சித்தும் ஆதரவு காட்டுவதை சோனியா விரும்பப் போவதில்லை. அதுமட்டுமன்றி புலிகளிடம் பழிதீர்க்க வேண்டும் என்ற சோனியாவின் எண்ணத்தை பிரதிபலிக் கும் செயல்களில் ஈடுபட ஜெயலலிதா துணிய மாட்டார் என்பதும் நிச்சய மில்லை.

இவை எல்லாவற்றையும்விட தமிழ் நாட்டு அரசியல்வாதிகள் சகலருமே இலங்கைத் தமிழர் விடயத்தை தமது அரசியல் நலனுக்காக மட்டும்தான் பயன் படுத்துகிறார்கள் என்பதில் விவாதத் துக்கே இடமில்லை.

தன்னை புலிகளின் தீவிர ஆதர வாளர்களாக காட்டிக்கொண்ட பாட் டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் கடைசியில் "அம்மாவே சரணம்" என்று ஜெயலலிதாவின் காலில் போய் விழுந்தார்.

உடனடியாகவே தனது முன்னைய நிலைப்பாட்டில் இருந்து 'பல்டி' அடித்து புலிகளை எதிர்த்து கருத்து வெளியிட்டார்.

இப்போதும் புலிகளின் தீவிர ஆதர வாளராக இருந்து வரும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வை.கோபால்சாமி (வை.கோ)யின் நிலமை தேர்தல் முடிவு களின்படி மிக மோசமாக அமைந்து விட்டது.

அதனால் தமிழக தேர்தல் முடிவு இலங்கைத் தமிழர்களைப் பொறுத்த மட்டில் 'இராமன் ஆண்டால் என்ன இராவணன் ஆண்டால் என்ன' என்ற நிலைதான்.

# அலசுவது - இராஜதந்திரி

# விஷப்பரீட்சையாகும் ஐ.தே.கவின் பலப்பரீட்சை

இலங்கையின் இன்றைய அரசியல், சமூக, பொருளாதார நிலபரம் ஒரு பெரும் களேபரத்துக்குள்ளாகியுள்ள நிலையில் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி புதியதொரு கூத்தை ஆரம்பித்துள்ளது.

ஆளுங்கட்சியான பொது ஜன ஐக்கிய முன்னணியைப் பதவி கவிழ்க்கும் முயற்சியே ஐக்கிய தேசியக்கட்சியின் புதிய நடவடிக்கையாக அமைந்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்க தமது கட்சியின் இந்த நடவடிக்கைக்கு ஆதரவு திரட்டும் விதத்தில் தமிழ் அரசியல் கட்சிகள் உட்பட, பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் சிலவற்றை அணுகியிருந்தார்.

இலங்கை தற்சமயம் என்றுமில்லாதவாறு பாரிய அரசியல், சமூக, பொருளாதாரச் சிக்கல்களுக்கு முகங்கொடுத்துள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி, பாராளுமன்ற ஆட்சி ஆகிய இரண்டையுமே கொண்டிருக்கின்ற பொதுஜன ஐக்கிய முன்னணி, பெரும் உள்நாட்டு யுத்தமாக மாற்றமடைந்துள்ள வடக்கு-கிழக்குப் பிரச்சனையைத் தீர்க்க முடியாது திண்டாடுகின்றது.

மறுபுறத்தே வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் ஒரு முடிவின்றித் தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்தம் ஏற்படுத்திவிட்டுள்ள பொருளாதார ரீதியான தாக்கம் நாட்டு மக்களனைவரையுமே மிகுந்த கஷ்ட-நஷ்டங்களுக்குள்ளாக்கியிருக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் என்பவற்றில் ஆளுங்கட்சி கொடுத்த வாக்குறுதிகள் எவற்றையேனும் நிறைவேற்ற முடியாத சூழல்களே பலமடைந்துள்ளன.

வடக்கு-கிழக்குப் பிரச்சனைத் தீர்வு தொடர்பான அரசியல் அணுகுமுறைகள் 'நத்தைவேகத்தில்' இருக்கின்றன. ஆனால் 'குதிரை வேகத்தில்' சென்ற இராணுவ ரீதியான அணுகுமுறை சறுக்கித் தடம் புரண்டதாக இருக்கின்றது.

நாட்டின் இன்றைய பாரதூரமான நிலைமைக்கு மூலகாரணமாக வடக்கு-கிழக்கு யுத்தமே இருந்து வருகின்றது. இந்த யுத்தம் முடிவுக்கு வந்து வடக்கு-கிழக்குப் பிரச்சனை ஆரோக்கியமான அரசியல் தீர்வொன்றை எட்டாதவரை இலங்கைக்கு எவ்விதத்திலும் விமோசனம் ஏற்படப்போவதில்லை என்பதையே நன்கறிய முடியும்.

வடக்கு-கிழக்குப் பிரச்சனை என்பது சாமான்யமான தொன்றல்ல. கடந்த இரு தசாப்த காலத்தில் 60 ஆயிரத்துக்குமதிகமான மக்களைப் பலிகொண்டதாகவும் கோடி, கோடியாகப் பணத்தை ஏப்பம் விட்டு வருவதாகவுமே இப்பிரச்சனை காணப்படுகின்றது.

முழு நாட்டையும், அனைத்து மக்களையும், சகல அரசியல் தரப்பையும் குழப்பிவிட்டுள்ள ஒரு பிரச்சனையாக இருந்து வருகின்ற வடக்கு-கிழக்கு விவகாரத்தை ஒரு தரப்பினாலோ அல்லது ஒரு குறிப்பிட்ட சாராரினாலோ மட்டுமே தீர்த்துவிட முடியாது.

அனைத்து அரசியல் சக்திகளும் ஒன்று சேர்ந்து வடக்கு-கிழக்குப் பிரச்சனையை நேர்மையாகவும், நிதானமாகவும், சொந்த அரசியல் லாபங்களுக்கு இடந்தராத விதத்தில் அணுகும் பட்சத்திலேயே ஒரு தீர்வை நோக்கிய திசையில் நகர முடியும். இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் இருந்து வருகின்ற வடக்கு-கிழக்கு இனப்பிரச்சனை 1977ம் ஆண்டிலிருந்து 1994ம் ஆண்டுவரை ஐக்கியதேசியக் கட்சி ஆட்சியிலிருந்த காலப்பகுதியிலேயே மிகவும் விகாரமான நிலையை எட்டியிருந்தது.

இராணுவ ரீதியான நடவடிக்கைகள் விரிவாக்கப்பட்டு தமிழ் அரசியல் தரப்பு பாராளுமன்ற அரசியலிலிருந்தும், தேசிய அரசியலிலிருந்தும் வெகுவாகவே ஓரங்கட்டப்பட்டமையும் ஐ.தே.கவின் ஆட்சிக் காலத்திலேயே என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யத் தவறிய ஐக்கிய தேசியக்கட்சி, எத்தனையோ இழப்புக்கள் தோன்றியுள்ள போதிலும் தனது சுயநல அரசியலுக்கே முதன்மை அளித்திருக்கக் காணப்படுகின்றது.

ஆளுங்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சிக்குமிடையே வடக்கு-கிழக்குப் பிரச்சனையைத் தீர்த்து வைப்பது தொடர்பாக முதலில் இணக்கம் ஏற்பட வேண்டும். இதன் பின்னரே அப்பிரச்சனையை தமிழ் அரசியல் தரப்போடு சமரச நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய முடியும்.

கடந்த காலங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், எதிர்க்கட்சிக்குமிடையே வடக்கு-கிழக்குப் பிரச்சனை குறித்து ஒருமித்த நிலைப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால் அம்முயற்சிகள் யாவுமே தோல்வியைத் தழுவியிருந்தன. தீர்வுத்திட்டங்கள் என்ற ரீதியில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்ட வேளைகளில்கூட ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி ஆகியவற்றுக்கிடையே ஒரு போதும் கருத்தொருமிப்பு நிலவியிருக்கவில்லை.

எனவே நாட்டின் பழம்பெருங்கட்சிகள், முக்கிய அரசியல்வாதிகளைக் கொண்டிருக்கும் அரசியல்கட்சிகள் என்ற ரீதியில் பொதுஜன ஐக்கிய முன்னணி, மற்றும் ஐக்கிய தேசியக்கட்சி ஆகியவை இருக்கின்றனவே தவிர, இலங்கையின் மிகப் பெரும் பிரச்சனையாக இருக்கும் வடக்கு-கிழக்கு விவகாரத்தைத் தீர்த்து வைக்கக்கூடிய அரசியல் பக்குவம் இவற்றிடம் காணப்படாமலேயே இருக்கின்றது.

இலங்கை இனப்பிரச்சனை தீர்வு தொடர்பாக நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம்கூட அரசியல் அணுகுமுறையைத் தவிர வேறெதுவும்,



வடகக்கு-கிழக்குப் பிரச்சனைத்தீர்வு தொடர்பாகக் கைகூடப்போவதில்லை என்று உணர ஆரம்பித்துள்ளது.

இராணுவ நடவடிக்கைகள் மூலம் வடக்கு-கிழக்குப் பிரச்சனையைக் கையாள முற்பட்டு பாரிய பின்னடைவுகளை எதிர் நோக்கியதாகவே பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு காணப்படுகின்றது.

இராணுவ ரீதியான பின்னடைவுகள் தற்போதைய பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் மட்டுமல்ல. ஐக்கிய தேசியக்கட்சி பதவியில் இருந்தபோதுகூட இராணுவ ரீதியான தோல்விகள் பெருமளவில் ஏற்பட்டிருந்தன.

இந்நிலையில் ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் அரசியல் அணுகுமுறைகளைப் பலப்படுத்தி வடக்கு-கிழக்குப் பிரச்சனையைத் தீர்த்து வைப்பது தொடர்பாக ஆராய்வதற்குப் பதிலாக மீளவும் தம்மிடையேயான பலப்பரீட்சையில் ஈடுபட முயற்சிப்பதையே அவதானிக்க முடிகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியை எடுத்து நோக்கும் பட்சத்தில் அதன் தலைமைத்துவம் மிகவும் பலவீன முற்றதாகவே இருக்கின்றது.

1994ம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணியிடம் ஐக்கிய தேசியக் கட்சி தனது ஆட்சியைப் பறிகொடுத்தது. அதன் பின்னர் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலிலோ, அல்லது பாராளுமன்றத் தேர்தலிலோ உறுதியான வெற்றிகளைப் பெற முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கே ஐக்கிய தேசியக் கட்சி உள்ளாகியிருந்தது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவினால் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஒருமைப்பாட்டைக் கொண்டிருக்க முடியாதுள்ள அதேசமயம், ஆளுமையுள்ள தலைமைத்துவத்தையும் அவரால் வழங்க முடியாதுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணிக்குச் சவால் விட்டு, அரசியல் ரீதியான வெற்றிகளைப் பெற்றிருக்கக்கூடிய ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் வாதிகள் பலரும் இன்று உயிருடனில்லை.

ஒரு சில வாரங்களுக்கு முன்னர் கூட ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உட்கட்சிப் பூசல் வலுவடைந்திருந்தது. அக்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பலர் திரு.ரணில் விக்கிரமசிங்கவைக் கட்சித் தலைமைப் பதவியிலிருந்து அகற்ற வேண்டுமெனக் குரல் கொடுத்திருந்தனர்.

பிரதான எதிர்க்கட்சி என்ற ரீதியில் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்றத்தில் இருந்து வருகின்றது.

ஆனால் அக்கட்சிக்குள்ளேயே இருவேறு அணிகள் உட்கட்சிப்பூசல்களால் தோன்றியிருந்தன.

எனவே இந்த உட்கட்சிப் பூசல்களைத் தவிர்த்து, சரிவுற்ற நிலையில் இருக்கும் தனது கட்சியின் செல்வாக்கை உயர்த்தும் நோக்கிலேயே பொதுஜன ஐக்கிய முன்னணிக்கெதிரான நம்பிக்கையில்லாப்பிரேரணை பற்றி ஐ.தே.க பிரஸ்தாபித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

ஆளுங் கட்சியான பொது ஜன ஐக்கிய முன்னணியைப் பொறுத்தவரை இன்றைய நாட்டு நிலபரத்தைக் கையாள முடியாத ஒரு தன்மையே காணப்படுகின்றது.

முக்கிய பிரச்சனையாக விளங்கும் வடக்கு-கிழக்குப் பிரச்சனையைத் தீர்த்து வைக்கும் பட்சத்திலேயே சீரழிந்து செல்லும் நாட்டின் பொருளாதாரத்தைக்கூட சீர் செய்ய முடியுமென்பதை அனைத்து அரசியல் சக்திகளும் தற்போது உணர்ந்துள்ளன.

ஆனால் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி எரியும் நெருப்பில் எண்ணெய் வார்ப்பது போன்றே சந்திரிகா அரசின்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவது பற்றி ஆராய்கிறது.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவரவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியிடமும் வடக்கு-கிழக்குப் பிரச்சனையையோ அல்லது நாட்டின் பொருளாதாரப் பிரச்சனையையோ தீர்க்கக்கூடிய உருப்படியான திட்டங்கள் எதுவுமே இல்லை என்பதையே அதன் அண்மைக்கால நடவடிக்கைகள் மூலம் அறிய முடிகின்றது.

எனவே ஒர் உறுதியான கட்சி அரசியலை மேற்கொள்ள முடியாத ஐக்கிய தேசியக்கட்சி ஆளுங் கட்சி மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையைக்கொண்டுவர எத்தனிப்பது, வேடிக்கையான விடயமாகவே இருக்கின்றது.

இதில் தமிழ் அரசியல் கட்சிகளிடமும் ஐக்கிய தேசியக் கட்சி அதன் நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக ஆதரவு கோரியிருப்பதே மேலும் வேடிக்கையானதாக இருக்கின்றது.

தமிழ் அரசியல் தரப்பை பாராளுமன்ற அரசியலில் ஓரங்கட்டியதோடு, வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்குத் தீர்வொன்றை எட்டுவதற்கான ஒத்துழைப்பையும் உரிய தருணங்களில் வழங்காது பின்வாங்கும் கட்சியாகவே ஐக்கிய தேசியக் கட்சி இருந்து வருகின்றது.

வடக்கு-கிழக்கு மக்களைப் பொறுத்தவரை தென்னிலங்கையின் எந்தவொரு அரசியல் தரப்பின் மீதும் நம்பிக்கை இழந்த நிலையே காணப்படுகின்றது.


தென்னிலங்கையின் பிரதான அரசியல் கட்சிகள் வடக்கு-கிழக்குப் பிரச்சனையை உரிய விதத்தில் அணுகத் தவறியுள்ள அதேசமயம் இனவாத சக்திகளும் தற்போது தமது கைவரிசையைக் காண்பிக்க ஆரம்பித்துள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

ஒரு புறம் யுத்தக் கெடுபிடி; மறுபுறம் பொருளாதாரச் சிக்கல்கள். இவற்றினிடையே அதிகரித்துச் செல்லும் சமூகப் பிரச்சனைகள்; கூடவே அண்மைக் காலங்களில் தலையெடுக்கும் இனவாத மோதல்கள்.

முழு நாடுமே மேற்குறிப்பிட்ட சீரழிவுகளால் சின்னாபின்னப்பட்டுப்போயுள்ள நிலையில் ஐக்கிய தேசியக்கட்சி நடத்த உத்தேசிக்கும் பலப்பரீட்சை நாட்டை மேலும் சீரழிக்கும் ஒரு விஷப் பரீட்சையாக இருப்பதையே காணமுடிகிறது.

---

# அதிரடி அய்யாத்துரை



**கொஞ்சக்காலத்துக்கு** முந்தி யாழ்ப்பாண யு.என்.பி. எம்.பி புலித்தடைக்கெதிராக கையெழுத்துப் போட்டதுக்கு ஆளும் கட்சிக்காரர் பெரிசா ஆர்ப்பரிச்சு ஆளைக் கட்சியை விட்டு விலத்தச்சொல்லி கொதிச்செழும்பினவையெல்லே. இப்ப தங்கட கட்சியிண்ட தங்கமான யாழ். அமைப்பாளரே தானே ராசா எண்ட நினைப்பில ஒப்பினாச் சொல்லியிருக்கிறார். புலிகள்தான் தமிழ் மக்களிண்ட ஏக பிரதிநிதிகள் எண்டு. அது தன்ர கட்சியிண்ட கருத்தா, இல்ல தன்ர கருத்தா, அப் பிடியெண்டால் அவர் கட்சிய விட்டு வெளியேறிட்டாரா, இல்லை கட் சிக்குள்ள இருந்துகொண்டே கட்சிக்கு மாறாக் கருத்துச் சொல்லத் துணிஞ்சிட்டாரா? எண்ட கேள்விகள் கிளம்பக்க என்ன செய்யப் போகுதாம். அந்தச் சுதந்திரமான கட்சியெண்டு வேடிக்கை பாக்க ரெடியா நிக்குது சனம்.

**கூட்டான அணியொண்டுக்க** நடக்கிற கூத்து தாங்க முடியேல்லையையா. அவைக்கு இப்ப மற்றக் கட்சிக்காறரோட போட்டியில்லை. தங்கட கட்சிக்குள்ள தாங்களே ஒருத்தரை ஒருத்தர் கழுத்தறுக்கிறதுக்கு கங்கணம் கட்டிக் கொண்டு நிக்கினம். மட்டக்களப்பில இவைக்குள்ள நடந்த குத்து வெட்டுக்களிண்ட உச்சம், அங்க அதிகூடின வாக்கெடுத்த பிரதிநிதியிண்ட உயிருக்கே வேட்டு வைச்சு முடிஞ்ச கதை தெரிஞ்ச கதை. அவற்ற மனைவிக்கு அந்த இடத்தைக் குடுக்கச்சொல்லிக் காலைப் பிடிச்சுக் கெஞ்சியும் உதறித் தள்ளிட்டு தங்கட செல்லமானவரை இருத்தினது தொடர்ந்த கதை. செல்லமானவரோ பட்ஜெட் வாக்கெடுப்பு நடக்கிற பொறுத்த நேரத்தில, கடதாசிப் பொட்டலமொண்டைக் கைநீட்டி வாங்கிக் கொண்டு வெளிநாட்டுக்கு கம்பி நீட்டினது அடுத்த கதை. அதைப்பற்றி உள்ளுக்கும் வெளியிலயும் புகைஞ்சுகொண்டிருக்கக்க யாழ்ப்பாணத்திலயும் அவைக்குள்ள முறுகல் முத்திட்டுதாமெண்டிறது புதுக்கதை. ஆனந்தமாகச் சஞ்சரிக்கிறவரால அரசியல் நடத்த ஏலாதெண்டு சேனைத் தளபதி குமுறித் திரியிறாராம். இது ஒரு தொற்று நோயா தொடாகதையா எண்டு விலகியோடினமாம் விசுவாசிகள்.

**சோழியன் குடும்பி சும்மா ஆடாது** பாருங்கோ. அடுத்தவைய ஆனந்தமாச் சங்காரம் செய்ய ஆசைப்படுற அந்தக் கூட்டணித் தலைவருக்கு அரசாங்கம் கவிழக்கூடாதெண்ட அக்கறை எங்கிருந்துதான் பொத்துக்கொண்டு வந்ததோ தெரியேல்லை. ஐ.தே.க. அரசாங்கத்துக்கு எதிரா நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வாறது பிழையெண்டு தொலைக்காட்சில ஏறிநிண்டு சொல்லிட்டு இறங்கியிருக்கிறார் சீமான். யாழ்ப்பாண ராச்சியம் தேவராஜ்ஜியமா மாறிக்கொண்டு போறதப் பொறுக்கேலாமல் பொருமி வெடிக்கிறதில புண்ணியமில்லை, பேசாமல் இனிப் பங்கு கேக்கிறதுதான் புத்தியெண்டு நெனச்சிட்டார்போல. அரசாங்கம் கவிண்டு அடுத்த தேர்தலெண்டு வந்தால், நெடுந்தவமிருந்து நீண்ட நாளுக்குப் பிறகு கிடைச்ச எம்.பி. பதவியும் பறிபோயிடுமோவெண்ட பயம் மற்றப்பக்கம். அதுதான் அரசாங்கத்தை எதிர்க்கிறமாதிரி எதிர்ப்பம். ஆனால் கவிழப் போனால் காப்பாத்துவம் எண்டு மெசேஜ் விட்டிருக்கிறார் அம்மையாருக்கு. சரிதான்பாருங்கோ, இந்தப் பாச்சாவை என்னெண்டு ரெண்டெழுத்துக்காராரிட்ட செல்லுப்படியாக்கப் போறாரெண்டுதான் புரியேல்ல!

**சொல்ஹெய்ம் ஐயா** சொன்ன சொல்லை நம்பி எங்கட வெளிநாட்டமைச்சர் விட்ட அறிக்கை ஒரு வேடிக்கை விளையாட்டாப் போச்சுதுங்கோ. மே 15ம் திகதிக்கு முந்திப் பேச்சுத் தொடங்கக்கூடுமெண்டு சொன்னது சொல்ஹெய்ம் தானுங்கோ. அதநம்பி எங்கட கதிர்காம நாமத்தார் தன்ர அரசாங்கமும் ரெண்டெழுத்தாரும் பேச்சுக்கு ரெடியாயிருக்கிறதால பேச்சைத் தொடங்க ஆயத்தப் படுத்தச்சொல்லி நோர்வே வெளிநாட்டமைச்சருக்கு கடிதம் போட, அப்பிடி ஒண்டும் முற்றாகேல்லையெண்டு மறுத்துப்போட்டார் ரெண்டெழுத்திண்ட ஆலோசகர். போதாக்குறைக்கு சொல்ஹெய்மும் சேர்ந்தெல்லே இன்னும் ஒண்டும் தயாரில்லையெண்டு சொல்லி இவரை முட்டாள் பட்டம் கட்டிப்போட்டார், இந்த அவமானத்தை பாடுறது, இப்படிப் பாடுவாரோ...? "சொன்னது நீ.. தா.. னா... சொல்... சொல்... சொல்.. சொல்ஹெய்மே...!"

**யாபாரி யாபாரிதான்!** யாழ். எம்.பி. யாழ். எம்.பிதான்! அரசியலை யாபாரமா நடத்திறதவிட யாபாரத்துக்காக அரசியல் நடத்திறதுதான் சரியான பிழைப்பெண்டு முடிவெடுத்திட்ட அந்தப் பச்சைப் பிரதிநிதி தனக்கெண்டே யாழ்ப்பாணத்தில ஒரு பத்திரிகையைப் பிடிச்சுப் பாலூத்திப் பாட்டுப்பாட வைச்சுக்கொண்டு வாறாராம். தான் அமைச்சரோட கதைச்சதாலதான் மழை பெய்ததா, அவர் உளறினாலும் அதை கொட்டையெழுத்தில தலைப்புப்போட எவ ரெடியா நிக்கினமாம் அந்தப் பால் குடிமறவாத பத்திரிகைக்காறர். ஆனால் அவரிண்ட மோசடிகள் மட்டும் மூச்சுக் காட்டாமல் முடி மறைச்சுப் போட்டினமாம். கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளைக்கு கெண்டுவினம். மகேஸ்வரா, உன்ர கணக்கில இண்டைக்கு எத்தினாவது நாளோ!

## உண்மைத் தொடர் 07

# உலகை உலுக்கிய சர்வாதிகாரி அடொல்ஃப் ஹிட்லர்

ஜெர்மன் தொழிற்கட்சியை ஆரம்பித்த அதன் தலைவர் ரெக்ஸ்லரை அப்பதவியில் இருந்து இறக்கிவிட்டு தலைமைப் பொறுப்பைக் கைப்பற்ற வேண்டும் என்று ஹிட்லர் திட்டமிட்டான். ஆனால் அதை உடனடியாக செய்வதன் மூலம் ஏனைய உறுப்பினர்களின் ஒத்துழைப்பை ஒரேயடியாக இழக்க நேரிடுமோ என்ற பயமும் அவனுக்குள் இருந்தது. ஏனெனில் தமது கட்சிக்காக உறுப்பினர்களை இணைத்துக் கொள்வதில் ரெக்ஸ்லர் கையாண்ட சில வழிமுறைகளாலும், அவரது உழைப்பாலும் கட்சிக்குள் அவருக்கு செல்வாக்கும் நன்மதிப்பும் இருந்தது.

ஆதலால் 'சந்தர்ப்பம் பார்த்து கவிழ்ப்போம்' என்ற திட்டத்தோடு ஹிட்லர் காத்திருந்தான்.

கட்சியின் பிரதான பேச்சாளராக ஹிட்லர் விளங்கினான்.

ஒருமுறை முனிச் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் ஒருவரோடு அவன் வாதிட்டான். பெரும்பாலும் கத்தோலிக்க திருச்சபையின் பழமைவாதிகளது கருத்துக்கள் மட்டுமே செல்வாக்குச் செலுத்தும் அந்த பல்கலைக் கழகத்தில் ஹிட்லரின் கருத்துக்கள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின.

திருச்சபையின் பல கோட்பாடுகள் ஹிட்லரின் சீற்றத்துக்கு உள்ளாகின. யூதர்கள் மாத்திரமன்றி கம்யூனிஸ்டுகளும் அவனது நாவன்மையால் தாக்கப்பட்டார்கள். ஜெர்மனிய தேசிய வாதம் அந்த நாட்டு மக்கள் இதுவரையில் கேட்டிராத தொனியில் ஒலித்தது.

பிற்காலத்தில் ஹிட்லர் அடைந்த வெற்றிகளின் பின்னால் பிரதான தூண்டுதலாக அமையப்பெற்றது அவனுடைய நாவன்மையே என்பதை சகலரும் ஏற்றுக்கொள்கின்றார்கள்.




அவனது பேச்சாற்றல் அதி உயர்தரத்தில் இருந்தது. அன்றைய காலகட்டத்தில் ஜெர்மனியின் சிறந்த பேச்சாளர்களாக புகழ் பெற்றிருந்த பலரும் பேசிய மொழி நடையினின்றும் மாறுபட்ட விதத்தில் ஹிட்லர் பேசினான். அவனது சொற்கள் கேட்போருக்கு இலகுவாக இருந்தன. அது அப்போதைய மக்களின் பிரபலமான உரைநடையாகவும் இருந்தது. அதில் ஓரளவு அறிவார்ந்த கருத்துக்கள் கலந்திருந்தன. அதே வேளை எதிரணியினர் மீதான கண்மூடித்தனமான தாக்குதலும் அதிலிருந்தது.

இந்தக் காலப்பகுதியில் அனேகமாக சிறிய கூட்டங்களிலேயே ஹிட்லர் பேசினான். அவை பெரும்பாலும் தொழிற்சாலைகளை மையமாக வைத்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

ஹிட்லர் உரையாற்றுவதாக அறிவிக்கப்படும் கூட்டங்களுக்கு நாளுக்கு நாள் மக்கள் அதிகரித்த அளவில் வர ஆரம்பித்தனர். மக்கள் அவனது உரைக்காக காத்திருக்கத் தொடங்கினார்கள். அவனது உள்ளத்தில் இருப்பதை அறியாத மக்கள் உதடுகள் உச்சரிக்கும் வார்த்தைகளை கேட்க தமது வேலை வெட்டிகளையெல்லாம் விட்டு விட்டு ஒன்று குவிந்தார்கள்.

முனிச் நகரில் அவன் பிரபல்யம் பெற்றான். அவனது பேச்சில் ஏதோ ஒரு உண்மை தொனிப்பதாக மக்கள் நினைத்தார்கள். ஹிட்லர் கட்சிக்குள் நாளுக்கு நாள் முக்கியமானவனாக மாறிக்கொண்டிருந்தான். 1920ம் ஆண்டு ஜெர்மன் தொழிற்கட்சி முனிச் நகரிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் நடத்திய 48 கட்சிக் கூட்டங்களில் முக்கியமான 31 கூட்டங்களின் பிரதம பேச்சாளராக ஹிட்லரே கலந்து கொண்டான்.

மறுநாள் பேசுவதற்காக ஏற்கனவே தயாரித்த உரையைப் பற்றி ஹிட்லர் சிலநேரம் அவனது நண்பி கெதரினுடன் விவாதிப்பதுண்டு. அவனது வாதத்தை எதிர்த்து அவளால் எதுவும் கூறமுடிவதில்லை. ஆனாலும் தன்னையும் ஓர் அறிவாளியாக நினைத்து ஹிட்லர் தன்னிடம் கூறும் ஆழமான தேசியவாதக் கருத்துக்களை அவள் ரசித்தாள்.

"நீ சொல்வது அத்தனையும் எனக்குப் புரிவதில்லை.. என்றாலும் நீ தினமும் என்னிடம் வந்து இப்படி ஏதாவது கூறிக்கொண்டிருக்க வேண்டும்..." ஒரே நாளில் பல கூட்டங்களில் உரையாற்றி களைத்துப் போய் வந்து தன் மடியில் சாய்ந்திருந்த ஹிட்லரின் நெற்றியில் முத்தமிட்டவாறே சொன்னாள் கெதரின்.

அவளுக்கு ஏதாவது பதில் சொல்ல வேண்டும் என்று அவன் நினைக்கவில்லை. தன்பாட்டுக்கு மேசை மேல் இருந்த மது பானத்தை எடுத்துக் குடித்தான்.

"இன்று அதிகமாக குடித்துவிட்டாய்..." கெதரின் ஞாபகப்படுத்தினாள். அதைப் பொருட்படுத்தாமல் கையில் எடுத்ததை முழுவதும் குடித்துவிட்டு அடுத்தது என்ன? என்பது போல் கெதரினை பார்த்தான் ஹிட்லர்.

மடியில் சாய்ந்திருந்த ஹிட்லரின் உதடுகளில் அவள் அழுத்தமாக முத்தமிட்டாள்.

தான் குடித்த மதுவை விடவும் அந்த முத்தம் மயக்கம் தந்ததாக உணர்ந்தான். கனாக்கண்டு விழித்தவன் போல் எழுந்து கொண்டவன் அவளை தன் மடியில் சாய்த்துக்கொண்டு மூடிக்கிடந்த கண்களில் முத்தமிட்டான். அவளது துடித்துக் கொண்டிருந்த உதடுகளை கடித்தெடுப்பது போல அழுத்தினான். அவனது முரட்டுத்தனமான ஆக்கிரமிப்புக்கு கெதரின் பூரண தயார் நிலையில் இருந்தாள்.

✲✲✲

ஜெர்மன் தொழிற்கட்சியின் அரசியல் பயணத்துக்கும் ஹிட்லரின் வளர்ச்சிக்கும் அன்றைய ஜெர்மனியின் அரசியல் சமூக சூழ்நிலை பெரிதும் ஏதுவாக இருந்தது.

முதலாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியும் பணவீக்கமும் நாட்டில் ஸ்திரமற்ற நிலையை தோற்றுவித்திருந்தன. இதனால் எதிரணிகளின் பிரசார வலையில் மக்கள் சிக்கினார்கள். குறிப்பாக ஹிட்லரைப்போன்று உணர்ச்சியூட்டும் கபடர்களுக்கு இது பெரும் சாதகமான அம்சமாக விளங்கியது.

இவ்வாறான நிலைமையில் மாதச் சம்பளத்தை நம்பி வாழும் தொழிலாளர்கள் பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தை வெகுவாக உணர்ந்தார்கள். அதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களை தம்பக்கம் கவரும் நோக்கத்துடன் தொழில் நிலையங்களில் ஏராளமான அரசியல் கூட்டங்களை ஜெர்மன் தொழிற்கட்சி ஏற்பாடு செய்தது.

ஒரு முறை இரும்பு உருக்கு கைத்தொழிற்சாலை ஒன்றில் இந்த கட்சியின் கூட்டம் ஒன்று நடை பெற்றுக் கொண்டிருந்தது. இந்த தொழிற்சாலையின் சொந்தக்காரர்கள் கத்தோலிக்க திருச்சபைக்கு மிகவும் வேண்டப்பட்டவர்கள். தமது தொழில் நிலையத்துக்குள் புகுந்து அரசியல் கூட்டம் நடத்துவது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. இது குறித்து கட்சியின் தலைவர் ரெக்ஸ்லருக்கு தொழிற்சாலை நிருவாகம் அறிவித்தது. ஆனால் திட்டமிட்டபடி கூட்டம் நடைபெறும் என்றும் ஹிட்லரும் அதில் உரையாற்ற விருப்பதாகவும் தொழிலாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

மத்தியானம் உணவு வேளையிலோ அல்லது, கடமை நேரம் முடிவடைவதற்கு ஒரு மணித்தியாலம் முன்னதாகவோ தான் பொதுவாக தொழில் நிலையங்களில் அரசியல் கூட்டங்கள் நடாத்தப்படுவது வழக்கம்.

குறிப்பிட்ட தொழிற்சாலையில் அன்றையதினம் மாலை வேளையில் கூட்டம் ஆரம்பமானது. அருகில் இருந்த இன்னொரு தொழில் நிலையத்தில் இருந்தும் பல ஊழியர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். எல்லாமாக சுமார் ஆயிரம் பேர்வரைதான் இருக்கும். கூட்டம் நடந்து கொண்டிருந்தது.

தொழிற்சாலை நிருவாகத்துக்கு விசுவாசமான சிலர் இந்தக் கூட்டத்தை குழப்பத் திட்டமிட்டனர்.

பலத்த கரகோஷத்துக்கு மத்தியில் ஹிட்லர் உரையாற்ற எழுந்தான். எவரும் எதிர்பாராத ஒன்று நடந்தது.

தொழிற்சாலை நிருவாகிகளின் விசுவாசிகளால் கூட்டமேடையின் கம்பங்கள் பொருத்தப்பட்ட ஆணிகள் கழட்டப்பட்டிருந்தன. ஹிட்லர் பேச ஆரம்பித்து சில விநாடிகளில் மேடை சரிந்து வீழ்ந்தது. மேடையில் அமர்ந்திருந்த சிலருக்கு சிறிய காயங்கள் ஏற்பட்ட போதும், ஹிட்லர் பாதிப்பு எதுவமின்றித் தப்பித்தான்.

### ஷொனு


யூதர்களை திட்டி அரசியல் நடத்தும் கலை வெற்றியை நோக்கி போய்க் கொண்டிருப்பதை உணர்ந்த ஹிட்லர் வெறுமனே கூட்டங்கள் மாத்திரம் நடத்திக் கொண்டிருக்காமல் கபடத்தனமான அரசியல்வாதிகளுக்கே உரிய பாணியில் சிந்திக்கத் தொடங் கினான்.

முனிச் நகரில் யூத இனத்தவர்களுக்கு சொந்தமான பண்ணைகள் இருந்தன. அவற்றில் பெரும்பாலும் அதே இனத்தைச் சேர்ந்தவர்களே வேலை செய்தார்கள்.

முனிச் நகரில் ஆயிரக்கணக்கான ஜெர்மனிய சுதேச வாசிகள்- குறிப்பாக முதலாம் உலகப் போரின் போது இராணுவத்தில் பணியாற்றிவிட்டு பின்னர் விலகிய இளைஞர்கள் வேலையற்று இருந்தார்கள்.

**வருவான்...**

# இன்னுமொரு வைரஸ்




கம்பியூட்டர்களில் உள்ள அத்தனை பதிவுகளையும் அழித்து விட்டு பாலியல் காட்சிகளை மாத்திரம் அவற்றில் பதிவு செய்யும் புதுவகையான கம்பியூட்டர் வைரஸ் ஒன்று பரப்பப்பட்டு வருகின்றது.

சிறிது காலத்துக்கு முன்னர் கணனிகளுக்கு பலத்த சேதத்தை ஏற்படுத்திய ஐ.லவ்.யூ வைரசையும் விட இது சக்தி வாய்ந்ததென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் அவுஸ்திரேலிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கு தமது காரியாலயங்களில் அதிர்ச்சி காத்திருந்தது.

வழமையான பணிகளுக்காக கம்பியூட்டரின் தகவல்களை பரிசோதித்த அவர்களால் ஓரினச்சேர்க்கை காட்சிகளையும், சகிக்க முடியாத உடலுறவுக்காட்சிகளையும் தவிர வேறொன்றையும் காணக்கிடைக்கவில்லை.

ஹோம்போஸ் என்று அழைக்கப்படும் இந்த வைரஸ் கணனிகளின் தகவல் தளங்களை அழிப்பதற்காக இதுவரைகாலமும் பரப்பப்பட்ட வைரஸ்களிலேயே மிகவும் மோசமானதென்று கூறப்படுகின்றது.

ஏற்கனவே 25 நாடுகளில் உள்ள பல்லாயிரக்கணக்கான கம்பியூட்டர்களை இது சேதப்படுத்தி விட்டது.

ஹோம்போஸ் என்ற ஈமெயில் பக்கத்தை திறந்தவுடன் நீலப்படக் காட்சிகள் திரையில் வரும். அத்தோடு கம்யியூட்டரில் உள்ள ஏனைய சகல தகவல்களும் அழிந்து போகும்.

இந்த வைரஸ் ஒல்லாந்து நாட்டில் இருந்து பரப்பப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

# இப்படியும் ஒரு குற்றம்

'இப்படியெல்லாம் கூட நடக்குமா?' என்று சிந்திக்கக்கூடிய காரியம் ஒன்றை பிரித்தானிய யுவதி ஒருவர் செய்திருக்கிறார்.

ஆண்கள் பெண்களை பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்குவது சர்வசாதாரணமான விஷயம் என்றாகிப் போன நிலையில், 37 வயது பெண் ஒருவரை 18 வயது யுவதி ஒருத்தி பாலியல் பலாத்காரம் செய்துள்ளார்.

வீதியால் நடந்து சென்ற 37 வயதான பெண்ணை மற்றொரு பெண் இழுத்துக் கொண்டு சென்று பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கியது தொடர்பான வழக்கு கடந்த வாரம் லண்டன் நீதிமன்றம் ஒன்றில் விசாரிக்கப்பட்டது.

இந்த 'குற்றத்தை' புரிந்த கிளேயர் மார்ஷ் என்ற 18 வயது யுவதிக்கு 7 வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இந்த யுவதியிடம் சிக்கிய பெண் தன் மீதான வல்லுறவு முடிந்தவுடன் நிர்வாணமாகவே ஓடித்தப்பியுள்ளார்.



பிரிட்டனில் பெண்களை பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கிய ஒருசில பெண்கள் குறித்து தெரிவிக்கப்படுகின்றபோதிலும், அவர்களில் வயதில் மிகவும் இளையவர் இந்த யுவதியே என்பது குறிப்பிடத்தக்கது.

# பேய்களுக்குப் பயப்படும் பிரதமர்

நவீன விஞ்ஞான தொழிநுட்பத்துறையில் உயர்மட்ட வளர்ச்சி கண்ட ஒரு சில நாடுகளில் ஜப்பானும் ஒன்று.

ஆனால் இந்த நாட்டின் பிரதமர் பேய் பிசாசுகளுக்கு பயந்து தமது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை விட்டு வெளியேறிச் சென்றுள்ளார்.

ஜப்பான் பிரதமருக்குரிய வாசஸ்தலம் 1929ம் ஆண்டு கட்டப்பட்ட ஒரு பழமையான மாளிகை. கடந்த 70 வருட காலத்துக்குள் இந்த மாளிகையில் பல இரத்தக்களறிகளும் கொலைகளும் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது இந்த மாளிகைக்குள் பலர் உயிர் விட்டிருக்கிறார்கள்.

தற்போதைய ஜப்பானியப் பிரதமர் ஜுனிக்ஹிரோ கொய்சுமி, தனக்கு இந்த மாளிகையில் இரவு நேரத்தில் அமைதியாகத் தூங்கமுடியவில்லை என்று கூறி தனது இருப்பிடத்தை மாற்றிக் கொண்டுள்ளார்.

இவர் ஒரு பிரமச்சாரிவேறு. அதனால் தனிமையில்தான் இருக்கிறார். வீட்டுக்குள் இரவில் ஏதேதோ குழப்பங்கள் நடப்பதால், பயமாக இருக்கிறதெனக் கூறி அவருக்கு பழக்கப்பட்ட இடத்திலேயே போய் தூங்கிக் கொள்கிறார்.

எமது நாட்டில் உள்ள அரசியல்வாதிகள் வசிக்கும் வீடுகளுக்கு வர பேய்களும் பயப்படும்!

# ஒரு மில்லியன் டாலர் உள்ளாடை



அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் 'நாகரிக வாரம்' என்ற அநாயாசமான ஆடைக்கண்காட்சி ஒன்று நடைபெற்றது.

ஆடைக்கண்காட்சி என்று சொல்லப்பட்டாலும், இது பெரும்பாலும் ஆடையில்லாதவர்களின் கண்காட்சியாகத்தான் அமைந்திருந்தது. பல நாடுகளில் இருந்தும் கலந்து கொண்டமாடல்கள் தமது அசைவுகளை காட்டி பார்ப்பவர்களை பரவசப்படுத்தினார்கள்.


இதில் விசேடத்தன்மை என்னவென்றால், விலை உயர்ந்த உள்ளாடைகளை அணிந்திருந்த அழகிகளுக்குத்தான் முதல் மூன்று இடங்களும் கிடைத்தன.

ஒரு மில்லியன் டாலர் பெறுமதியான முத்துக்கள் பதிக்கப்பட்ட பிராவொன்றை அணிந்து, அதற்கு மேலும் அழகு சேர்க்க பாம்பொன்றை தோளில் போட்டு உலவிய இந்தப் பெண்ணுக்குத்தான் முதல் பரிசு.

# 70 வயதில் வெற்றிப் புன்னகை

பல சர்வதேச ஊடகத்துறை நிறுவனங்களின் சொந்தக்காரரான ரூபட் மர்டோச் என்ற கோடீஸ்வரர் 70 வயதில் தந்தையாகப் போகிறார். இவரது மனைவியின் வயது ஆக 33 மட்டும்தான்.

அவரது புதிய மனைவி பெண்டி டெங் கர்ப்பமாக இருக்கும் செய்தியை மட்டும் அறிவித்த ரூபட்டின் பேச்சாளர் எப்போது பிரசவம் இடம்பெறும் என்பதை தெரிவிக்கவில்லை. ஹட்சன் நதிக்கரையில் மோனிங்குளோரி என்ற கப்பலில் 1999 ஆம் ஆண்டு இந்த கோடீஸ்வரருக்கும் டெங்குக்கும் இடையில் திருமணம் நடந்தது. அது தொடக்கம் மிகுந்த உற்சாகத்துடன் காணப்பட்ட ரூபட் 70 வயது தாண்டிய பின்னரும் தான் சாதித்திருப்பதையிட்டு வெற்றிப் புன்னகையுடன் காணப்படுகிறார்.




டெங் ஸ்டார் டி.வி.யில் வேலை செய்தபோது இவரை சந்தித்தார்.

## மிதக்கும் நகரம்

'தங்கராஜகுமாரி' (GOLDEN PRINCESS) என்ற பெயருடன் பெருங்கடல்களில் பவனி வரவிருக்கும் மிதக்கும் நகரம். நவீனமயமான சகல வசதிகளையும் கொண்ட கப்பல் பல வருடகாலம் உருவாக்கப்பட்டு மே 5ம் திகதியன்று சொலன்ற் என்ற இடத்திலுள்ள கல்ஷொட் ஸ்பிளிட் நீரிணைக்கூடாக தென் இங்கிலாந்திலுள்ள கவுதாம்ரன் துறை முகத்துக்கு, சிறு சிறு படகுகள் சூழ்ந்துவர இட்டுச் செல்லப்படுகிறது.

பி அன்ட் ஓ நிறுவனத்துக்குச் சொந்தமான இப்புதிய கப்பல் 2600 பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடியது. இதனை வடிவமைக்க 300 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண் செலவாகியிருக்கிறது. நம்மூர் மதிப்பில் சுமார் நாற்பது ஆயிரம் பில்லியன்.

இம்மாத முடிவில், இக்கப்பல்-தப்பு இந்நகரம் வெள்ளோட்டம் விடப்படவிருக்கிறது.



## சகோதர சாகசம்

→ இப்படத்தைப் பார்த்ததும் இரு வெவ்வேறு படங்களை கத்தியின் நுனி மட்டும் ஒன்றுடன் ஒன்று தொட்டு நிற்கக் கூடியதாக ஒட்டி வைத்திருக்கிறார்கள். இது ஒரு வேடிக்கையா? என்று பலர் கேட்பீர்கள். அல்லது அண்மையில் இங்கு வந்து சாகச வித்தைகளைக் காட்டிச் சென்ற மித்ரா என்ற மாயாஜால வித்தைக் காரனைப் போன்ற ஒருத்தரின் வித்தையாக இருக்கும் என்றுதான் கருதுவீர்கள்.

ஈரான் நாட்டின் தலைநகர் டெஹ்ரானைச் சேர்ந்த இரு சகோதரர்கள் 0.95 சென்டிமீட்டர் (3/8 அங்குல) அகலமுடைய முனையுடைய குத்தீட்டிகளை இருவரின் வாயிலும் வைத்துக் கடித்த வண்ணம் ஒருவரை மற்றவர்-எத்தகைய பிடிமானமுமில்லாமல்-தாங்கிக் கொண்டுள்ளார். அலி பண்டோஸ் என்பவர்குத் தீட்டி முனையில் மசவுண்ட் என்ற 68 கிலோ (150 இறாத்தல், எடை கொண்ட சகோதரரை அந்தரத்தில் தாங்கிக் கொண்டிருக்கிறார்.



## உதவும் கரங்கள்

→ மத்திய கிழக்கில் பலஸ்தீன-இஸ்ரேல் நாடுகளிடையிலான சண்டைகள் தொடர்கதையாக இருக்கின்றன. தினமும் போர் அதனால் தினமும் உயிரிழப்புக்கள்.

புனித நகராம் ஜெருசலேத்தினை மீட்டெடுக்கப் போராடும் பாலஸ்தீனியர்கள் பலர் மடிந்து வருகின்றனர். இவர்களின் குடும்பங்களிற்கு உதவியளிக்கும் பொருட்டு ஜோர்தான் நாட்டின் தலைநகர் அம்மானில் அண்மையில் நிதிதிரட்டப்பட்டது.

இதில் பல தாய்மார்கள் பணத்துடன் தமது ஆபரணங்களையும் கழற்றிக் கொடுக்கும் காட்சிதான் இது.




## பாசமுள்ள பாம்பார்

↓ கொஞ்சம் கூடப்பயமில்லாமல் இந்தப் பெரிய மலைப்பாம்பு அருகே பச்சிளம் பாலகனை விட்டுவிட்டுச் சென்றிருக்கிறார்களே, குழந்தையை விழுங்கி விடாதா? என்று பயப்படுகிறீர்களா?

நீங்கள் பயப்படுவது போல் அப்படியொன்றும் நடக்காது என்கிறார்கள் இக்குழந்தையின் பெற்றோர்கள். காரணம் இந்த மழலையும் மலைப்பாம்பும் நெருங்கிய நண்பர்கள்தான்.

நம்மூரில் நாய், பூனைகளைச் செல்லப்பிராணியாக வளர்ப்பது போல் கம்போடியா நாட்டில் மலைப்பாம்பைச் செல்லப்பிராணிகளாக வளர்க்கிறார்கள். அத்துடன் தமது குழந்தைகளை பாம்புகளின் அருகில் விளையாட வைத்து விட்டும் சென்ற விடுகிறார்கள்.



## தகவல் பெட்டி

## சாராய விளம்பரம்

→ பெரிய அளவிலான போத்தல் போன்று வடிவமைக்கப்பட்டிருக்கும் இந்த வண்டி விளம்பரத்திற்காக வித்தியாசமாக வடிவமைக்கப்பட்டதாகும்.

ஐரோப்பிய நாடோன்றிலுள்ள பிரபல சாராய கம்பனி தனது கிளையை சில மாதங்களுக்கு முன் ஜப்பானில் நிறுவியது. அதற்காக சாராயப் போத்தல் ஒன்றை மாதிரியாக வைத்து பெரிய அளவில் தயாரித்து வீதியெங்கும் ஓட விட்டு விளம்பரம் தேடியது.



## மினி சினி

* கார்த்திக் கதாநாயகனாக நடிக்கும் 'வல்லி' படத்தை இயக்குபவர் சுசித்தி. இவர் ஏற்கனவே பார்த்திபன் நடித்த 'புதுமைப் பித்தன்' என்ற படத்தை ஜீவா என்ற பெயரில் இயக்கியவர்.

* சரத்குமார்-மீனா நடித்து வெற்றி பெற்ற 'மாயி' தெலுங்கில் தயாராகவுள்ளது. தெலுங்கில் டாக்டர் ராஜசேகர்-சௌந்தர்யா ஜோடியாக நடிக்கவுள்ளார்கள்.

* பிரபு-ரோஜா நடிக்கும் 'மிட்டாமிராசு' படத்தின் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமாகும் அஸ்லம் முஸ்தபாவுக்கு அப்படம் வெளியாக முன்னரே 3 படங்கள் ஒப்பந்தமாகியுள்ளன.

* தொலைக் காட்சித் தொடர்களில் பிரபலமான தீபா வெங்கட், சில படங்களில் தங்கை வேடத்தில் நடித்தார். இப்போது இவர் 'நான் பாட நினைப்பதெல்லாம்' படத்தில் வில்லியாக நடித்து வருகிறார்.

* உதயா-வித்தியா ஜோடியாக நடித்த 'பூங்குயிலே' படம் முடிவடைந்தும் இன்னமும் விற்பனையாகாமல் இருக்கிறது. இப்போது இதை வாங்கி வெளியிடவுள்ளார் உதயாவின் தந்தையும் தயாரிப்பாளருமான அழகப்பன்.

* கே.ஆர்.ஜெயா இயக்கும் 'ஜூன் ஜூலை' படத்தில் கதாநாயகியாக அறிமுகமாகிறார் ராதிகா மேனன். சினிமாவுக்காக இவரது பெயரை அபர்ணா என்று மாற்றிவிட்டார்கள்.

* தொழிலாளர் தினமான மே முதலாம் திகதி வெளியாக இருந்த அஜித்தின் 'சிட்டிசன்' படத்தை எப்படியும் மே இறுதிக்குள் வெளியிட கடுமையாக உழைத்து வருகின்றனர்.

* பல படங்களில் இணைந்து நடித்து நடித்திருக்கும் மலையாள சூப்பர் ஸ்டார்களான மம்முட்டியும் மோகன்லாலும் மறுபடி ஒரு படத்தில் இணைந்து நடிக்கவுள்ளனர். இதை பிரியதர்ஷன் இயக்குகிறார்.

## தெலுங்கில் இருந்து தமிழுக்கு

கே.எஸ்.ரவிக்குமார் தற்போது நாகார்ஜுனா-சிம்ரான் இணைந்து நடிக்கும் 'பாவா' என்ற தெலுங்குப்படத்தை இயக்கி வருகிறார். தெலுங்கில் 'பாவா' வெளியாகும் அதே நேரத்தில் தமிழிலும் மொழிமாற்றி வெளியிடத் திட்டமிட்டிருக்கிறார் ரவிக்குமார்.

## தெலுங்கில் தணிக்கை

'அந்த மாதிரி'யான படங்களில் ஒன்றான 'காமாக்னி' படத்தைத் தமிழில் வெளியிடுவதற்காக, தணிக்கைக்குழுவுக்கு அனுப்பினார்கள். தணிக்கைக் குழுவினர் அதிக இடங்களில் கத்தரி வைக்க வேண்டும் என்று கூற, தமிழில் வெளியிடப் போனால் தானே இந்தச் சிக்கல் என்று கூறி, தெலுங்கில் அதிக வெட்டுக்களில்லாமல் தணிக்கை செய்து விட்டார்கள்.

இனி 'காமாக்னி' தெலுங்கிலிருந்து தமிழுக்கு அதிக சேதாரமில்லாமல் வெளிவரவுள்ளது.





பார்த்திபன்-தேவயானி
படம்: நினைக்காத நாளில்லை

# சினி

திரையுலக மறுபக்கம் (199) தமிழ்நாட்டிலிருந்து மயன்

## திருமண ஒத்திகைக்காக திருப்பதி சென்ற ஜோடிகள்

இமய இயக்குநரது மகனும் தற்போது முன்னணியில் இருக்கும் நடிகைகளுக்குக் குரல் கொடுக்கும் 'டப்பிங் ஆர்ட்டிஸ்ட்' பெண்ணிற்கும் காதல் மலர்ந்திருக்கும் விஷயம் கோடம்பாக்கத்தில் இருக்கும் அனைவருக்கும் தெரிந்த விஷயம்.

முதலில் இளம் தயாரிப்பாளர் ஒருவருடன் கிசுகிசுக்கப்பட்ட 'பின்னணிக்குரல்' பெண்ணுக்கும் இயக்குநர் மகனுக்கும் காதல் மலர்ந்தது எப்படி?

மகனை அதிரடியாக அறிமுகப்படுத்த இயக்குநர் சொந்தமாகத் தயாரித்து இயக்கிய 'நினைவுச் சின்னம்' படத்தில் கல்கத்தா சென்னை மகனுக்கு ஜோடியாக்கினார்.

பெரிய கண்களும் ஒல்லியான உருவமும் கொண்ட நாயகிகள் என்றால் இயக்குநருக்குக் கொள்ளை விருப்பம். இப்படியான தோற்றத்தை உடைய நாயகிகளையே இயக்குநர் தனது படங்களில் அறிமுகப்படுத்துவார்.

இப்படியான தோற்றமுடைய கல்கத்தா சென்னுக்குப் படத்தில் பின்னணி பேச வந்தார் இந்த 'டப்பிங் ஆர்ட்டிஸ்ட்'. படத்தின் நாயகனான இயக்குநர் மகனும், நாயகிக்காக 'பின்னணிக் குரல்' பெண்ணும் பின்னணி பேசும்போது, இவர்களிடையேயும் காதல் பற்றிக் கொண்டது.

இவர்களது காதல் வெளியே தெரியாமல் இருந்தது. பிரபலமாகிய பின் காதலை வெளிப்படுத்தலாம் என இயக்குநர் மகன் யாரிடம் வெளியே கூறவில்லை.

எதிர்பாராதவிதமாக 'நினைவுச் சின்னப்' படம் பெரிய அடி வாங்கியது. இதற்குப்பின் இயக்குநர் மகன் நடித்த எந்தப்படமும் வெளியாகவில்லை (சில படங்களில் நடித்து வருகிறார்.

புகையையும் காதலையும் மறைத்து வைக்க முடியாது என்பது போல் இவர்களது காதலும் வெளியே கசிய ஆரம்பித்தது. படப்பிடிப்புத் தளங்களுக்கும் படம் பார்ப்பதற்கும் காதலியை அழைத்துக் கொண்டு செல்லத் தொடங்கினார் நடிகர்.

இந்த விஷயம் இயக்குநருக்குத் தெரிந்ததும், மகனைக் கூப்பிட்டுக் கண்டித்தார். காதலுக்குப் பச்சைக்கொடி காட்டிப் படமெடுக்கும் தந்தை சொந்தமகன் விடயத்தில் காதலுக்குச் சிவப்புக் கொடியையே காண்பித்தார்.

தந்தையின் எதிர்ப்பையும் மீறிக் காதலியுடன் சுற்றி வரும் நடிகர், அண்மையில் ஆந்திராவில் உள்ள திருப்பதிக்குச் சென்றார். கூடவே காதலியையும் அழைத்துக் கொண்டு.

தந்தையின் எதிர்ப்புக் கூடினால் காதலியைத் திருப்பதிக்கு அழைத்துச் சென்று திருமணத்தை முடிக்கத் திட்டமிட்டுள்ளார். அதற்காக ஒத்திகை பார்க்கத்தான் இவர்கள் இருவரும் அங்கு சென்றிருக்கிறார்கள்.

விரைவில் இவர்களது திருமணம் கண்டிப்பாக நடக்கும் என்று கூறியுள்ளார் நடிகரின் நெருங்கிய நண்பர்களில் ஒருவர்.

## தமிழுக்குப் புதிது

உமேஷ் கிருஷ்ணா என்ற புதியவர் இயக்கும் படம் 'சாதிலா'. வெங்கட்-ஷாகின் ஆகிய புதுமுகங்கள் ஜோடியாக நடிக்கிறார்கள்.

நாயகி ஷாகின் தமிழுக்குத்தான் புதியவர். இவர் ஏற்கனவே விளம்பரப் படங்கள், இசை அல்பங்களில் தோன்றியுள்ளார்.

பாடகர்-இசையமைப்பாளர் ஷங்கர் மகாதேவனின் 'ஜோஷ்' இசை அல்பத்தில் இவர் நடித்துள்ளார்.

## தாய்க்குலங்கள் மோதல்

படவாய்ப்புக்களின்றி இருந்த ரம்பா அண்மையில் ஒரிரு படங்களில் ஒப்பந்தமானது தெரிந்த சங்கதி. 'ஆனந்தம்' படப்பில் போது ரம்பாவின் தாய்க்குலம் இன்னொரு நடிகையின் தாக்குலத்துடன் சண்டை போட்ட சங்கதி யாருக்கும் தெரியாது.

படவாய்ப்புக்களில்லாது 'ஆனந்தம்' படத்தில் மட்டும் நடித்து வந்த ரம்பா, அப்படத்தின் படப்பிடிப்புக்கு ஒருநாள் தனது தாய்க்குலத்துடன் சென்றிருந்தார். அப்படத்தில் நடிக்கும் இன்னொரு முன்னணி நடிகையின் தாய்க்குலம் ரம்பாவுக்குப் படமில்லாததைக் குத்திக் காட்டி,

"இப்ப எல்லாம் உன்னப்பாக்கிறதே அபூர்வமாயிருக்கிறதே" என்று இந்தியில் குசலம் விசாரிக்க, ரம்பாவின் தாய்க்குலத்திற்கு வந்ததே கோபம்.

இரண்டு தாய்க்குலங்களும் போட்ட வாய்த்தர்க்கத்தால் படப்பிடிப்புத் தளமே அன்று அல்லோலகல்லோலப்பட்டு விட்டது.

## ஐவகை நிலங்களில் ஆடிப்பாடிய பிரசாந்த்—ஸ்நேகா

'ஜீன்ஸ்' படத்தில் இடம்பெற்ற பாடல் ஒன்றிற்காக உலக அதிசயங்கள் ஏழிலும் ஆடிப்பாடிய பிரசாந்த், 'விரும்புகிறேன்' படத்தில் இடம்பெறும் பாடல் ஒன்றிற்காக ஐவகை நிலங்களான குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை, மருதம் ஆகிய இடங்களில் பாடி ஆடினார்.

இளைஞன் ஒருவன் தனது காதலை, தான் விரும்பும் பெண்ணிடம் ஐவகை நிலங்களில் சொல்வது போல் அமைக்கப்பட்டிருக்கும் இப்பாடல் காட்சியில் பிரசாந்தும் ஸ்நேகாவும் ஆடிப்பாடி நடித்தனர். இப்பாடல் காட்சியை இயக்கினார் சுசி கணேசன்.



ரவளி



## தேவயாணி நீக்க

தேவயானி, இயக்குநர் ராஜகுமாரனைத் திரு... செய்து கொண்டாலும் தொடர்ந்து நடிப்பதாகக் கூறி... தார். தேவயானி இப்படிக் கூறினாலும் புதுப்படங்... நடிக்க தேவயானிக்கு வாய்ப்புக்கள் ஒன்றும் வரவி... அதுமட்டுமா ஏற்கனவே ஒப்பந்தமான படங்களிலும் ...வானியை நீக்கியுள்ளார்கள்.

சரத்குமாரின் 'தம்பியுடையான்' படத்தில் தேவயா...க்குப் பதில் இஷாகோபிகர். கார்த்திக் ஜோடியாக ...



அப்பாஸ்-மும்தாஜ்
படம்: மிஸ்டர் நாரதர்

## படத்தலைப்பான பாடல் வரி

பிரபலமான பாடல் வரிகள் பின்னர் படத்தலைப்புக்களாக வருவது ஒன்றும் புதிதல்ல. அந்த வகையில் 'வெற்றிக்கொடி கட்டு' படத்தில் இடம்பெற்றுப் பட்டி தொட்டியெங்கும் பிரபலமான 'கறுப்புத்தான் எனக்கு புடிச்ச கலரு..' என்ற பாடலின் இந்த வரிகளை இப்போது படத்தலைப்பாக்கி விட்டார்கள்.

இப்பாடலின் பெயரில் படம் வருகிறதோ இல்லையோ படங்களின் பெயர்களைப் பதிவு செய்யும் 'ஃபிலிம் சேம்பரில் இப்பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## மகன் இசையில் தந்தை பாட்டு

'சேது' பாலா தற்போது இயக்கி வரும் 'நந்தா' படத்திற்கு இசைஞானி இளையராஜாவின் மகன் யுவன்ஷங்கர் இசை யமைக்கிறார்.

சூர்யா-ராஜ்கிரண் இணைந்து நடிக்கும் இப்படத்தில் மகன் இசையில் இளையராஜா ஒரு பாடலைப் பாடினார். இளையராஜா இதுவரை காலமும் வேறொரு இசையமைப்பாளரது இசை யமைப்பில் பாடியதில்லை என்று குறிப்பிடத்தக்கது.



ராமராஜன்-அமிதா
படம்: சீறிவரும் காளை

# விசிட்



ராம்கி-ரமயா கிருஷ்ணன்
படம்: ராஜராஜேஸ்வரி

## காதோடு சொல்லுகிறோம்

இரண்டெழுத்துப் பூ நடிகைக்கு இப்போது என்னாச்சு என்று புலம்புகிறார்களாம் அவரை வைத்துப் படமெடுத்து வரும் தயாரிப்பாளர்கள். இதுவரை காலமும் சொன்ன நேரத்திற்குப் படப்பிடிப்புக்கு சென்ற நடிகை, அண்மைக்காலமாக படப்பிடிப்புக்கு ஒழுங்காகச் செல்லாமல் இழுத்தடித்து வருகிறாராம். நடிகையின் இந்தத் திடீர் மாற்றத்திற்குக் காரணம் குடும்பத்தில் ஏற்பட்டிருக்கும் பிரச்சனை என்கிறார்கள்.

அந்த இளைய நடிகரும், கவர்ச்சிக் கதாநாயகியும் அரசல் புரசலாக மையல் கொண்டிருப்பதை அறிந்து கொண்டாராம் நடிகரின் தந்தையான முன்னாள் நடிகர் 'கட்டிப்புடி கட்டிப்புடிடா' என்று பாடி வந்த நடிகையை 'வெட்டி விடு வெட்டி விடடா' என்று மகனைக் கண்டித்தாராம் தந்தை.

திடிக்கார குமார இயக்குநரது 'ஆழ்கடல்' படத்தில் நடிக்கும் மூன்றெழுத்துச் கறுப்பு நடிகர் தனக்கு ஜோடியாக 'கறுப்புக் கலரை விரும்பும்' நடிகையைப் போடுமாறு தயாரிப்பாளரிடம் சிபாரசு செய்தாராம். தயாரிப்பாளரும் நடிகையிடம் இதுபற்றிப் பேச, நடிகை தனக்குச் சம்பளமாக 8 லகரம் தருமாறு கேட்டாராம் இது கட்டுப்படியாகாது என்று கூறிவிட்டு, இதில் மூன்று ஒரு பங்கு சம்பளம் கொடுத்து வேறொரு நடிகையை ஒப்பந்தம் செய்து விட்டாராம்.

தமிழில் இருந்து தெலுங்கு தேசம் சென்ற மருத்துவ நடிகர் அண்மையில் அங்கு பிரபல இயக்குநர் ஒருவரைக் கைநீட்டி அடித்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தி விட்டதாம். நடிகரது மனைவியின் தங்கையை நடிகையாக்குகிறேன் என்று கூறி ஆசைகாட்டிய அந்த இயக்குநர் மோசம் செய்து விட்டது தான் இந்த அடிதடிக்கு காரணமாம்.

## மீண்டும் கார்த்திக்-ரம்பா

சுந்தர்.சி. இயக்கத்தில் கார்த்திக்-சிம்ரான் இணைந்து நடிப்பதாக இருந்த 'அழகான நாட்கள்' படத்தில் இப்போது சிம்ரான் நடிக்கவில்லை. இவருக்குப் பதிலாக ரம்பா நடிக்கிறார்.

ஏற்கனவே சுந்தர்.சி. இயக்கத்தில் கார்த்திக் ஜோடியாக 'உள்ளத்தை அள்ளித்தா', 'உனக்காக எல்லாம் உனக்காக' ஆகிய படங்களில் நடித்திருக்கிறார் ரம்பா.

கார்த்திக்-ரம்பா ஜோடியுடன் மும்தாஜ், நிரோஷா, மணிவண்ணன், செந்தில், டெல்லி கணேஷ், குமரி முத்து, சத்யப்பிரியா மற்றும் பலர் இதில் நடிக்கின்றனர்.

திரைக்கதை அமைத்து சுந்தர்.சி. இயக்கும் இப்படத்திற்கு வசனத்தை பூபதிபாண்டியனும் பாடல்களை வைரமுத்துவும் எழுதுகிறார்கள். இசை-தேவா.

## அபிராமி நிபந்தனை

'வானவில்' படத்தில் அறிமுகமான அபிராமி இப்போது பிரபல நடிகர்களுக்கு ஜோடியாகப் பல படங்களில் நடித்து வருகிறார். இவர் சமீபத்தில் தயாரிப்பாளர்களுக்கு ஒரு நிபந்தனை விதித்திருக்கிறார்.

தான் நாயகனோடு கட்டிப்பிடித்து நடனமாடும் போது, இயக்குநர், ஒளிப்பதிவாளர் மற்றும் மிக முக்கியஸ்தர்கள் தவிர அந்த இடத்தில் வேறு எவரும் நிற்கக்கூடாது என்பதுதான் அந்த நிபந்தனை.

முன்பு ஒருமுறை மலையாளப்படமொன்றில் கவர்ச்சி சொட்டச் சொட்ட அபிராமி நடித்த படப் பிடிப்பைப் பார்த்த படப்பிடிப்புக் குழுவைச் சேர்ந்த ஒருவர் உணர்ச்சி வசப்பட்டு, அபிராமிக்குப் 'பிரச்சனை' கொடுத்து விட்டார்.

இந்தமோசமான அனுபவம்தான் இந்த நிபந்தனைக்குக் காரணம் என்கிறார் அபிராமி.

## 'ஆயிரம் பொய் சொல்லி' ஆரம்பம்

'நல்ல காலம் பொறந்தாச்சு', 'பட்ஜெட் பத்மநாபன்' ஆகிய படங்களைத் தொடர்ந்து பிரபு-ரம்யா கிருஷ்ணன் இணைந்து நடிக்கும் 'ஆயிரம் பொய் சொல்லி..' படத்தின் படப்பிடிப்புக்கள் அண்மையில் ஊட்டியில் ஆரம்பமானது.

இதில் பிரபு-ரம்யா ஜோடியுடன் ரமேஷ் கண்ணா, நம்பியார், திவ்யாஸ்ரீ, பாத்திமா பாபு, பாண்டு, அனுமோகன் மற்றும் பலர் நடிக்கின்றனர்.

திரைக்கதை-இயக்கம் பே.சுபாஷ், இசை சபேஷ்-முரளி, (தேவாவின் சகோதரர்கள்), கதை ஆர்.சந்திரசேகர் (பார்த்திபனின் சகோதரர்), வசனம் பூபதிபாண்டியன், ஒளிப்பதிவு இளவரசு



பிரபு-ரோஜா
படம்: மிட்டா மிராசு

படத்தில் தேவயானிக்குப் பதில் மாளவிகா, கமலின் 'பம்மல் கே.சம்பந்தம்' படத்தில் தேவயானிக்குப் பதில் ஸ்நேகா.

தேவயானியின் கணவர் ராஜகுமாரன் இயக்கும் 'ஒரு தேவதை வந்துவிட்டாள்' படத்திலும் வேறு நாயகியைப் போடுமாறு தயாரிப்பாளர் தரப்பில் இருந்து வற்புறுத்தல்.

இதனால்தான் தேவயானி சொந்தப் படத் தயாரிப்பில் இறங்கியிருக்கிறாரோ?

# அனாதையான எம்.ஜி.ஆர்



**த**மிழக முதல்வர்களில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.அவர்களுக்கு எப்போதுமே ஒரு தனியிடமுண்டு. இவர் மறைந்து ஆண்டுகள் 13 ஆகியும் இவரது பெயரால் இவர் சார்ந்த கட்சியினர் வாக்குகளை அள்ளி வருகின்றனர்.

தமிழகத்தில் எம்.ஜி.ஆர். மறைந்த பின் அவரைப் போன்றே வேடமிட்டு தொப்பியும் கண்ணாடியும் அணிவித்து தேர்தல் பிரசாரக்கூட்டங்களில் வலம் வர விடுவார்கள்.

சமீபத்தில் நடந்து முடிந்த தமிழக சட்டமன்றத் தேர்தலின் போது, வேட்பு மனுத்தாக்கல் செய்யச்சென்ற அரசியல் வாதி ஒருவர் எம்.ஜி.ஆர்.போல் வேடமிடப் பட்ட ஒருவரை அழைத்து வந்து எல்லார் கவனத்தையும் தன்பால் இழுக்க வைத் தார்.

பின் தனது காரியம் முடிந்தவுடன் எம்.ஜி.ஆர். போல் வேடமிடப்பட்டிருந்தவரை அம்போவென அப்படியே விட்டு விட்டுச் சென்று விட்டார். அனாதையாக வீதியில் நின்றார் அவர். தான் வீடு திரும்புவதற் காக போவோர் வருவோரிடம் 'லிஃப்ட்' கேட்டுத் திண்டாடினார் எம்.ஜி.ஆர். வேடம் போட்டிருந்த நபர்.

# பேனா நண்பர்கள்



பெயர்: பிபாலமனோன்
வயது: 21
முகவரி:
இலட்சுமணன் தோட்டம்,
தும்பளை, பருத்தித்துறை.
பொழுது போக்கு:
பத்திரிகை.




பெயர்: ரி.திலகேஸ்
வயது: 26
முகவரி:
6ம் வட்டாரம்,
கும்புறுப்பிட்டி,
திருகோணமலை.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்: ஜி.கஸ்தார்
வயது: 19
முகவரி: 87/95,
மகாவத்தை வீதி,
கிரண்ட்பாஸ்.
கொழும்பு -14.
பொழுது போக்கு:
வானொலி

# நில்-கவனி-முன்னேறு

- நானே பெரியவன் நானே சிறந்தவன் என்ற அகந்தையை (Ego) விட்டு விடுங்கள்.
- அர்த்தமில்லாமலும் தேவையில்லாமலும் பின் விளைவு அறியாமலும் பேசிக் கொண்டிருப்பதை (Loose Talks) விடுங்கள்.
- எந்த விஷயத்தையும் பிரச்சனையையும் நாசூக்காக (Diplomacy) கையாளுங்கள்.
- விட்டுக் கொடுத்து (Compromisc) செயற்படுங்கள்.
- சில நேரங்களில் சில சங்கடங்களை சகித்துத்தான் (Tolerance) ஆக வேண்டும் என்று உணருங்கள்.
- நீங்கள் சொன்னதே சரி என்று கடைசி வரை வாதம் (Adamant Argument) செய் யாதீர்கள்.
- குறுகிய மனப்பாண்மையை (Narrow Mindness) விட்டொழியுங்கள்
- உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல், இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும் அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் (Carrging Tales) விடுங்கள்.
- மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து (Superiority Complex) கர்வப்படாதீர்கள்.
- அளவுக்கதிகமாய்-தேவைக்கதிகமாய் ஆசை (Over Expectation) வைக்காதீர்கள்.



# வெற்றி மனிதராக நீங்கள் திகழ!

- எல்லாரிடத்திலும் எல்லா விஷயங்களையும் அவர்களுக்குச் சம்மதம் உண்டோ, இல்லையோ, சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
- கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் நம்பி விடாதீர்கள்.
- அற்ப விஷயங்களைப் பெரிது படுத்தாதீர்கள்.
- உங்கள் கருத்துக்களில் உடும்புப்பிடியாக இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் (Flexibility) கொள்ளுங்கள்.
- மற்றவர்கள் கருத்துக்களை, செயல்களை நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாகப் புரிந்து (Misunderstanding) கொள்ளாதீர்கள்.
- மற்றவர்களுக்கு உரிய பாதையைக் காட்டவும் இனிய இதமான சொற்களைப் பயன்படுத்தவும் (Courtesy) தவறாதீர்கள்.
- புன் முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும் நேரமில்லாதது போல திமிர் மிடுக்குடன் நடந்து கொள்ளாதீர்கள்.
- அவ்வப்போது மற்றவர்களை நேரில் சந்தித்து மனந்திறந்து (Frankness) அளவளாவுங்கள்.
- பிணக்கு ஏற்படும்போது, அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத் திருக்காமல் நீங்களே பேச்சைத் துவக்க (Initiative) முன் வாருங்கள்.
- தேவையான இடங்களில் நன்றியையும் பாராட்டையும் சொல்ல மறக்காதீர்கள். பாராட்டுக்கு மயங்காத மனிதனே இல்லை. அதுவே உங்களுக்கு வெற்றியாக அமையும்.

# என்றும் உன் ஞாபகம்

எனை மறந்து சென்றவனே!
என் நினைவுகள் யாவும் நீயாகிவிட்டாயே
எப்படித்தான் நான் உன்னை மறப்பது...?
பிரிந்துவிட்ட உன் ஞாபகங்கள்
என் இதய அறையிலே நினைவுச் சின்னமாய்
செதுக்கப்பட்டு விட்டன...
உன் இன்ப நினைவுகளை
இறப்பிலும் இழக்க என் மனதுக்கு முடியவில்லை..
***
விழியோடு சிறைப்படுத்திய உன் விம்பம்
நாள்தோறும் என் கண்ணீர் குளிப்பால்
நீராடி உற்சவம் காண்கின்றது...
என் கண்களைத் தாண்டிப்போன
உன் உருவம்-என் நெஞ்சினை நீங்க மறுக்கின்றது...
***
உன் ஞாபகத்தை
என் வாழ்க்கைச் சிறையிலே கைதாக்கி வைத்துள்ளேன்
ஒரு நாளும் மரண தண்டனை விதிக்க மாட்டேன்
அவை ஆயுள் தண்டனை அனுபவிக்கட்டும்...
***
எனை வஞ்சித்துப்போன உன் ஞாபகங்களைகூட
வாழ்க்கையில் நிராகரிக்க முடியாதவளாகி விட்டேன்
என் இறுதிப்பயணம் வரை
இதயச் சாலையில் உன் நினைவு ஊர்த்தி
இரத்தப் பெற்றோலில் உலாப் போகட்டும்
எந்த தடுப்புக்காவலுக்கும் கட்டுப்படாத திமிரோடு!
***
விபத்துக்கு உட்பட்ட உன் உறவால்,
காயமாகிப் போய்விட்ட என் உள்ளம்;
ஆறாத ரணமாக வலிக்கிறது.
ஏழை என் மனதுக்குள் கலந்த
உன் ஞாபகங்களுக்கு பஞ்சம்கூட ஏற்படாது
கனவுகளிலும் களவாடி கவிதை வடிக்கும் அவை...
***
என் கடைசி நிமிடம்கூட
உன் நிமிஷம் தான்
மறந்துவிட்ட உன் அன்புக்காக
(அனுதாப) ஞாபக அஞ்சலி செலுத்தும்
அந்த நிமிடமும் உன் ஞாபகம்தான்
என் நெஞ்சினிலே உயிரோடு இருக்கும்.

டி.ராதா, வெலிப்பென்னை.

# என்னை மீட்டுத் தா?

எனக்குள் இருந்த என்னையே
ஆட்டிப்படைக்கும் என்னவனே!!!
நான் சுவாசிக்கும் 'காற்றும்' நீ!
என் வார்த்தைகளின் 'சத்தமும்' நீ!
என் பின்னால் தாங்கி வரும்
நிழலும் நீ.!
விரல்களை மடக்கும் போது வரும்
சின்னச் சத்தமும் நீ!
கண்களில் நான் காணும்
வெளிச்சமும் நீ!
என் கருவிழிக்குள் புகுந்து
விளையாடும் ஜீவனும் நீ!
உறங்கும் போது கனவில்
வரும் காட்சியும் நீ!
சிரிக்கும்போது சிரிப்பில்
கலந்த சந்தோஷமும் நீ!
கவிதை எழுதும்போது எழுத வரும்
வார்த்தைகளும் நீ.
எனக்குள் இருந்த என்னையே
ஆட்டிப்படைக்கும் உயிரும் நீ.
எல்லாமே நீயானால்
நான் நானாவது எப்போது?
மீட்டுத்தா என்னை எனக்கு இப்போது.!


ச.கிருஷ்ணப்பிரியா, கொட்டகலை.

# விடியலைத் தேடி

நாலாபக்கமும்
கடனால் சூழ்ந்துள்ள
இலங்கைத் தீவில்-இவன்
ஒருபொதுமகன்!
*
மறந்து விட்டீர்களா
அன்று..
நாளை விதைகளை
நாங்களே விதைப்போம்
என்றும்-மானிடம்
தழைக்க மாண்பாய்
உழைப்போமென்றும்
மார்படித்துச் சொல்லியதை...?
*
இங்கே நாளைவரும்
நாளைவரும் என்றெண்ணி
நரைத்து போய்விட்டது!
எப்போது வரும்
இந்தச் சமாதானம்..?
*
பழைய பல்லவியை
பாடிப்பாடி சகித்துப்
போய்விட்டதந்தோ
தங்கள் இனத்தை
அவமதிப்பதாய் நினைத்து
புறாக்களும் தலைகுனிந்து
ஒதுங்கிப் போய் விட்டனவே!
*
துப்பாக்கி ரவைகள்
சுவரில் வந்து விழும் போது
கண்களை மூடிக் கொண்டு
கனாக்கள் காண்பது போல்...
*
வெடிச் சத்தங்கள் மட்டும்
இசைவான காதுகளை
இறுக்கிவிட்டபோது
நாம் போடும்
சமாதானக் கூச்சல்
எப்படி விழும்...?
*
ஒரு விடியலை எண்ணி
வீர நடைபோட்டோம்
சுதந்திரமில்லா வாழ்க்கைபோல்
சுருண்டு கிடக்கிறோம்
*
காத்திருந்து காத்திருந்து
கசந்து போன எங்கள் வாழ்வும்
நலிந்து போவது தானா?
நாம் கண்ட மிச்சம்..?

ஒலிவிலூர் ஸாலிஹ்.

# தேன் கிண்ணம்



# கடைசி ஜென்மம்

என்னவளே!
உனக்காக பலர் வரைந்த
ஆயிரம் ஆயிரம் கவிதைகள்
மழையில் நனைந்து
மண்ணில் புதைந்து
மக்கிப் போய்விடலாம்;
••
ஆனால்
என் இதயமென்ற ஏட்டினிலே
உனக்காக நான் வரைந்த
காதல் என்ற புதுக்கவிதை
என்றென்றும் அழியாது அழியாது
ஏன் தெரியுமா?
••
அது என்
இதயத்தில் இணைந்த துடிப்பு
சுவாசத்தில் உறைந்த காற்று
உடலுக்கு உரமூட்டும் உயிர்.
ஆம் அன்பே!
இன்னும் ஆயிரம் ஆயிரம்
ஜென்மங்கள் எடுத்தாலும்
என் காதலுக்கு இதுவே
கடைசி ஜென்மம்.

அ.டெல்சன்-விடத்தல்தீவு-பேசாலை.

# தாய்

தாயானவள் தங்கத்திலும்
தரம் கூடியவள்!
தனை மறந்து
உனைச் சுமந்தவள்!
அது அவள் மறுபிறப்பென
தெரிந்தும்-மனம்
வருந்தாது-உனக்காக
காத்திருந்தவள்!
மழலையாய் நீ தவள
மார்பினில் தாலாட்டி
ரத்தத்தை பாலாக்கி
இரவுகளை பகலாக்கி
உனைக் கரை சேர்க்கும் வரை
உயர வளர்த்தவள்-அவள்
இவளின் மகிமையை-நீ
உணர வேண்டுமானால்
நீயும் தாயாகிப் பார்
அதன் சுகமும்
சுமையும் உனக்குத்
தெரியும்!

ஜே.லக்கி, பெரியகல்லாறு.

# இந்தவாரம் உங்கள் பலன்

20.05.2001 தொடங்கி 26.05.2001வரை

## கிரக நிலை

| | |
|---|---|
| சூரியன் | - இடபம், |
| சந்திரன் | - மீனம், மேடம், இடபம், |
| செவ்வாய் | - தனு, |
| புதன் | - இடபம், |
| வியாழன் | - இடபம், |
| வெள்ளி | - மீனம் |
| சனி | - இடபம், |
| இராகு | - மிதுனம் |
| கேது | - தனு, |

**மேடம்:**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)
தொழில் விடயங்களில் அவதானம் தேவை. பணவரவில் தடைகள் ஏற்பட்டு வார இறுதியில் நிவர்த்தியாகும். உத்தியோகத்தில் உள்ளோர் மேலதிகாரிகளுடன் இணங்கி நடப்பது நல்லது. மாணவர்கள் கல்வியில் ஊக்கம் கொள்வர். விவசாயிகள் வியாபாரிகள் வார இறுதியில் இலாபம் அடைவர்.
அதிஷ்ட நாள்: புதன்,
அதிஷ்ட இலக்கம்: 05.

**இடபம்:**
(கார்த்திகை பின் முக்கால், ரோகினி, மிருகசீரிடத்து முன்னரை)
தொழில் நிலையில் முன்னேற்றமும், வருவாயும் சிறந்து விளங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உத்தியோகத்தில் இருந்துவந்த தொல்லைகள் மறையும். மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபமடைவர்.
அதிஷ்ட நாள் : வியாழன்.
அதிஷ்ட இலக்கம் : 04.

**மிதுனம்:**
(மிருக சீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)
குடும்பத்தில் மகிழ்ச்சியும், சந்தோஷமும் நிலவும், புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வுகளைத் தரும். மாணவர்களுக்கு கல்வியில் இருந்து வந்த மந்த நிலை நீங்கும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஷ்ட நாள் : திங்கள்.
அதிஷ்ட இலக்கம் : 03.

**கர்க்கடகம்:**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்)
குடும்பத்தில் இருந்து வந்த கஷ்டங்கள் நீங்கி சந்தோஷம் நிலவும். பணவரவு சிறந்து விளங்கும். உத்தியோகத்தில் உள்ளோர் இடமாற்றங்களைப் பெறுவர். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சி கிடைக்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஷ்ட நாள் : வெள்ளி.
அதிஷ்ட இலக்கம் : 06.

**சிம்மம்:**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)
செய்தொழில் விருத்தியும், குடும்ப நன்மையும் உண்டாகும். பணவரவில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். உத்தியோகத்தில் உள்ளோர் எதிர்பார்த்த நன்மைகள் வார இறுதியில் வந்தடையும். மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் குறைவாக பெறுவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 07.

**கன்னி:**
(உத்தரத்து பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)
தொழிலில் ஏற்பட்டிருந்த பிரச்சனைகள் தீரும். பணவருவாய், சிறந்து விளங்கும். உத்தியோகத்தில் உள்ளோர் பொறுமையுடன் நடந்து கொள்ளவும், மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சி கிடைக்கும். விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளை, குறைத்துக் கொள்வது நல்லது.
அதிஷ்ட நாள் : திங்கள்.
அதிஷ்ட இலக்கம் : 02.

## சோதிட மாமணி தில்லை

**துலாம்:**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்)
எதிர்பார்த்த கருமங்களில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். வெளியிட பிரயாணங்களில் அவதானத்துடன் நடந்து கொள்ளவும். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சியுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் அடைவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 04.

**விருட்சிகம்:**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)
தொழிலிலும், குடும்பத்திலும், முன்னேற்றம் உண்டாகும். பணவரவு சிறந்து விளங்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் எதிர்பார்த்த இலாபம் வார இறுதியில் கிடைக்கும்.
அதிஷ்ட நாள் : திங்கள்.
அதிஷ்ட இலக்கம் : 07.

**தனு:**
(மூலம், பூராடம், உத்திராடத்து முதற்கால்)
தொழிலில் சிறிது பிரச்சனைகள் தென்படும். பணவரவு தாமதமாகும். வார இறுதியில் இவைகள் அனைத்தும் நிவர்த்தியாகி சிறந்து விளங்கும். மாணவர்களுக்கு கல்வி உயர்ச்சியுண்டு. விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபமடைவர்.
அதிஷ்ட நாள் : திங்கள்.
அதிஷ்ட இலக்கம் : 04.

**மகரம்:**
(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)
தொழிலிலும், குடும்பத்திலும், சந்தோஷமும், மகிழ்ச்சியும் ஏற்படும். பணக்கஷ்டம் தீரும் உத்தியோகத்தில் உள்ளோர் உயர்ச்சிகளுக்கு ஆளாகுவர். மாணவர்கள், கல்வியில் சிறப்படைவர். விவசாயிகள், வியாபாரிகள் எதிர் பார்த்த இலாபம் கிடைக்கும்.
அதிஷ்டநாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 05.


**கும்பம்:**
(அவிட்டத்து பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முன்னால்)
தொழில் உயர்ச்சியும், பணவரவும் சிறந்து விளங்கும். உத்தியோகத்தில் இருந்து வந்த தொல்லைகள் மறையும். மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் வார இறுதியில் கூடிய இலாமடைவர்.
அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 06.

**மீனம்:**
(பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி ரேவதி)
குடும்பத்தில் மன மகிழ்ச்சியும், செய்தொழில் விருத்தியும் உண்டாகும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புக்கள் தோன்றும். மாணவர்களுக்கு கல்வியில் இருந்து வந்த தடைகள் நீங்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஷ்ட நாள் : செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம் : 01.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## அழகும் ஆரோக்கியமும் வேண்டுமா?



**பெ**ண்ணாகப் பிறந்தாலே அழகாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுவது இயல்பு. மழலையில் இருந்து திருமணம் முடிக்கும் வரை பெண்களின் மேனி அழகும் உடல் அழகும் நன்றாக இருக்கும். ஆனால் திருமணமாகிக் குழந்தை பெற்றபின் வந்து விடும் ஊதல் உடம்பு.

ஒரு சிலர் இந்த ஊதலுக்கு விதிவிலக்காக இருக்கிறார்கள். இப்போதெல்லாம் அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தை பெற்றுக் கொள்வதால் அடிவயிறு-தொடை பெருத்துப் போய்விடுகிறது.

இதை எளிய உடற்பயிற்சிகள் மூலம் இல்லாமலாக்கிக் கொள்ளலாம்.

★ தரையில் மல்லாக்காகப் படுத்துக் கொண்டு வலது காலை நேராகத் தூக்கவும். 30 செக்கன்கள் அப்படியே வைத்திருக்கவும். பின்னர் மெதுவாகக் கீழே இறக்கவும்.

★ அடுத்தது இடது கால். மேற்சொன்னது போன்று 10 தடவைகள் செய்யவும். நாளாக நாளாக 15, 20, 25 என்று அதிகரிக்கவும்.

★ சைக்கிளில் பெடல் செய்யலாம். இதுவும் தொடக்க நாட்களில் 100 பெடல்கள் சுற்றலாம். நாளாக ஆக 1000 பெடல்கள் வரைச் செய்யவும்.

★ சுவரில் இரு கைகளையும் நன்றாகப் பதித்து வைக்கவும். உடலைச் சுவரில் இருந்து அதிக தூரம் விலக்கி, வலது காலைப் பின்புறமாக நீட்டவும். நீட்டிய படியே முடிந்தவரைக் காலைத் தூக்கவும், ஆனால் முழங்கால் மடங்கக் கூடாது.

★ இதே போல் இடது காலையும் செய்ய வேண்டும். இப்படிச் செய்யும் போது, உள் தொடையில் தசைகள் இழுப்பது தெரியும். நாளடைவில் சதைகுறைவதைக் கண்கூடாகக் காணலாம்.

★ காலைப் பின்புறமாக மடக்க முடியாதவர்கள், பாதம் நன்றாக உடலில் படும் வரை மடக்கிப் பயிற்சி செய்யலாம். இது தொடைக்கு உறுதி தரும்.

★ இப்பயிற்சிகளைத் தொடர்ந்து செய்தால், கால் உறுதி பெறும்; தொடை அழகும் பெறும்.

★ தொடைகளைச்சீராக வைத்துக் கொள்ள வாழ்நாள் முழுவதும் உடற்பயிற்சி செய்வது நல்லது.

## தலையைக் கவனியுங்கள்



✪ கருமையான முடியைப் பெறத் தேங்காய்ப் பால் வைத்துக் குளியுங்கள். முடி கருகருவென்றிருக்கும்.

✪ வெண்மிளகுடன் பால் சேர்த்து, அரைத்துத் தலையில் தேய்த்துக் குளித்தால் பொடுகு இருக்காது.

✪ தொடர்ந்து 3, 4 நாட்கள் பசளைக்கீரையை அரைத்துத் தேய்த்துக் குளித்தாலும் பொடுகு போய்விடும்.

✪ பொடுகை அறவே இல்லாதொழிக்க அரைகப் தேங்காய்ப் பாலுடன் 4 தேக்கரண்டி எலுமிச்சம் பழச்சாறு சேர்த்துத் தலையில் தேய்த்துக் குளிக்கலாம்.

✪ மருதோன்றிப் பூக்களைத் தலையில் வைத்துக் கொண்டால் பேன் தொல்லை நீங்கும்.

✪ நெல்லிக்காய்ச் சாறு, நல்லெண்ணெய் ஆகிய இரண்டையும் சம அளவு பகிர்ந்து காய்ச்சி வடிகட்டி தலையில் தேய்த்துக் குளித்து வந்தால் இளநரை மாயமாகி விடும்.

✪ முட்டை மஞ்சள் கருவை எடுத்துத் தலைக்கு வைத்து முழுகி வந்தால் முடி வறட்சி நீங்கும்.

✪ வெந்தயத்தை அரைத்துத் தலையில் நன்கு தேய்த்துச் சிறிது நேரம் ஊறிய பின் குளித்தால் முடி உதிராது.

✪ ஈரமுடியை வாரவும் கூடாது; சிக்கெடுப்பதும் கூடாது.

✪ வினாகிரியை எலுமிச்சம்பழச்சாறுடன் கலந்து தலைக்குத் தேய்த்துக் குளிக்க முடி பளபளப்புடன் இருக்கும்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்



மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** JM

பெயர்:..........................
முகவரி:..........................
..........................
தொழில்:..........................
கையொப்பம்:..........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 26-05-2001
அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கொலை ராணி

-மாதவி-

**அது** 1908ஆம் வருட ஏப்ரல் மாதத்தின் ஒரு விடியற் காலை. இண்டியானாவில் உள்ள மலை பிரதேசம் லாபோர்ட். அந்தப் பகுதி மக்களை இடியாகத் தாக்கியது அந்தச் செய்தி.

திருமதி. பெல்லி கன்னெஸின் பண்ணை வீடு தீப்பிடித்ததில் பெல்லியும் அவரது மூன்று குழந்தைகளும் தீயில் கருகி இறந்துவிட்டார்கள் என்பதுதான் அது.

அந்தப் பகுதி அன்று முழுவதும் பரபரப்பானது. எங்கும் பெல்லியைப் பற்றியே பேச்சு! அது கொலையா? தீ விபத்தா? மக்களுக்கு விடைதெரியாத கேள்வி இது. பெல்லி விதவை, அழகானவர். இனிமையாக பேசும் சுபாவமுடையவர். அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்களுடன் சுமுகமாக பழகி வந்தவர்.

போலீஸ் இன்வெஸ்டிகேஷனில் இறங்கியது. சம்பவ தினத்தன்று சந்தேகப்படும் படியாரும் பெல்லின் பண்ணைக்கு வந்து போனதாகத் தெரியவில்லை. வேறு தடயங்களும் நஹி! அந்த சமயத்தில்தான் போலிசுக்கு சர்க்கரைக் கட்டியாய் அந்தத் தகவல்! பெல்லியின் பண்ணையில் பல வருடங்களாக வேலைப் பார்த்து வந்த லாம்பர் என்ற தொழிலாளி சம்பவத்துக்கு இரண்டு நாட்களுக்கு முன் தலைமறைவாகி இருக்கிறான் என்பது. லாம்பர் பெல்லிக்கு விசுவாசமானவன். எனினும் சில நாட்களாக உள்ளூர் பாரில் பீர் அருந்திவிட்டு, பெல்லியை வாய்க்கு வந்தபடி 'கச்சா முச்சா' வென்று திட்டி வந்திருக்கிறான் என்பதும் தெரிய வந்தது.

இப்போது போலிசாரின் சந்தேகப் பார்வை லாம்பர் மீது. உடனடியாக லாம்பரின் கைகளில் 'காப்புவிழா' நடத்தியது போலிஸ்!

விசாரணையில், பெல்லியும் அவளது குழந்தைகளும் தூங்கிக் கொண்டிருந்தபோது, வீட்டை கொளுத்தி, அவர்களை கொன்ற குற்றத்தை ஒப்புக் கொண்டவன் லாம்பர்.

"ஏன் இந்தக் கொலைகளை செய்தாய்?" அந்த போலிஸ் உயர் அதிகாரி லாம்பரை அதட்டினார்.

"நான் அவளை கொன்றிருக்காவிட்டால் அவள் என்னைக் கொன்றிருப்பாள். எனக்கு அவளைப் பற்றி தெரிந்திருந்தது." என்றான் லாம்பர், அலட்டிக் கொள்ளாமல்.

"நிறைய தெரிந்திருந்ததா? என்ன சொல்கிறாய்?" அதிகாரியின் குரல் இன்னும் அதிகப்படியான அதட்டலுடன்.

"அந்த பொம்பளை ஒரு கொலைகாரச் சக்கரவர்த்தினி. முயல்களை கொல்வது போல பலரை கொன்றுத் தீர்த்திருக்கிறாள். படுபாவி-அவளுக்குக் கொலை என்பது அல்வா சாப்பிடுவது மாதிரி!" லாம்பர் கத்தினான். இதை கூறும்போது அவனுக்கு வியர்த்து விட்டிருந்தது.

போலிஸ் அதிகாரி அதிர்ந்து போனார். "யாரைக் கொன்றாள்..? ஏன்...?".

"மயக்கமருந்து கொடுத்து-மயங்கியவுடன் கோடரியால் ஒரே போடாகப் போட்டுக் கொன்று, பிரேதத்தை தன் பண்ணை நிலத்தில் புதைத்துவிடுவாள்..."

அடுத்த அரைமணி நேரத்தில்.. பெல்லி கன்னெஸின் பண்ணை அங்குலம் அங்குலமாகத் தோண்டப்பட்டது. தோண்டிய இடமெல்லாம் எலும்புக் கூடுகள்! மண்டை ஓடுகள்! இதைக் கண்ட மக்கள் பீதியில் அலறினார்கள்.

ஆண், பெண் குழந்தைகள் என்று மொத்தமாக அறுபது எலும்புக் கூடுகள்! வீட்டின் சிமெண்ட் தரையை உடைத்துப் பார்த்தபோது அங்கும் சில எலும்புக் கூடுகள்!

லாபோர்ட் அதிர்ச்சியில் ஸ்தம்பித்தது. போலிஸின் விசாரணை இப்போது பெல்லி செய்த கொலைகளின் மீது... தீவிர விசாரணை.. இறுதியாகக் கிடைத்த அதிர்ச்சி தரும் தகவல்கள் போலிசையே கதி கலங்கடித்தன. மக்கள் வெளியே வர பயந்தனர். பலர் ஊரை காலி பண்ணிக்கொண்டு வேறு இடங்களுக்குக் குடி போனார்கள்.

நோர்வே நாட்டைச் சேர்ந்த பெல்லி டீன் ஏஜ்ஜில் அமெரிக்கா வந்தாள். ஆல் பர்ட் சொரன்சன் என்ற ஸ்வீடன் நாட்டு வாலிபனைக் காதலித்து மணந்தாள். கணவனின் பெயரில் இன்ஷுரன்ஸ் பாலிசி ஒன்றை எடுத்து யாருக்கும் சந்தேகம் வராதபடி விஷம் கொடுத்து அவனைத் தீர்த்துக்கட்டினாள். அவள் செய்த முதல் கொலை இது. இன்ஷுரன்ஸ் பணத்தில் இண்டியானாவில் ஒரு பண்ணையை வாங்கி குடிவந்தாள். ஜோ கன்னெஸ் என்ற பணக்காரனை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டாள். அப்போது ஹோச் என்ற ஒரு கொலைக்காரனுடன் அவளுக்குத் தொடர்பு ஏற்பட்டது.

ஹோச் கொலை செய்தது பெண்களை. செய்தித் தாள்களில் 'மணமகள் தேவை' என்று விளம்பரம் தருவது. அந்த பெண்கள் நேரில் வரும்போது இனிக்க இனிக்கப் பேசி, அவர்களது பணம், நகைகளை பிடுங்கிக் கொண்டபின் அவர்களை கொன்றுவிடுவது. இதுதான் ஹோச்சின் கொலை டெக்னிக். பெல்லிக்கும், அவனுக்கும் தொடர்பு ஏற்பட்டிருக்கிறது. சில பெண்களை ஹோச் பெல்லியின் பண்ணைக்கு அனுப்பியிருக்கிறான். அந்த பெண்களை பெல்லி சொர்க்கத்துக்கு அனுப்பி வைத்திருக்கிறாள்.

ஒரு நாள் பெல்லியின் கணவன் ஜோவுக்கு இந்த விஷயங்கள் தெரிய வந்தன. அங்கிருந்தால் தன்னையும் பெல்லி தீர்த்து விடுவாள் என்ற பயத்தில் தப்பி ஓட முயன்றான். விஷயம் தெரிந்த பெல்லி ஜோவை எமலோகத்துக்கு விசா கொடுத்து அனுப்பி வைத்தாள். பிறகு, காஷுவலாக தொடர்ந்து தன் அலுவலில் ஈடுபட்டாள். பெல்லி 'ஹோச்'சுக்கு உதவியாக இன்னும் சில கொலைகள் செய்தாள். இந்த சமயத்தில் போலிசார் ஹோச்சை கைது செய்தனர். அவன் செய்த கொலைகள் நிரூபிக்கப்பட்டு, அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அதன்பிறகு ஒண்டியாகவே தனது 'தொழிலை' செய்ய தீர்மானித்தாள் பெல்லி.

இவளும் 'ஹோச்'சின் 'டெக்னிக்'கையே பயன்படுத்தினாள். அவன் பத்திரிகைகளில் 'மனைவி தேவை' விளம்பரம் கொடுத்து தீர்த்துக் கட்டினான். பெல்லியோ-'கணவன் தேவை' என்று விளம்பரம் தந்தாள்.

"இண்டியானாவில், லாபோர்ட் மாகாணத்திலுள்ள, பெரிய பண்ணை வீட்டுக்கு சொந்தக்காரியான, அழகான, விதவை பெண்ணுக்கு, நல்ல பணம் படைத்த, அவளது பண்ணையில் முதலீடு செய்யக்கூடிய, பண்பாளரான கணவன் தேவை. கடிதத் தொடர்புகள் தேவையில்லை. விருப்பமானவர்கள் நேரில் வரவும்."

அழகான விதவை.. கூடவே, பண்ணை வீட்டுக்குச் சொந்தக்காரி.. கேட்கவா வேண்டும்? நிறைய பேர் நேரில் வந்தனர். அவர்களில் கொழுத்த பணக்காரர்களை 'பிராக்கெட்' போட்டாள் பெல்லி! ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நாள் குறித்தாள். அந்த தேதியில் வந்தால்தான் பண்ணையைச் சுற்றிப் பார்க்கலாம் என்று சொன்னாள்.

ஏகப்பட்ட கனவுகளுடன், வந்த வருங்காலக் கணவர்களை பலமாக வரவேற்று உபசரித்து, விருந்தளித்து, கையிலிருப்பதை பிடுங்கிக் கொண்டபின், விருந்தினர் அறைக்கு அழைத்துச் செல்வாள். நிஜத்தில் அது மரண அறைதான்! அந்த அறையின் தேக்குமரக் கதவுகளின் தாழ்கள் இரும்பு இதயம் படைத்தவை. திறக்க முடியாதவை. அறையின் இரட்டைச் சுவர்களுக்கு நடுவில் இருந்த இடைவெளியில் மரத்தூள்கள் அடைக்கப்பட்டு, உள்ளிருந்து துளி சத்தமும் வெளியே கேட்க முடியாதபடி செய்யப்பட்டிருந்தது. முதல் நடவடிக்கை பழரசத்தில் மயக்க மருந்து. அடுத்த நடவடிக்கை பரசுராமத்தனமாய் கோடரி வெட்டு!

அவள் தேர்ந்தெடுத்த நபர்களில் யாராவது குறித்த நாளில் வராமல் போனால், உடனே உஷாராகி, அன்பொழுக அந்த நபருக்கு கடிதம் எழுதுவாள். 1907ல் ஆண்ட்ரு ஹெஜெரின் என்பவருக்கு பெல்லி எழுதிய கடிதத்தின் காதல் ரசம் சொட்டும் பகுதிகள்,

உலகத்திலேயே மிக சிறந்த நண்பருக்கு, எனக்கு தெரியும். இனி நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் என்னிடம் வந்து என்னுடையவராக இருக்க வேண்டியது என்றுதான்.

எந்த ஒரு அரசனும் அடைய முடியாத பேரின்பத்தை நீங்கள் இங்கு வந்தால் அடையலாம். எந்த ஒரு அரசியும் அடைய முடியாத சந்தோஷத்தை நான் அடைவேன். என்னுடைய பண்ணையை நீங்கள் மிகவும் விரும்புவீர்கள், அன்பே. இந்த லாபோர்டில் என் பண்ணைக்கு ஈடாக இன்னொரு பண்ணையைப் பார்க்க முடியாது. அத்தனை அழகானது அது. உங்கள் பெயரை உச்சரிக்கும் போதெல்லாம் என் இதயம் பரவசத்தால் துடிக்கிறது. ஆண்ட்ரு, நான் உங்களை நேசிக்கிறேன்...

அந்தக் கடிதத்தை இப்படி முடித்திருந்தாள் பெல்லி. "இந்தப் பண்ணையில் தாங்கள் போடப் போகிற முதலீடான மூவாயிரம் டாலரை ஞாபகமாக கொண்டு வாருங்கள். அப்படிக் கொண்டு வரும்போது பாதுகாப்புக் கருதி, பணத்தை உங்கள் சட்டையின் உட்பக்கம் வைத்து தைத்து எடுத்து வாருங்கள்".



இந்தக் கடிதத்துக்குப் பிறகு, ஆண்ட்ரு ஹெஜெரின் பெல்லியைச் சந்தித்தார். பெல்லியின் வீட்டுக்கருகில் வசித்தவர்கள் ஆண்ட்ரு, பெல்லியுடன் சேர்ந்து வருவதை பார்த்திருக்கிறார்கள். ஆனால், பிறகு அவர் திரும்பிப் போகவில்லை.

தன்னிடம் உள்ள பணம் போதவில்லை என்ற எண்ணம் வரும் போதெல்லாம் கொலைகளை செய்யத் தயங்கவில்லை பெல்லி. சமயங்களில் குடும்பங்களையே கூட காலி செய்திருக்கிறாள்.

1906ஆம் வருட கிறிஸ்துமஸ் தினத்தன்று, தான் சர்ச்சில் பார்த்த இரண்டு அழகான பெண்களை தன் வீட்டுக்கு விருந்துக்கு அழைத்தாள் பெல்லி. அப்படி வரும்போது கட்டாயம் அவர்களது கணவன்மார்களையும் அழைத்து வரவேண்டும் என்றும் அதன்மூலம் தனிமையில் வாழும் ஒரு விதவையின் வீட்டில் சிறிது குதூகலத்தை ஏற்படுத்தலாம் என்றும் உருக்கமாக வேண்டினாள். அந்தப் பெண்களும் மகிழ்ச்சியுடன் விலையுயர்ந்த ஆடைகளை அணிந்துக் கொண்டு கணவன்மார்களோடு வந்திறங்கினர். அதன்பிறகு...

போலிசார் தோண்டியெடுத்த எலும்புக் கூடுகளில் இந்த நால்வரின் எலும்புக் கூடுகளை எது என்று அடையாளம் கண்டு கொள்ளவே முடியவில்லை.

மிகச் சரியாக எவ்வளவு பேரை அவள் கொன்றிருக்கிறாள் என்ற விவரம் தெரியவில்லை. என்றாலும் லாம்பர் சொன்ன விவரங்களையும் தோண்டி எடுத்த எலும்புக் கூடுகளையும் வைத்து பார்க்கும்போது கிட்டத்தட்ட நூற்றி இருபது பேர்களை அவள் கொன்றிருக்கிறாள் என்பது தெரிய வந்தது.

இவ்வளவு பேர் மறைந்தும், யாரும் பெல்லியை சந்தேகப்படாததுதான் இதில் ஆச்சரியமான விஷயம். அழகும் இனிமையாகப் பேசும் சுபாவமும் உடைய, பண்ணையை நிர்வகிக்கும் திறமைப் படைத்த மூன்று குழந்தைகளின் தாயான ஒரு பெண்மணியை யாராவது சந்தேகப் படுவார்களா என்ன? எல்லா பயங்கரங்களும் அழகில்தான் ஆரம்பிக்கின்றன போலும்!

(முற்றும்)

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## பத்தனை வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | திருமதி .பாஸ்கரன்<br>இல. 6, ஜயசிரி புர, பத்தனை. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



## பாப்பா முரசு சிறுகதை

# நெருப்பு எங்கே?

ஒரு முறை முல்லா வெளியூருக்குச் சென்றார். வழியில் இரவாகிவிட்டது. எனவே, அருகில் இருந்த சத்திரம் ஒன்றில் தங்கினார்.

முல்லாவின் புகழ் பல இடங்களில் பரவியிருந்ததால், அந்தச் சத்திரத்தில் தங்கியிருந்த பயணிகள் அனைவரும் முல்லாவைப் புகழ்ந்தனர்.

"உங்களை நான் நேரில் பார்ப்பேன் என்று கனவிலும் நினைக்கவில்லை," என்றார் ஒருவர்.

"உங்களைக் கண்டது எங்கள் பாக்கியம்," என்றார் இன்னொருவர். இப்படியாக மக்கள் கூட்டம் முல்லாவை சூழ்ந்துக் கொண்டு புகழ்ந்தனர்.

இதைக் கண்ட சத்திரத்தின் காவலாளி, 'புகழ்பெற்ற மனிதர் போலும்' என்று நினைத்து, முல்லாவை நன்றாக கவனித்துக் கொண்டான்.

"ஐயா! தாங்கள் படுத்துக்கொள்ளுங்கள். ஏதாவது தேவைப்பட்டால், நான் முன்னறையில் இருக்கிறேன். ஒரு குரல் கொடுத்தால் போதும். ஓடி வந்து விடுவேன்," என்றான் காவலாளி.

புது இடம் என்பதால் தூக்கம் வரவில்லை. புரண்டு புரண்டு படுத்த முல்லா, நீண்ட நேரம் விழித்திருந்தார். திடீரென்று தண்ணீர் தாகம் எடுத்தது. தண்ணீர் குடித்தால்தான் தூக்கம் வரும் என்று நினைத்தார். எனவே, காவலாளியை கூப்பிட்டார். வரவே இல்லை. பல முறை குரல் கொடுத்தார். ஒருவரும் வரவில்லை.



காவலாளியின் அறைக்குச் சென்று அதன்முன் நின்று கொண்டு குரல் கொடுத்தார்.

"காவலாளியே.. எனக்கு தண்ணீர் வேண்டும். கொண்டு வா," என்றார்.


ஒருவரும் வரவில்லை. கூப்பிட்டு கூப்பிட்டு முல்லாவுக்கு தொண்டை வறண்டது. "ஐயோ நெருப்பு! நெருப்பு!" என்று கத்தினார் முல்லா.

அவ்வளவுதான் காவலாளி முதற்கொண்டு அங்கிருந்த அனைவரும் அலறியடித்துக் கொண்டு முல்லாவிடம் வந்தனர்.

"எங்கே நெருப்பு?" என்றான் காவலாளி.

கொஞ்சம்கூட அலட்டிக் கொள்ளாமல் தன் தொண்டையை காண்பித்து, "இங்கேதான் நெருப்பு: இதை அணைப்பதற்கு ஒரு குவளை தண்ணீர் கொண்டு வா," என்றார் முல்லா.

காவலாளி தலைகுனிந்தபடியே சென்றான். மற்றவர்கள் தங்கள் தூக்கம் கலைந்தாலும், முல்லாவின் புத்திசாலித்தனத்தை எண்ணி மகிழ்ந்தனர்.



புதிய மரத்தில் தனது வசிப்பிடத்தை அமைத்துக் கொண்ட குருவிக்கு, அதை சென்றடைய வழி தெரியவில்லை. நீங்கள் அதற்கு வழிகாட்டி உதவுங்கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **26.05.2001.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **395**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 393

**பரிசுக்குரியவர்:**
ச.மயூரன்,
த.ம.மகாவித்தியாலயம், வவுனியா.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| செரூபி லாவண்யா, சாந்தகிளேயர் பாடசாலை, வெள்ளவத்தை. | பாத்திமா றுஸ்கா நளீர், மூதூர் மத்திய கல்லூரி, மூதூர். |
| ஞா.கபிலாஷ், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, கொழும்பு-04. | எம்.எஸ்.ரமீஷா, தமிழ் மகா வித்தியாலயம், பசறை. |
| ஞா.சயந்தனா, விபுலானந்தா மகா வித்தியாலயம், வவுனியா. | எஸ்.கவிஷாலினி, இந்து தேசிய கல்லூரி, புஸ்ஸல்லாவ. |
| எம்.என்.பஹிமா, ஆமினா மகளிர் பாடசாலை, மாத்தளை. | பாத்திமா நஸ்ஹா, அல்.புர்கான் மு.ம.வி, கலேவெல. |
| எம்.ஷிராஜ், மதீனா தேசிய கல்லூரி, கண்டி. | செல்வம் திலீபன், அதிகாரவத்தை த.வி, உடப்புசல்லாவ. |

## உயிரினங்களின் ஆயுட்காலம்

| பெயர் | | ஆண்டுகள் |
|---|---|---|
| ஆடு | - | 17 |
| பசு | - | 18 |
| நரி | - | 8 |
| எருமை | - | 20 |
| குதிரை | - | 27 |
| எலி | - | 04 |
| சிங்கம் | - | 21 |
| புலி | - | 19 |
| நாய் | - | 16 |
| திமிங்கிலம் | - | 37 |
| யானை | - | 47 |
| காண்டாமிருகம் | - | 27 |
| முயல் | - | 05 |
| கழுதை | - | 24 |
| மான் | - | 17 |
| ஒட்டகம் | - | 20 |
| பூனை | - | 15 |

தொகுப்பு: மு.சக்திலேந்திரன்-கொழும்பு-12.

## ஒருவரிச் செய்திகள்

- ஆறுகளே இல்லாத நாடு-சவுதி அரேபியா.
- உலகின் அகலமான பாலம்-'சிட்னி' ஹார்பர்.
- டில்லியின் பழைய பெயர்-ஹாஜகானாபாத்.
- மிக உயரத்தில் பறக்கும் பறவை-டெர்ன்.
- உலகில் செப்பு அதிகமாக கிடைக்கும் இடம்-சிலி.
- சீன அரிச்சுவடி 214 எழுத்துக்களைக் கொண்டது.
- கோழிகளுக்கு 8000 சிறகுகளுக்கு மேல் வளரும்.
- மொர்குரி விளக்கு 1912ல் கண்டுபிடிக்கப் பட்டது.
- பிலிப்பைன்ஸ் 7000 தீவுகளைக் கொண்டது.
- இளகும் தன்மை அதிகம் கொண்ட உலோகம் தங்கம்தான்.

தொகுப்பு: என்.எம்.நிஸாம்-காத்தான்குடி-02.

## விடுகதைகளும் விடைகளும்

01. பாடல் இல்லாத ஆட்டம், பணம் பறிக்கும் ஆட்டம் அது என்ன?
02. சொன்னதை கேட்கும், ஆனால் திருப்பிச் சொல்லாது அது என்ன?
03. தன்னை அழித்து பிறருக்குதவுவான். அவன் யார்?
04. மேலே பறப்பவனுக்கு கீழே படிவாளம் அவன் யார்?
05. உயிரில்லை ஆனால் ஓய்வின்றி ஓடிக் கொண்டிருப்பான் அவன் யார்?

**விடைகள்**
01. சூதாட்டம் 02. காது 03. மெழுகுவர்த்தி
04. பட்டம் 05. கடிகாரம்

தொகுப்பு: எஸ்.தனேஷன்-தெல்தெனிய.

## குடைச் செய்திகள்



பழங்கால எகிப்திலும் கிறீஸிலும் குடையை மக்கள் வெய்யிலுக்குத்தான் பயன்படுத்தி வந்தார்கள். மழைக்குப் பயன்படுத்தியதில்லை.



பழங்கால இந்தியாவிலும் அண்டை நாடுகளிலும் ஆண்ட மன்னர்களுக்குக் கொற்றக் குடையாக விரிக்கப்பட்டது வெள்ளை நிறக்குடைகள்.



ஐரோப்பிய நாட்டவர் முதலில் குடையைப் பயன்படுத்தத் தொடங்கியது 16ம் நூற்றாண்டில். எனினும் 18ம் நூற்றாண்டின் இறுதியில் தான் குடையை அதிகளவில் பயன்படுத்தத் தொடங்கினர்.

## புகையிலைச் செய்திகள்



17ம் நூற்றாண்டின் மத்தியில் அமெரிக்கர்கள் புகையிலையை நாணயமாகப் பயன்படுத்தினார்கள்.



அமெரிக்காவின் உடாஹ் மாகாணத்தில் 21 வயதிற்குட்பட்டவர்கள் புகைபிடிக்கத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. மீறினால் தண்டனை.



இன்று உலகம் முழுவதும் புகையிலை உற்பத்தி செய்யப்பட்டாலும் புகையிலையின் பிறப்பிடம் துருக்கி.

# மர்மத் தீவு

**05**

## சங்கர்லால் துப்பறியும்

**தமிழ்வாணன்**

சங்கர்லால், யோகோடானியைப் பார்த்து, "யோகோடானி, களிப்புடன் இருக்க இந்தத் தீவுக்கு வந்தோம், இங்கு நடக்கும் நிகழ்ச்சிகளைப் பார்த்தால், நாம் உடனே திரும்பிப் போக முடியாது போல் இருக்கிறது. உனக்கு ஓய்வு தேவையானால், உன்னை முல்லைவன எஸ்டேட்டில் விட்டுவிட்டு, நானும் மாணிக்கமும் திரும்பி வருகிறோம். என்ன சொல்லுகிறாய்?" என்றார் மெல்ல.

யோகோ டானி சங்கர்லாலை விழிப்புடன் பார்த்தாள்.

யோகோடானி மிக மெல்லச் சிரித்தபடி, "எனக்கு ஓய்வா? என்னை விட்டுவிட்டு நீங்களே விமானத்தை ஓட்டி விடுவீர்கள். இல்லையா?" என்றாள்.

"ஆமாம்!" என்றார் சங்கர்லால், தன் கழுத்துப் பட்டையை மேலும் தளர்த்தி விட்டபடி.

அவருடைய நெற்றியில் வந்து விழுந்த தலைமுடி. அவருடைய அழகை மிகுதிப்படுத்தியது.

"இப்போதுதான் புரிகிறது. நீங்கள் மேற்கொள்ளப்போகும் வேலை ஆபத்து மிகுந்தது. அதனால் மெல்ல என்னை அனுப்பிவிடப் பார்க்கிறீர்கள். இல்லையா?"

சங்கர்லால் பேசவில்லை. அவர் பார்வை மர்மத் தீவின் பக்கம் பதிந்திருந்தது.

"சொல்லுங்கள்!" என்றாள் யோகோடானி.

"ஆமாம். ஒரு பெண் அந்தத் தீவிற்குள் எங்களுடன் வருவதை நான் விரும்பவில்லை" என்றார் சங்கர்லால்.



யோகோடானி சிரித்தாள்.

சங்கர்லால், திரும்பி அவளைப் பார்த்தார்.

"மற்றப் பெண்களுடன் என்னை ஒப்பிட்டுப் பேசாதீர்கள். எவ்வளவோ பெரிய ஆபத்துகளைக் கண்டவள் நான். தன்னந் தனியாளாக விமானத்தில் போகும்போது புயலில் சிக்கித் தவித்திருக்கிறேன். ஒரு தடவை என் விமானம் கெட்டுப் போய்க் கடலில் விழுந்துவிட்டது. தவிர்க்க முடியாமல் ஒரு தடவை விமானத்தை மலைச்சரிவில் இறக்கி இருக்கிறேன். அது ஆபத்து என்று தெரிந்தும் நான் பின்வாங்க முன்னேற்பாடுடன் இல்லை. உங்களுடன் கண்டிப்பாக வருவேன். அன்பு மிகக் கொண்டு என்னை விரட்டி விடாதீர்கள்" என்றாள்.

அவள், கொஞ்சம் கெஞ்சுவதைப் போல் இப்படிச் சொன்னாள்.

"மர்மத் தீவில் யார் இருக்கிறார்கள், அவர்கள் எப்படிப் பட்டவர்கள் என்பது புரியவில்லை, தெரியவில்லை. இந்த நிலையில் உன்னை அழைத்துப் போவதை நான் விரும்பவில்லை."

"நீங்கள் இந்த வழக்கை எப்படித் துப்பறிகிறீர்கள் என்று உங்களுடன் இருந்து பார்க்க எனக்கு அனுமதி கொடுங்கள். என்னால் உங்களுக்கு ஒன்றும் தடை ஏற்படாது. எனக்குச் சுடத் தெரியும். ஆண்களைவிட விரைவாக ஓடத் தெரியும்."

"உன் அழகிய உடலில் துப்பாக்கிக் குண்டுகள் பாய்வதைப்பார்க்க நான் விரும்பவில்லை."

"அளவுக்கு மேல் என்னை அச்சுறுத்தாதீர்கள். நான் பிடிவாதக்காரி."

"போதும், போதும். ஜப்பானியர்கள் எப்போதும் பிடிவாதக்காரர்கள்தாம். அதனால் தான் அவர்கள் செயலிலும் தொழிலிலும் வர்த்தகத்திலும் மற்ற நாடுகளை இன்று மிஞ்சி நிற்கிறார்கள்" என்றார் சங்கர்லால்.

ஆராய்ச்சிக் கூடத்தின் கதவைத் திறந்துகொண்டு மாணிக்கம் வெளியில் வந்தான்.

"என்ன மாணிக்கம்?" என்றார் சங்கர்லால்.

"கொடிய கருவியைப்புகுத்தி நாயைக் கொன்றிருக்கிறார்கள். சைனைட் எனபடும் நஞ்சைவிடக் கொடியது இது. ஆனால் அத்தனை ஊசிகளை ஏன் போட்டார்கள் என்பது தான் புரியவில்லை. ஒரே ஊசி யைப் போட்டதும் ஊசியை வெளியே எடுப்பதற்குள்ளேயே நாய் இறந்து விட்டி ருக்க வேண்டும்."

"அப்படியானால் நாய் அந்த மர்மத் தீவிலிருந்து இங்கு வரவில்லை."

"கண்டிப்பாக வந்திருக்க வாய்ப்பே இல்லை."

"இறந்து போன நாயை எவரோ கொண்டு வந்து இந்தத் தீவில் போட்டிருக்கிறார்கள். இல்லையா?" என்றார் சங்கர்லால்.

"பிணங்கள் நடப்பதில்லை!" என்றார் மாணிக்கம்.

"சரி உட்கார்" என்றார் சங்கர்லால்.

பிறகு யோகோ டானியைப் பார்த்து, "விமானத்தைத் திருப்பு. கீழே பறந்து ஒரு தடவை மர்மத்தீவின் பக்கம் போன பிறகு, வேறு பக்கம் மீண்டும் ஒரு தடவை திருப்பு. விமானத்தில் இருக்கும் காமிராவை இயக்கி விடு. புகைப்படங்கள் எடுக்கட்டும்" என்றார்.

யோகோ டானி, மிக்க மகிழ்ச்சியுடன் விமானத்தைக் கிளப்பினாள். தண்ணீரின் மீது கொஞ்சத் தொலைவு ஓடிய விமானம், நீரின் மீதிருந்து எழும்பி வானத்தில் தாழப் பறந்தது. மர்மத் தீவின் பக்கம் பாய்ந்தது.

மர்மத் தீவின் மேல் குறுக்கும் நெடுக்குமாக ஜெட்பர்ட் என்னும் சங்கர்லால் விமானம், ஆயிரம் அடி உயரத்தில் தாழப் பறந்தது. விமானத்தின் அடி பாகத்தில் மறைவாகப் பொருத்தப்பட்டிருந்த மூவி காமிரா, தானாக இயங்கித் தீவில் தெரிந்தவற்றை ஆற்றலுடன் புகைப்படம் பிடித்துக் கொண்டிருந்தது.

அதே நேரத்தில்,

சங்கர்லாலும் மாணிக்கமும் விமானத்தின் பக்கவாட்டில் தெரிந்த சன்னல் வழியே தொலைநோக்கியால் பார்த்தார்கள்.

தீவில் அடர்ந்த மரங்கள் இருந்த பகுதிகள் நிறைய இருந்தன. ஒரு பெரிய பங்களா ஒன்றும், சில பெரிய நீண்ட தொழிற்சாலைகள் போன்ற கட்டடங்களும் தெரிந்தன. மனிதர்கள் நடமாட்டம் இருப்பதைப்போல் தெரியவில்லை. வானொலி நிலையத்தைப்போல் மேலே ஏரியல் அமைக்கப்பட்ட கட்டடம் ஒன்றும் தெரிந்தது.

விமானம் இப்போது மிகவும் தாழப் பறந்தது. தீவிலிருந்து எவராவது ஐயம் கொண்டு சுடப் போகிறார்கள் என்று சங்கர்லால் அஞ்சினார்.

"போதும் யோகோ டானி. விமானத்தை உயரத்தில் பறக்கவிடு" என்றார்.

விமானம், இப்போது விர்ரென்று கிளம்பி ஐயாயிரம் அடி உயரத்தில் பறந்தது. அடுத்த சில வினாடிகளில் பத்தாயிரம் அடி உயரத்தில் பறந் தது.

சங்கர்லால் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவரைப்போல், "முல்லைவன எஸ் டேட்டுக்குச் செலுத்து" என்றார்.

யோகோடானியின் முகத்தில் ஏமாற்றத்தின் அடையாளம் தெரிந்தது.

"என்னை விட்டு விட்டு நீங்கள் மட்டும் திரும்பி வரப்போகிறீர்கள். இல்லையா?" என்றாள் அவள்.

"அப்படி ஒன்றும் இல்லை. முதலில் காமிராவில் சிக்கியிருப்பதைச் சோதிப்போம். பிறகு வாய்ப்பு வரும்போது திரும்பி வருவோம். நீயும் எங்களுடன் வருவாய், போதுமா?" என்றார் சங்கர்லால்.

யோகோடானியின் முகம் மலர்ந்தது.

விமானம், முல்லைவன எஸ்டேட்டின் விமான நிலையத்தில் வந்து மிகவும் எளிதாக இறங்கியது. இந்திராவும் மாதுவும் மற்றவர்களும் வியப்புடன் நின்று வேடிக்கைப் பார்த்தார்கள்.

ஏதோ ஓர் அழகிய பறவை வந்து அமைதியுடன் இறங்குவதைப் போல் இருந்தது.

சங்கர்லாலும் மாணிக்கமும் முதலில் இறங்கிவந்து விட்டார்கள்.

யோகோடானி மூவி காமிராவினுள் இருந்த நெகடிவ் பிலிமை எடுத்துக் கொண்டு கொஞ்சம் மெல்ல இறங்கி வந்தாள்.

"என்ன புகைப்படம் கொண்டு வந்தீர்கள்?" என்று ஆவலுடன் சங்கர்லாலைப் பார்த்துக் கேட்டாள் இந்திரா.

"மர்மத் தீவு ஒன்றைக் கண்டு பிடித்தோம். அந்தத் தீவுக்குள் எவரையும் அனுமதிப்பதில்லையாம். ஆகையால், விமானத்திலிருந்தே புகைப்படம் எடுத்து வந்திருக்கிறோம். அதில் என்ன தெரிகிறது என்று இனிமேல்தான் பார்க்க வேண்டும்" என்றார் சங்கர்லால்.

யோகோடானி கொண்டு வந்த பிலிமை கழுவிப்பார்க்க, மாணிக்கம் இருட்டறைக்குள் விரைந்தான்.

"பொழுது போக்காகப்போன இடத்தில்கூடத் துப்பறியும் வேலைதானா?" என்றாள் இந்திரா.

இதற்குள் மாது விரைந்துபோய் எல்லாருக்கும் தேநீர் கொண்டு வந்தான். சங்கர்லால் தேநீரைப்பருகிக் கொண்டே, "யோகோடானியைக்கேட்டுப்பார்!" என்றார்.

**தொடரும்...**

# சுதந்திரம் தேடிய யுவதிகள்....

## உண்மைக் கதை

சில ஆசிய நாடுகளில் இன்றைக்கும் நடைமுறையில் இருக்கும் பழமை வாத திருமண சம்பிரதாயங்கள் பெண்களின் அடிப்படை உரிமைகளுக்கும் சுதந்திரத்திற்கும் வேலிபோடுவதாக பரவலான குற்றச்சாட்டு இருந்து வருகின்றது. இந்த வகையில் பாகிஸ்தானில் காணப்படும் மிகவும் பிற்போக்கான திருமண சம்பிரதாயங்களுக்கு எதிராக குரல் கொடுக்கத் துணிந்திருக்கிறார்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று முஸ்லிம் சகோதரிகள்.

நரீனா அன்வரின் வயது 21. 20 வயதான சமீனா மற்றும் 15 வயதான ரைஸா ஆகியோர் இவருக்கு இளையவர்கள். பாகிஸ்தானின் குஜராத் மாகாணத்தில் உள்ள



நரீனா,சமீனா,ரைஸா

பின்தங்கிய கிராமம் ஒன்றில் பிறந்த இவர்கள் சிறுவயதிலேயே பிரிட்டனில் குடியேறிவிட்டனர். இவர்களுடைய தந்தை முகமட் அன்வர் 1950களில் ஒரு சாதாரண தொழிலாளியாக பிரிட்டனுக்குச் சென்றவர். போல்டனில் இருக்கும் கிரேடர் மென்ச்செஸ்டரில் வசித்தது இந்த குடும்பம்.

பெண்பிள்ளைகள் மூவரும் பிரிட்டிஷ் உயர் பள்ளிக்கூடங்களில் பயின்றார்கள். பல்கலைக்கழகம் செல்வது இவர்களுடைய நோக்கமாக இருந்தது. இங்கிலாந்திலேயே தமது வாழ்க்கைத் துணைகளைத் தேடிக்கொண்டு அங்கேயே நிரந்தரமாக வசிக்க திட்டமிட்டிருந்தனர்.

மூத்தவரான நரீனாவுக்கு பிரிட்டிஷ் டெலிகொம் நிறுவனத்தில் வேலை கிடைத்தது. மற்றைய இருவரும் போல்டன் கல்லூரி ஒன்றில் மாணவிகளாக இருந்தார்கள்.

பிரிட்டிஷ் நாட்டு யுவதிகளைப் போன்றே மேற்கத்தைய இசைக்கும், மொடேர்ண் உடைகளுக்கும் ஆர்வம் காட்டும் தமது பிள்ளைகளின் போக்கு தந்தை அன்வருக்கு சற்றும் பிடிக்கவில்லை.

முட்டங்காலுக்கு மேலே வெளியில் தெரியக்கூடிய விதத்தில் ஆடை அணிவதும் வெள்ளைக்கார இளைஞர்களோடு ஊர் சுற்றுவதும் முற்றிலும் தடைசெய்யப்பட்ட விடயங்களாகின. இதனால் தினசரி மகள்மாருக்கும் தந்தைக்கும் இடையில் வாக்குவாதங்கள் நடக்கும்.

தந்தை அன்வரும், பாகிஸ்தானில் வசிக்கும் அவரது மனைவியும், உறவினர்களும் நூற்றாண்டு காலம் பழமைவாய்ந்த சாஸ்திர சம்பிரதாயங்களை அச்சொட்டாக பின்பற்றும் பிற்போக்குவாதிகள். பெரியவர்களால் தீர்மானிக்கப்படும், உறவுக்காரர் அல்லாத வேறொருவரை மணமுடிப்பதை இவர்கள் அவ்மானமாகக் கருதினர்.

அதனால் நரீனா,சமீனா,ரைஸா மூவரையும் தந்திரோபாயமாக பாகிஸ்தானுக்கு அழைத்துச் சென்று அங்குள்ள 'முறைமச்சான்' மாருக்கு இவர்களை மண முடித்துக் கொடுக்க பெற்றோர் திட்டமிட்டனர்.

கடந்த ஜூலை மாதம் பாகிஸ்தானில் வசிக்கும் தாயிடம் இருந்து அன்வர் சகோதரிகளுக்கு அவசர அழைப்பொன்று வந்தது. 'பாட்டனும் பாட்டியும் ஆபத்தான நிலையில் இருக்கிறார்கள். உடனடியாக வந்து பார்த்துவிட்டுப் போகவும்' என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த அழைப்பின் பின்னர் இவர்கள் மூவரும் ஜூலை 21ம் திகதி பாகிஸ்தான் சென்றடைந்தனர்.

அங்கு அவர்கள் சற்றும் எதிர்பாராத நிகழ்வொன்றுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. சொந்த ஊரை சென்றடைந்த அவர்கள் தாயாரினதும் உறவினர்களினதும் உத்தரவின்படி தனியானதொரு வீட்டில் வைத்து பூட்டப்பட்டார்கள்.

"இங்கிலாந்தில் படித்தது போதும். இனிமேல் நாங்கள் சொல்பவர்களை திருமணம் செய்துகொண்டு இங்கேயே இருக்க வேண்டும்." வீட்டுக்காவலில் வைக்கப்பட்டவர்களுக்கு உத்தரவிடப்பட்டது.

இந்த உத்தரவை திட்டவட்டமாக நிராகரித்த 3 சகோதரிகளும் தங்களுக்கு விரும்பமில்லாதவர்களை மணக்க முடியாதெனக்கூறினர்.

"நாளை பெண்பார்க்க வருகிறார்கள். விருப்பமில்லை அது இதுவென்று கூறி மானத்தை வாங்கிவிடக் கூடாது. பேசாமல் தலையை ஆட்ட வேண்டும்." உறவினர்கள் நரீனாவுக்கும் சமீனாவுக்கும் அழுத்தம் திருத்தமாக சொல்லி வைத்தனர்.

**ஷானு**

பெண் பார்க்கவென்று இவர்களது மாமாவின் மகன்மார் இருவர் வந்தனர். படிக்காத அந்த பட்டிக்காட்டு இளைஞர்கள் இருவரும் பார்த்த பார்வையே சமீனாவுக்கும் நரீனாவுக்கும் வெறுப்பேற்றியது.

ஓர் ஆங்கில வார்த்தையேனும் பேசத் தெரியாத இவர்கள் இருவரும் பஞ்சாப் மொழியில் வீட்டிலிருந்த ஏனையவர்களுடன் மாத்திரம் தான் கதைத்தனர்.

அந்த இளைஞர்கள் பேசிய முதிர்ச்சியற்ற வார்த்தைகளும் அவர்களது அருவருக்கத்தக்க நடத்தைகளும் நரீனாவுக்கும், சமீனாவுக்கும் தமது எதிர்காலம் குறித்த அச்சத்தை தோற்றுவித்தன. பிரிட்டனை விட்டு வெளியேறி வந்தது மிகப்பெரிய தவறென்று உணர்ந்தார்கள்.

இந்த இளைஞர்கள் சென்றதும், "போலியான குடும்ப கௌரவத்துக்காக எமது வாழ்க்கையை பலி கொடுக்க வேண்டாம்" என்று இவ்விருவரும் கதறி அழுதனர்.

இவை எதனையும் பொருட்படுத்தாமல் திருமணத்துக்கான நாள் குறிக்கப்பட்டது.

(அடுத்த வாரமும் வரும்)

# ஈழத்தின் இணையற்ற எழுத்துச்சிற்பி.... எஸ்.டி.சிவநாயகம் 53

## எஸ்.டி.எஸ். கண்ட பாரதி

அந்தப் பந்தல் முழுவதும் குருத் தோலைத் தோரணங்களாலும், மாவிலைகளாலும், ரஸக் குண்டுகள், காகித மாலைகள், சந்திரப் பிரகாச விளக்குகள் ஆகியவற்றாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

பார்த்த பார்த்த இடங்களில் எல்லாம் ராட்டைச் சின்னம் பொறிக்கப்பட்ட காங்கிரஸ் மூவர்ணக் கொடிகள் பட்டொளி வீசிப் பறந்தன. ஒலிபெருக்கிகளில் தேசிய கீதங்கள் காதுகளைச் செவிடாக்கிக் கொண்டிருந்தன.

ஞாயிறும், திங்களுமாக இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த விழாவில் கலந்து கொள்வதற்கு பேராசிரியர் கல்கி மூன்று பிரமுகர்களை ஏற்பாடு செய்திருந்தார்.

விழாவுக்குத் தலைமை வகிக்க மேன்மை தங்கிய சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், அவர்களுக்கு அழைப்பு. அவர் அப்போது மேற்கு வங்காள தேசத்தின் கவர்ணராகப் பதவியேற்றிருந்தார்.

பாரதி ஒரு சிறந்த கவியரசராக விளங்கியதால் அவருடைய ஞாபகார்த்த மணிமண்டபத்தைத் திறந்து வைப்பதற்கு கவிதை அறிந்த ஒருவரே பொருத்தமாக இருப்பார் என்று கருதிய கல்கி, அப்போது ஐக்கிய மாகாணத்தின் கவர்ணராக விளங்கிய மேன்மை மிகு கவியரசி சரோஜினி நாயுடு அவர்களை அழைத்திருந்தார்.

பாரதி மணிமண்டபத்துள் வைக்கப்பட்ட பாரதி சிலையை அப்போது சென்னை மாகாண பிரதம மந்திரியாக விளங்கிய கனம் ஓமந்தார் பி.ராமசாமி ரெட்டியார் திரைநீக்கம் செய்து வைப்பார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

விழா ஆரம்பிப்பதற்கு முதல் நாள் இரவு விசேட ரயில் ஒன்று சென்னையிலிருந்து புறப்பட்டது.

விழாவில் கலந்து கொள்ளவிருந்த தலைவர்களையும், சட்ட சபை உறுப்பினர்களையும் இலக்கிய விற்பன்னர்களையும், பத்திரிகையாளர்களையும், எழுத்தாளர்களையும், கலைஞர்களையும், பாடகர்களையும், வாத்தியக்காரர்களையும், அழைப்பு விடுக்கப்பட்ட ஏனைய பிரமுகர்களையும் சுமந்து கொண்டு, இந்த 'ஸ்பெஷல் ரயில்' பாரதியின் 'ஜயபேரிகை கொட்டடா, கொட்டடா கொட்டடா' என்ற அடிகளைத் திரும்பத் திரும்ப ஒலிப்பது போல இரைந்து கொண்டு, "வெற்றியெட்டுத் திக்குமெட்டக் கொட்டு முரசே ஏஏஏ" என்று ஞாயிறு காலை 9.30 மணிக்கு கோவில்பட்டி ஸ்டேஷனில் வந்து நின்றது.

அந்த ரயிலின் முன்புறத்தில் பெரிய பாரதியின் ஓவியம் ஒன்று பொருத்தப்பட்டிருந்தது. அந்த ஓவியத்தை வரைந்து கொடுத்தவர் ஓவியர் கொண்டையா ராஜுதான் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கோவில்பட்டி ஸ்டேஷனில் தலைவர்களுக்கு பிரமாண்டமான ஒரு வரவேற்பில் கவியரசி சரோஜினி நாயுடு தவிர்க்க முடியாத காரணத்தால் வரமுடியவில்லை என்று அறிவிக்கப்பட்டது.



பின்னர் பகல் 11 மணியளவில் எல்லாரும் எட்டயபுரம் வந்து சேர்ந்தார்கள். எட்டயபுரத்து எல்லையில் வைத்தும் ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது.

அந்த நேரம் இரண்டு புதிய பாடல்கள் ஒலிபெருக்கியில் முழங்கின.

அந்த இரண்டு பாடல்களையும் எழுதியவர் பேராசிரியர் 'கல்கி' அவர்கள் தான்.

"தவமும் பலித்ததம்மா" என்பது ஒரு பாடல்.

"தெய்வத் தமிழ் நாட்டினிலே வெண்ணிலாவே" என்பது மற்றப் பாடல்.

பாரதியின் சிறப்பு, மகிமை, திறமை, தேசபக்தி ஆகியவை பற்றி எடுத் துரைத்த அந்த இரண்டு பாடல்களும் கிராமஃபோன் இசைத்தட்டு ஒன்றில் முன்னும் பின்னுமாகப் பதிக்கப்பட்டு அன்றுதான் வெளியிடப்பட்டன.

கோகில கான இசைவாணி திருமதி எம்.எஸ். சுப்புலக்ஷ்மி தான் அந்த இரண்டு பாடல்களையும் ரெக்கோட்டில் பாடியிருந்தார். தேவாமிர்தமாகச் சுவைத்தன அந்த இரண்டு பாடல்களும்.

அன்று ஞாயிறு மாலை 5 மணி முதல் 8 மணி வரை திருமதி எம்.எஸ்.சுப்புலக்ஷ்மியின் இசைக் கச்சேரி பாரதி மணி மண்டபப் பந்தலில் நடைபெற்றது. முழுக்க முழுக்கப் பாரதியின் பாடல்களாக அவர் பொழிந்து தள்ளினார்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்" என்ற பாரதி பாடலை அவர் பாடியபோது "பொடு பொடு" வென்று பந்தலின் மேல் மழைத் துளிகள் உதிர்ந்தன.

ஆனால், பெரிய மழையாகப் பெய்யவில்லை. பாரதியின் பாடலை எம்.எஸ். பாடிய இனிமையைக் கேட்டு தேவர்கள் மலர்மாரி பொழிவதாகவே நாங்கள் அந்த சம்பவத்துக்கு அர்த்தம் கொடுத்துக் கொண்டோம்.

அதன் பின்னர் இரவு 9.30 மணியிலிருந்து நள்ளிரவு 12.00 மணிவரை திரு. எம்.எம்.தண்டபாணி தேசிகர் தமிழ் இசையை வாரி வாரி வழங்கினார்.

மீண்டும் முருகானந்தனின் "மூச்சில் சக்தி பிறக்க" ஆரம்பித்து விட்டால், அடுத்த நாள் உள்ள பிரதான நிகழ்ச்சிகளைப் பார்க்கவும் கேட்கவும் முடியாமல் போகுமே என்ற காரணத்தால் அவரும் நானும் தண்ட பாணியாரின் தமிழிசையைத் தன்பாட்டில் வழிந்துஓட விட்டு விட்டு நடையைக் கட்டினோம்.

மறுநாள் திங்கட்கிழமை அதிகாலை 6.30 மணிக்கே நிகழ்ச்சிகள் ஆரம்பமாகவிருந்தன.

அந்தத் திங்கட்கிழமை என் வாழ்நாளில் ஒரு பெரிய அதிசயமான மனிதரை நான் முதன் முதலில் சந்தித்த திங்கட்கிழமையாகும்.

அந்த அதிசய மனிதர்தான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாபெரும் தலைவர்களில் ஒருவராக விளங்கிய திரு.ப.ஜீவானந்தம் அவர்களாவர்.

★★★

1947 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் எட்டயபுரத்தில் நடைபெற்ற பாரதி மணி மண்டபத் திறப்பு விழா நிகழ்ச்சிகளில் நான் கலந்து கொண்டு மட்டக்களப்புக்கு திரும்ப வந்ததும், ஓர் இளைஞர்-மாணவப்பருவத்தினர்-என்னிடம் வந்து தாம் வெளியிடும் பத்திரிகைக்கு கட்டுரைகள் எழுதித்தர வேண்டும் என்று என்னிடம் கேட்டுக் கொண்டார்.



அப்போது தினகரன் பத்திரிகையில் என் கட்டுரைகள் நிறைய வெளியாகிக் கொண்டிருந்தன. சொந்தப் பெயரிலும், பலவிதமான புனை பெயர்களிலும் நான் எழுதிவந்தேன். புனை பெயர்களில் எழுதினாலும்கூட அக்கட்டுரைகளை எழுதுபவர்கள் யார் என்பது காதோடு காதாக மட்டக்களப்பில் பலருக்குத் தெரிந்திருந்தது.

கதைகள், கவிதைகள், நாட்டுப்பாடல் விளக்கங்கள், இலக்கியக் கட்டுரைகள் இப்படிப் பல துறைகளைத் தொட்டு நின்றது என் எழுத்து. ஆயினும் மாணவர் மத்தியில்-மாணவர் என்றால் எஸ்.எஸ்.ஸி. படிக்கும் மாணவர்கள் ஆகியோர் மத்தியில்-நான் எழுதிய ஹாஸ்யக் கட்டுரைகளுக்கு நல்ல வரவேற்பு இருந்தது என்று நினைக்கிறேன். எனக்கும் ஹாஸ்யக் கட்டுரைகளே அந்தக் கால கட்டத்தில் பிடித்தமாக இருந்தன.

என்னிடம் வீடு தேடி வந்த அந்தத் துடிப்பான இளைஞரிடம் "உங்களுக்கு எப்படியான கட்டுரை வேண்டும்?" என்று கேட்டேன்.

நான் பாரதி மணிமண்டப விழாவுக்குச் சென்று திரும்பியது அவருக்குத் தெரியும். அதனால், அவர், பாரதி விழா சம்பந்தமாக ஏதாவது எழுதும்படி கேட்பார் என்று தான் நான் எதிர்பார்த்தேன்.

ஆனால் அவர் என்ன கேட்டார் தெரியுமா?

"எட்டயபுரம் சென்று வந்திருக்கிறீர்கள். அங்கு நடைபெற்ற சம்பவங்கள் பற்றி நகைச்சுவைக் கட்டுரைகள் சில எழுதித் தருகிறீர்களா?" என்று தான் கேட்டார்.

அவர் விருப்பப்படி முதலில் இரண்டு ஹாஸ்யக் கட்டுரைகள் எழுதிக் கொடுத்ததாக ஞாபகம் இருக்கிறது. ஒன்றின் தலைப்பு "எட்டயபுரத்தில் ஒரு ஷேவ்", மற்றதின் தலைப்பு "ஸ்ரீ வராக மூர்த்தி தரிசனம்".

"எட்டயபுரத்தில் ஒரு ஷேவ்" என்ற கட்டுரை அவர் வெளியிட்டு வந்த மாதப் பத்திரிகையில் வெளியாயிற்று. மற்றக் கட்டுரை வெளி வந்ததோ என்னவோ தெரியவில்லை.

நான் எட்டயபுரம் சென்ற சமயம் அங்கு பாபர் சலூன் இருக்கவில்லை. ஒரு வேளை இருந்திருக்கக் கூடும். ஆனால் என் கண்ணில் படவில்லை. நான் "சேஃப்டி ரேஸர்" கொண்டு போகாத காரணத்தால் ஒரு புளியமரத்தின் அடியில், தரையில் உட்கார்ந்து முகச்சவரம் செய்த ஒரு புண்ணியவானிடம் சிக்கிக் கொண்டு நான் பெற்ற விசித்திர அனுபவத்தை வேடிக்கையாக விவரித்ததுதான் "எட்டயபுரத்தில் ஒரு ஷேவ்" என்ற கட்டுரையின் உட்பொருளாகும்.

"ஸ்ரீவராக மூர்த்தி தரிசனம்" என்ற கட்டுரை இன்னொரு நகைச்சுவையான சம்பவத்தைப் பற்றியது. அந்தக் கட்டுரை பிரசுரமாயிற்றா இல்லையா என்று தெரியாத காரணத்தால் அதன் சுருக்கத்தை இத் தொடரில் சேர்ப்பது பாரதியார் பிறந்த எட்டயபுரத்தின் சூழ்நிலையை வாசகர்களுக்கு படம் பிடித்துக் காட்டுவதற்குப் பயன்படும் என்று கருதுகிறேன்.

அதற்கு முன்பு ஒரு "சஸ் பென்ஸை" இப்போதே உடைத்து விட வேண்டும்.

அவ்வளவு அக்கறையோடு என்னிடம் வந்து கட்டுரை கேட்டு வாங்கித் தம் பத்திரிகையில் பிரசுரித்த இளைஞர் யார்? உங்களால் ஊகிக்க முடிகிறதா?

அவர் வேறு யாருமல்லர். இன்று பிரதேச அபிவிருத்தி, இந்து சமயம், இந்து கலாசாரம், தமிழ்மொழி அமுலாக்க அமைச்சராக விளங்கும் திரு.செல்லையா இராசதுரை அவர்கள் தான்! அவர் அப்போது அச்சிட்டு வெளியிட்டு வந்த பத்திரிகையின் பெயர் "லங்கா முரசு". அந்த லங்கா முரசில் தான் "எட்டயபுரத்தில் ஒரு ஷேவ்" என்ற என் கட்டுரை வெளிவந்தது.

★★★

எட்டயபுரத்தில் அப்போது எந்த வீட்டிலும் மலசல கூடம் என்று ஒன்று இருக்கவில்லை. ஒரு வேளை ஜமீன்தாரின் அரண்மனையிலும், வேறு செல்வந்தர் வீடுகளிலும் இருந்திருக்கலாம். மற்றப்படி ஆண்களும் சரி பெண்களும் சரி ஊரின் புறத்தே உள்ள வெட்ட வெளியையும், பற்றை மறைப்புகளையும் தான் பயன்படுத்திக் கொண்டார்கள். காலையில், வெட்ட வெளியில் பலர் தம் முன்னால் ஒவ்வொரு செம்பு ஜலத்தையும் வைத்துக் கொண்டு ஆங்காங்கே குந்திக் கொண்டிருப்பது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். இந்த வகையில் எமது இலங்கை நாடு எவ்வளவோ மேல் என்று தான் சொல்ல வேண்டும்.

பாரதி மணிமண்டபத் திறப்பு விழா அக்டோபர் 13 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு ஆரம்பம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அச்சிடப்பட்டிருந்த விழா நிகழ்ச்சித் துண்டுப் பிரசுரத்தில்-

காலை 6.30 மணிக்கு ராஜாஜியும், பிரதம மந்திரியும், இதர பிரமுகர்களும் ஜாகையிலிருந்து புறப்பட்டு பாரதி மண்டபம் வருதல் என்று அச்சிடப்பட்டிருந்தது.

அதனால், நண்பர் நாராயணன் வழி காட்ட நானும் நண்பர் முருகானந்தனும் சற்று நேரகாலத்தோடு, இருள் பிரியமுன் புறப்பட்டு அந்த வெட்டவெளியை நாடிச் சென்றோம்.

திறந்த வெளியில் உட்காருவது எனக்குக் கொஞ்சம் சங்கடமாக இருந்தது. இதை நான் நண்பர் நாராயணனிடம் சொன்னபோது, அவர், "கவலைப்படாதீர்கள். தாழைப் புதர் இருக்கிறது" என்றார்.

தாழை மரங்கள் சில முளைத்திருந்த ஓர் இடத்துக்கு என்னைக் கொண்டு போய் விட்டு விட்டு அவர் சற்று தூரம் நகர்ந்து சென்றார். நான் அங்கு உட்கார்ந்து கொண்டேன்.

சற்று நேரத்துக்குள் என் பின்புறமாக ஒரு சின்னஞ் சிறு சலசலப்புக் கேட்டது. நான் திரும்பிப் பார்ப்பதற்குள்ளாகவே, பின்புறத்திலிருந்து ஓர் உந்தலாக நான் உந்தித் தள்ளப்பட்டேன்.

சுருட்டி வாரிக் கொண்டு எழுந்திருந்த போது அங்கு சாட்சாத் ஸ்ரீ வராக மூர்த்தி எனக்குத் தரிசனம் கொடுக்கலானார்!

மஹா விஷ்ணுவின் பத்து அவதாரங்களில் இரண்டாவது அவதாரம் வராகவதாரம் அல்லவா? **(இன்னும் வரும்)**

தொகுத்தளிப்பவர்

இரா. பத்மநாதன்

---

# வாரம் ஒரு வார்த்தை!



### 16. சட்டமும் தண்டனையும்

ஒருத்தர் இருந்தார்!

எதுக்கு எடுத்தாலும் சட்டம் பேசறவர். "சட்ட நுணுக்கமலாம் என் விரல் நுனியிலே வச்சிருக்கேன்"ம்பார்!

அவரு எப்படி சொல்வார்ன்னா...

"லா பாயிண்ட்லாம் என் ஃபிங்கர் டிப்லே வச்சிருக்கேன்"ம்பார்!

சரி அவரு விரல் நுனியிலே என்னதான் வச்சிருக்கார்ன்னு பார்த்தேன்... நகம்தான் வச்சிருந்தார்... நீள நீளமா! வேறே எதுவும் என் கண்ணுக்குத் தெரியலை!

ஒரு வேளை அந்த கூரான நகத்தைத் தான் 'சட்ட பாயிண்ட்'ன்னு சொன்னாரோ என்னவோ!

அவரு எப்படியாவது இருந்துட்டுப் போவட்டும்! ஆனா நாமெல்லாம் தெரிஞ்சிக்க வேண்டிய ஒரு உண்மை என்ன தெரியுமா?

சட்டம் எனக்குத் தெரியாதுன்னு சொன்னா அதை சட்டமே ஏத்துக்கறதில்லே!

Ignorance of Law is not an excuse!

விளக்கு இல்லாமே சைக்கிள்லே போறோம்! பொலிஸ்லே நம்மை புடிச்சி கொண்டு போயி கோர்ட்லே நிறுத்திடறாங்க!

அங்கே நாம.. "விளக்கு இல்லாமே சைக்கிள்லே போறது தப்புன்னு எனக்குத் தெரியாது"ன்னு சொன்னா அதை அங்கே ஏத்துக்க மாட்டாங்க!

அதனாலே-சட்டம் எனக்குத் தெரியாதுன்னு சாதாரண மனுஷன் கூட சொல்ல முடியாது! அதைச் சட்டம் ஏத்துக்காது! சட்டத்தை தெரிஞ்சிக்க வேண்டியது நம்மோட கடமை!

அதே மாதிரிதான்...

ஒரு குற்றத்துக்கு உடந்தையா இருந்துட்டு.. அந்த குற்றத்தை நான் நேரடியா செய்யலே.. அதனாலே என்ன விட்டுடுங்கோன்னு சொன்னா கேக்கமாட்டாங்க!

சட்டத்தின் கீழ்..

குற்றம் புரிந்தவர்களுக்குத் தண்டனை உண்டு! குற்றம் புரியறதுக்கு உடந்தையா இருந்தவங்களுக்கும் தண்டனை உண்டு!

குற்றத்துக்கு உடந்தையா இருக்கறதுன்னா என்ன? சட்டம் என்ன சொல்லுது தெரியுமா?

"ஒரு நபரை குற்றம் புரியுமாறு தூண்டுதல்; ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுடன் கூடி சதி செய்த அந்த சதியின் விளைவாக ஒரு சட்ட விரோதமான காரியத்தைச் செய்வது, அல்லது சட்டப்படி செய்ய வேண்டிய காரியத்தைச் செய்யாமல் இருப்பது;

வேண்டுமென்றே ஒரு குற்றச் செயல் புரிவதற்கு அல்லது சட்டப்படி செய்ய வேண்டிய காரியத்தைச் செய்யாமல் இருப்பதற்கு உதவி செய்வது-ஆகியவற்றைக் 'குற்றத்துக்கு உடந்தையாக இருத்தல்' என்று சட்டம் சொல்லுகிறது. புரிஞ்சிக்கிட்டீங்களா?

இன்னொரு விவரத்தையும் தெரிஞ்சிக்குங்க: "ஒரு குற்றத்துக்கு உடந்தையாக இருந்த வேறொரு குற்றம் புரியப்பட்டால் அந்தக் குற்றத்துக்கு உடந்தையாக இருந்தவருக்கு செய்யப்பட்ட குற்றத்திற்குப் பொறுப்பு சார்வதுடன் தாமே அந்தக் குற்றம் புரிவதற்கு நேரடி உடந்தையாக இருந்ததாகவும் கொள்ளப்படும்."

**தென்கச்சி – கோ. சுவாமிநாதன்**

அதனாலே முக்கியமா புரிஞ்சிக்க வேண்டியது என்னன்னா...

விஷத்தை நேரடியா ஒருத்தருக்கு கொடுத்தாலும் ஒண்ணுதான்-இன்னொருத்தர்கிட்டே கொடுத்து கொடுக்கச் சொன்னாலும் ஒண்ணுதான்! தண்டனையை அனுபவிச்சே தீரணும்.

தண்டனையிலேயிருந்து தப்பிக்கறதுக்கு என்னென்னமோ சாமர்த்தியமா வாதாடிப் பார்க்கலாம்! இருந்தாலும் சட்டம் அதை ஒத்துக்காது!

ஒருத்தன் இப்படித்தான் ஒரு தப்பு பண்ணிபுட்டான். தப்புன்னா சாதாரண தப்பு இல்லே! பெரிய குற்றம்! கொலைக் குற்றம்! அதாவது ஒரு பையன் அவங்க அப்பாவையும் அம்மாவையும் கொன்னுபுட்டான்!

கோர்ட்லே அவனுக்கு மரண தண்டனை நிச்சயமாயிட்டுது!

கடைசியாக நீதிபதி அவனை பார்த்து "நீ கடைசியா உன் தரப்புலே ஏதாவது சொல்ல விரும்பினா சொல்லிக்கலாம்"ன்னார்.

அந்த பையன் சொன்னான்:

"ஐயா! நீதிபதி அவங்களே! எங்க அப்பாவையும் அம்மாவையும் நான் தான் கொன்னேன்! அதை ஒத்துக்கறேன். அப்ப ஏதோ ஒரு ஆத்திரத்துலே அப்படி பண்ணிபுட்டேன்! ஆனா இப்ப.. அப்பா அம்மா மேலே அளவு கடந்த பாசம் எனக்கு உண்டாயிட்டுது... அது மட்டுமில்லே இப்ப நான் தாய் தந்தை இல்லாத அனாதை! இப்பல்லாம் எந்த நேரமும் அவங்க நினைப்பாவே இருக்கிறேன். அதனாலே இந்த பாயிண்ட்டை பரிசீலனை பண்ணி என்னை விடுதலை பண்ணணும்" அப்படின்னான்.

எல்லாத்தையும் நீதிபதி பொறுமையாக கேட்டுகிட்டார். கடைசியாக இப்படி தீர்ப்பு சொன்னார். எப்படி தெரியுமா?

"இந்தப் பையன் குற்றத்தை ஒத்துக்கிட்டான். அதே நேரத்துலே இப்ப, தன்னோட தாய் தந்தை மேலே அளவு கடந்த பாசம் வச்சிருக்கான். அதை தவிர தான் அனாதையாயிருக்கோம்ங்கற நினைப்பு வேற இருக்கு... இதையெல்லாம் கருணையோட பரிசீலனை பண்ணி பார்த்ததிலே... அவனை அவங்க அப்பா அம்மா இருக்கிற இடத்துக்கே அனுப்பி வச்சுடறதுதான் நல்லது... அதனாலே மரண தண்டனை வழங்கறேன்"னார்!

பையனும் அவங்க அப்பா அம்மாகிட்டே போய்ச் சேர்ந்தான்.

**(வார்த்தைகள் தொடரும்)**

# கலப்படம்

இருவார சிறைவாசத்திற்குப் பின் இன்றுதான் விடுதலை. சிறைக்கூடத்தை விட்டு வெளியே வந்தபோது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது சுப்ரமணியத்திற்கு. இன்று விடுதலை என்று தெரிந்தும் தன்னை அழைத்துபோக உறவினர்களோ, குடும்பத்தவர்களோ வராதது அவன் மனதிற்கு மிகவும் சங்கடமாக இருந்தது. சவரம் செய்யப்படாத முகம். எண்ணெய் வாசனை அறியாத தலை. கசங்கிப் போய் அழுக்கோடு கூடிய உடை. பாதணி இல்லாத கால்கள் என ஒரு பிச்சைக்காரனின் தோற்றத்தில் அவன். அவனைப் பார்க்க அவனுக்கே பரிதாபமாக இருந்தது. 'இந்நிலையோடு ஊருக்குள் போனால் இன்னும் கேவலமாக இருக்கும்' என எண்ணிக் கொண்டு முதலில் முகச் சவரம் செய்து கொள்வதற்காக அருகில் இருந்த சலூனில் நுழைந்தான்.

> "விஷத்தைகூட விஷமாய் விற்காமல் அதிலும் கலப்படம் செய்துள்ளார்கள். இப்படி இன்னும் எது எதிலோ எப்படியெப்படியெல்லாமோ கலந்திருக்க ஒரு சின்னக் கலப்படத்தை செய்துவிட்டு அநியாயமாய் பெண்டாட்டி பிள்ளைக் குட்டிகளை விட்டுவிட்டு சாகப்பார்த்தேனே! எவ்வளவு பெரிய மடத்தனம்."

சுப்ரமணியம் பெரிதாய் ஒன்றும் செய்துவிட்டுச் சிறைக்குப் போகவில்லை. சொந்தமாய் ஒரு சிறிய பலசரக்குக் கடை வைத்திருந்தான். நாளாந்தம் அதில் வரும் வருமானத்தைக் கொண்டு குடும்பத்தை ஓட்டிவந்தான். மனைவி, இரண்டு பெண் பிள்ளைகள், ஒரு மகன் அடங்கலாக ஐந்து பேர் கொண்டது அவனது குடும்பம். உயர்தரம் படிக்கும் ஒரு மகள், சாதாரணதரம் பயிலும் இன்னொரு மகள், எட்டாம் ஆண்டில் கற்கும் மகன் என மூன்று பேரையும் கல்வியில் கரைசேர்க்க வேண்டி அந்தச் சிறிய கடையில் இரவு பகலாய் உழைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் அவன் இருந்தான். அண்மைக்காலத்தில் நாட்டில் ஏற்பட்ட பொருட்களின் விலை அதிகரிப்பால் கடையில் வியாபாரம் அவ்வளவாக இல்லை. திடீரென்று மின்சாரக் கட்டணம், எரிவாயுக் கட்டணம், தண்ணீர்க் கட்டணம் என எல்லாம் ஒரே நேரத்தில் விலையேறிய போது, அன்றாடம் உழைத்து உண்ணும் மக்கள்கூட ஒரே நேரத்தில் திக்குமுக்காடிப் போனதால், அதன் பாதிப்பு சுப்ரமணியத்தையும் ஆட்டிப் படைத்தது.



இந்த சமயத்தில்தான் அவன் வந்தான். "சுப்ரமணியண்ணே! சுப்ரமணியண்ணே!" என்று கூப்பிட்டுக் கொண்டு வந்தவன் வேறு யாருமல்ல அவன் கடைக்கு தேயிலைத்தூள் கொண்டு வரும் வியாபாரி கந்தசாமிதான் அவன்.

"அண்ணே வியாபாரம் ரொம்பவே டல் அடிக்குது. இந்த கடை வியாபாரத்தை மட்டும் நம்பிக்கொண்டிருந்தால், குடும்பத்தை கொண்டு போக இயலாது."

"அதனால?"

"அதனால நான் ஒரு புது யோசனை கொண்டு வந்திருக்கேன். நீங்க மனசு வச்சா நாம ரெண்டு பேருமே கொஞ்சம் லாபம் சம்பாதிக்கலாம்" என்று சூசகமாய் அந்த விசயத்தை காதில் போட்டான் கந்தசாமி. முதலில் மறுத்த சுப்ரமணியிடம், "பயப்படாதீங்க. தைரியமா செய்யலாம். நாம இதிலே மாட்டிக்கிறதுக்கு வழியே இல்லை. இந்த விசயம் நம்ம மூணுபேருக்கு மாத்திரம் தானே தெரியும். நாமலே வேற யாருக்கும் சொன்னால் தான் பிரச்சனை;" என்று தைரியப்படுத்திய கந்தசாமியால் அரைமனதோடு சம்மதப்பட்டு தொழிலில் இறங்கினான்.

கந்தசாமியின் நண்பன் வடிவேலு ஒரு தேனீர் கடையில் வேலை செய்கிறான். அந்தத் தேனீர் கடையில் தேனீர் வடித்தது போக சக்கையாய் வீசப்படும் தேயிலையை தினமும் சேகரிப்பான். தினமும் மூன்று அல்லது நாலுகிலோவரை சேரும். அதை கந்தசாமிடம் கொடுத்து மறுபடியும் உலர வைத்து அது பழைய படி தேயிலைத்தூள் வடிவத்திற்கு வந்ததும் அதை சுப்ரமணியத்தின் கடைக்குக் கொண்டு செல்வான். அதை வாங்கும் சுப்ரமணியம் தன்னிடம் இருக்கும் நல்ல தேயிலையோடு கலந்து விற்பனை செய்துவிடுவான். விற்பனையாகும் தொகையை மூவரும் பங்கு போட்டுக்கொள்வார்கள். சின்னதாய் ஆரம்பித்த இந்தத் தொழில் கூடிய சீக்கிரமே கொஞ்சம் விரிவடையத் தொடங்கியது. யாருக்கும் தெரியாமல் நடந்த இந்த திருட்டு வேலையை, சுப்ரமணியத்தின் கடைக்கு வந்து ஒருமுறை கடன் கேட்டு இல்லை என்று ஏமாற்றமாகிப்போன ஒருவன் எப்படியோ மோப்பம் பிடித்துவிட்டான். முடிவில் அவன் எழுதிய மொட்டைக் கடிதம் பொலிஸைப் போய்ச்சேர பொலிஸ் வந்து சுப்ரமணியத்தின் கடையை சோதனை இட்டபோது, கையும் களவுமாக மாட்டிக் கொண்டான். கந்தசாமியும், வடிவேலுவும் 'தங்களுக்கு சம்பந்தம் இல்லை' என்று ஒதுங்கிக் கொண்டதால், பத்தாயிரம் ரூபா தண்டனையோடு இருவார சிறை வாசமும் சுப்ரமணியத்திற்கு கிடைத்தது.

முகச்சவரம் செய்த கையோடு பஸ் ஏறி ஊருக்குப் போனான். ஊரில் இவனைக் கண்டவர்கள் எல்லோரும் முகத்தைத் திருப்பிக்கொண்டார்கள். உலகில் யாருமே களவு செய்யாமல் இவன் மாத்திரம் பெரிய குற்றம் செய்துவிட்டவன் போல் அவர்கள் பார்வை இருந்தது. ஊரையே ஏய்த்துக் கொண்டு உத்தமராய் தோன்றுபவர்களைப் பற்றி சுப்ரமணியத்திற்கு கவலை இல்லாமல் இருந்தது. நல்லவனாய் இருந்தால் தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டு ஆடுவதும், கொஞ்சம் தவறிவிட்டால் காலில் போட்டு மிதிப்பதும் உலகில் சகஜம். சிறையில் சந்தித்த குற்றவாளிகளோடு தன்னை ஒப்பிட்டுப் பார்த்தபோது, அவன் செய்தது ஒன்றும் பெரிய தவறாக தெரியவில்லை. அந்த தவறு ஏற்படுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்தது இந்த சமூகம். அதனை ஆராய்ந்து பாராமல் குற்றத்தை மட்டுமே பார்த்து தண்டித்த சமூகத்தின் மேல் அவனுக்கு வெறுப்பு மாத்திரமே மிஞ்சி இருந்தது. அதனால் எதைப் பொருட்டும் கலங்காமல் வீட்டிற்குள் நுழைந்தான்.

பக்கத்து ஊருக்குச் சென்று வந்தால் கூட வழிமேல் விழிவைத்து வாசலில் காத்துக்கிடக்கும் மனைவி பிள்ளைகள் பதினைந்து கிலோமீற்றருக்கு அப்பாலிருந்து வருவது தெரிந்திருந்தும் வாசல் பக்கம்கூட வராமல் இருந்தது முதல் அதிர்ச்சியாக இருந்தது. எல்லோரும் அவரவர் அறையில் இருந்தார்கள். விறாந்தையில் இருந்தவாறு "சங்கீதா..., தாரணி... மேகலா... சர்வேஸ்....." என்று எல்லோரையும் அழைத்தான். எல்லோரும் குரல் கேட்டதும் ஓடி வருவார்கள் என எதிர்பார்த்தான். யாரும் வரவில்லை. பின் ஒவ்வொருவரின் அறைக்கும் சென்று பேசினான். ஏதோ இவன் பேசியதற்காக ஒப்புக்கு பேசிவிட்டு எல்லோரும் முகத்தை திருப்பிக்கொண்டார்கள். மனைவி சங்கீதா கூட சரியாக முகம் கொடுக்காதது அவனுக்கு மிகுந்த ஏமாற்றமாய் போய் விட்டது. "ச்சே என்ன உலகம் இது: கள்ளத்தனமாக சம்பாதித்து, போகும் போது நான் அள்ளிக் கொண்டு போகவா இவ்வளவு பாடுபட்டேன். எல்லாம் உங்களுக்காகத்தானே! இப்படி கொஞ்சம்கூட நன்றி இல்லாம நடந்துக்கிறீங்களே....! இது உங்களுக்கே நியாயமாக இருக்கா?" என்று சத்தம் போட்டான்.

"நியாயத்தைப்பற்றி நீங்க பேசாதீங்க. செய்யிறதையும் செய்திட்டு பேச வந்திடீங்க.. உங்களால இப்போ எங்களுக்கு வெளியிலே தலைகாட்ட முடியலை. கேவலமா இருக்கு. ஒழுங்கா சம்பாதித்து ஒருவேளை கஞ்சி கொடுத்திருந்தாலும் குடிச்சிட்டு சந்தோசமா இருந்திருப்போம். நீங்க செஞ்ச வேலையால அவமானப்பட்டது நீங்க மட்டுமில்ல. நாங்களும் தான். அந்த பிள்ளைகளை ஸ்கூல்ல பிள்ளைங்க கேவலமா பேசுறாங்க. அதுங்க எப்படி இனி நிம்மதியா படிச்சு முன்னேறமுடியும். உலகத்திலே வேறு தொழிலே கிடைக்காத மாதிரி போயும் போயும் இப்படி ஒரு வேலையை செய்திட்டு வந்து நியாயம் வேற பேசுறீங்களே. உங்களுக்கு வெட்கமாய் இல்லை?" என முகத்தில் உமிழாத குறையாய் திட்டித்தீர்த்து விட்டாள் மனைவி.

நேரே நின்றுகூட பேசாத மனைவி இப்படி பேசியதை தாங்கிக் கொள்ள முடியவில்லை சுப்ரமணியத்திற்கு. உடனே வீட்டை விட்டு வெளியேறினான். நேராக சாராயக்கடைக்குப் போய் வேண்டும் மட்டும் குடித்து விட்டு இரவு ஒன்பது மணிக்கு மேல் வீட்டுக்குத் திரும்பினான். அவன் திரும்பும் போது அவனுக்காக யாரும் காத்திருக்கவில்லை. எல்லோரும் படுக்கைக்குச் சென்றுவிட்டார்கள். சாப்பாட்டை எடுத்து வைத்துவிட்டு மனைவி சங்கீதாவும் அன்று பிள்ளைகளோடு போய் படுத்துக் கொண்டாள். சாராய வெறி நன்கு தலைக்கு ஏறிவிட்டிருந்த நிலையில் சாப்பாட்டைத் தொட்டுக்கூட பார்க்காமல் போய் கதவை சாத்தித் தாழிட்டுக் கொண்டு கட்டிலில் அமர்ந்தான். எல்லோரையும் ஒருமுறை நினைத்துப் பார்த்தான். எல்லோர் மேலும் அவனுக்கு அளவு கடந்த வெறுப்பு போதையைவிட அதிகமாக இருந்தது. 'இந்த நன்றி கெட்ட உலகத்தில் இனி உயிரோடே இருக்கக்கூடாது' முடிவு எடுத்தவனாய் சாராயக்கடைக்கு போக முதலில் ஒரு கடையில் இரகசியமாக வாங்கி மறைவாக வைத்திருந்த இரண்டு விஷக்குப்பிகளை எடுத்தான். இரண்டையும் உடைத்தான். மூடிகளை வீசிவிட்டு கண்ணை மூடிக்கொண்டு இரண்டையும் ஒரே மூச்சில் குடித்துவிட்டு படுக்கையில் சாய்ந்தான். கண் தானாகவே மூடத் தொடங்கியது.

மறுநாள் காலை விடியத்தொடங்கிய போது "ஐயோ! என் ராசா என்ன தவிக்க விட்டு விட்டு போயிட்டீங்களே.. இனி நான் என்ன செய்வேன்" என்று ஒரு குடும்பமே கதறும் ஒப்பாரிச்சத்தம். சத்தம் கேட்டுத் திடுக்குற்று எழுந்து ஜன்னலை திறந்து பார்த்தபோது, பக்கத்து வீட்டில் ஒரே கூட்டம். செத்துப் போனது பக்கத்து வீட்டுத் தாத்தா என்பதை உணர்ந்து கொண்ட சுப்ரமணியம் "அப்படியானால் நான்...... நான் சாகவில்லையா" தன்னைத்தானே கேட்டுக் கொண்டு கீழே கிடந்த விஷக் குப்பிகளைப் பார்த்தான். அதில் எறும்பு மொய்த்துக் கொண்டிருந்தது. அதைப்பார்த்ததும் அவனுக்குள் சிரிப்பு வந்துவிட்டது! 'விஷத்தைக்கூட விஷமாய் விற்காமல் அதிலும் கலப்படம் செய்துள்ளார்கள். இப்படி இன்னும் எது எதிலோ எப்படியெப்படியெல்லாமோ கலந்திருக்க ஒரு சின்னக் கலப்படத்தை செய்துவிட்டு அநியாயமாய் பெண்டாட்டி பிள்ளைக் குட்டிகளை விட்டுவிட்டு சாகப்பார்த்தேனே! எவ்வளவு பெரிய மடத்தனம்' என்று புத்தி தெளிந்தவனாய் விஷத்தில் கலப்படம் செய்தவனுக்கு நன்றி கூறிக்கொண்டு கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான். வாசலில் தெரிந்த வெளிச்சம் வாழ்க்கைக்கும் கிடைத்தது போலிருந்தது அவனுக்கு.

**கட்டாரிலிருந்து பூண்டுலோயா மெய்யன் நட்ராஜ்**

# அவன் நினைத்தானா?

விக்னேஷ்-கைக்கடிகாரத்தைப் பார்த்தான். ஐந்தரையாகி இருந்தது. சுனேத்திரா இன்னமும் வரவில்லை. ஐந்து மணிக்கெல்லாம் வருவதாகச் சொல்லியிருந்தாள். அவன் மூன்று மணிக்கே வந்துவிட்டான். அந்த பூந்தோட்டத்தை கிட்டத்தட்ட பத்து முறை சுற்றி வந்துவிட்டான். அவன் அப்படியே புல்தரையில் உட்கார்ந்தான்.



சுனேத்திரா-விக்னேஷின் தெருவுக்கு மூன்றாவது தெருவில் இருப்பவள். சுமார் ஒருவருடமாக அந்த வீட்டில் வாடகைக்கு இருக்கிறாள். கடந்த ஏழெட்டு மாதங்களாகத்தான் விக்னேசுடன் பழக்கம். விக்னேசுக்கு பாலரூபன் என்றொரு அண்ணன் இருக்கிறான். பாலரூபன் வங்கியொன்றில் பணிபுரிகிறான். விக்னேஷ்-தனியார் நிறுவனமொன்றில் முகாமையாளனாக இருக்கிறான். இருவரும் சேர்ந்தே பஸ்ஸில் வேலைக்குச் செல்வார்கள். ஆனால் கடந்த சில மாதங்களாக விக்னேஷ் தனியாகவே சென்று விடுகிறான்-காரணம் சுனேத்திரா. சுனேத்திராவின் மேல் அவனுக்குக் காதல். அவளும் அவனுடன் கலகலப்பாக கதைப்பாள். ஆனால் அவள் அவனை காதலிக்கிறாளா என்று தெரியவில்லை. சுனேத்திரா மாநிறம்தான். ஆனால் அவள் முகத்தில் ஒரு கவர்ச்சி இருந்தது. நடையில் துள்ளல் இருந்தது. கடைந்தெடுத்தாற்போல அளவான உடலமைப்புடன் அம்சமாக இருந்த அவளை விக்னேஷ் மனமார நேசித்தான். ஆனால் அவனால் அதை அவளிடம் சொல்ல முடியவில்லை. சொல்லாமலேயே அவளை நேசித்தவனுக்கு ஒரு இன்ப அதிர்ச்சி. இன்று அவனை சந்தித்து பேச வேண்டும் என்று சொன்னாள். முக்கியமான விஷயமொன்று பேச வேண்டுமென்றாள். இனியென்ன நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அவளிடம் காதலை சொல்லிவிட வேண்டியதுதான். நிச்சயமாக அவளும் அவனை நேசிக்கிறாளோ? அதைப்பற்றி பேசத்தான் அழைத்திருப்பாளோ... அவனுக்கு ஆகாயத்தில் மிதப்பதைப் போல இருந்தது.... காதல் நோய்க்கு மாற்று மருந்துண்டு அதுதான் திருமணம்-

நேரம் ஓடியது. விக்னேஷ் புல்தரையைவிட்டு எழுந்தான். அப்போது-தூரத்தில் சுனேத்திரா வந்துகொண்டிருந்தாள். அவன் பரபரப்பானான். இதயம் வேகமாக துடித்தது. சந்தோஷத்தில் என்ன செய்வதென்றே தெரியவில்லை.

அவள் அவனை நெருங்கினாள்.

"என்ன விக்னேஷ் ரொம்ப நேரமா காத்திருக்கிறீங்களா...?"

"இ... இல்லை சுனேத்திரா.. இப்பதான் வந்தேன்..."

சற்று நேரம் அங்கே அமைதி நிலவியது.

"விக்னேஷ்.. நாம அந்த மரத்துகிட்ட உட்கார்ந்து பேசுவோமா..?" இருவரும் மரத்தினருகிலே புல் தரையில் எதிரும் புதிருமாக அமர்ந்தார்கள். விக்னேஷின் விரல்கள் நுனி புல்லை மேய்ந்தது. சுனேந்திரா-தலைகுனிந்தவாறு பேசத் தொடங்கினாள்.

"உங்ககிட்ட ரொம்ப நாளா ஒரு விஷயம் பேச நினைச்சேன். ஆனா தயக்கமாக இருந்திச்சி... ஆனா இந்த மாதிரி விஷயங்கள்ல காலதாமதம் செஞ்சா அப்புறம் கஷ்டப்படப் போறது நான்தானே... அதுதான் ஒரு முடிவோட உங்களை சந்திக்க நினைச்சேன்..."

விக்னேஷ் உடல் முழுவதும் உற்சாகம் பரவியது. மனதுக்குள் மத்தாப்பு சிதறியது. அவன் எதுவுமே பேசாமல் இருந்தான். சுனேத்திரா மறுபடியும் பேசத் தொடங்கினாள்.

"இந்த காலத்துல சின்ன உதவி செஞ்சாலும் அதுக்கு கைமாறு எதிர்பார்க்கிறவங்கதான் அதிகமா இருக்காங்க. ஒருத்தருக்கொருத்தர் உதவுறது, ஒத்தாசையா இருக்கிறதுமாதிரி நல்ல விஷயங்கள் ரொம்பவும் குறைஞ்சிக்கிட்டு வருது. உங்க அண்ணன் பாலரூபனும் நானும் ஒண்ணாதான் பேங்க்ல வேலை செஞ்சிக்கிட்டிருக்கோம். ஆனா அவர் அவ்வளவா என்கிட்ட பேசமாட்டாரு... மத்தவங்களுக்கு உதவி செய்யிறதுல முன்னுக்கு நிப்பாரு. ஒரு வருஷத்துக்கு முன்னால என் அக்காவுக்கு கல்யாணம் நடந்திச்சி.. தபால் ஊழியரா இருந்து ஓய்வு பெற்ற அப்பா தன்னோட சேவைக்காலப் பணத்தை நம்பி கல்யாணத்தை வச்சிட்டாரு. ஆனா சரியான நேரத்துல பணம் கைக்கு வரல்ல. அப்பாவோட நண்பர் ஒருத்தர்தான் கடைசி நேரத்துல உதவி செஞ்சாரு. ஆனா அவரோட பொண்ணு கல்யாணம் நடக்குறப்ப பணம் வேணும்னாரு... அப்பாவோட துரதிஷ்டம் அவருக்கு வரவேண்டிய பணம் வந்து சேரல. இதற்கிடையில அவரோட நண்பரோட பொண்ணுக்கும் கல்யாணம் பேசிட்டாங்க. உடனடியா குடுத்த பணம் வேணும்னுட்டாங்க.. அப்பா ரொம்ப துடிச்சிப் போயிட்டாரு... தனக்கு தக்க சமயத்துல உதவி செஞ்ச நண்பனுக்கு கை குடுக்க முடியாம போயிடுமோன்னு துடிக்க ஆரம்பிச்சுட்டாரு... நான் ஏற்கனவே பேங்க்ல லோன் எடுத்துட்டதால என்னாலயும் எதுவும் செய்யமுடியாது. என்ன செய்யிறது... யார்கிட்ட கேட்கறது... சோர்ந்து சோகத்துல இருந்த என்கிட்ட என்ன விஷயம்னு உங்க அண்ணன் கேட்டாரு... நான் தயங்கி தயங்கி விஷயத்தைச் சொன்னேன். அவ்வளவுதான்... கொஞ்சமும் தாமதிக்கலை. உடனடியா தன்னோட சேமிப்புல இருந்த பணத்தை தூக்கித் தந்தாரு... நான் இதை எதிர்பார்க்கலை. அப்புறம் அப்பாவோட பணம் வந்ததும் வட்டியோட அவர்கிட்ட குடுத்தேன். ஆனா வட்டி வேணாம்னுட்டாரு.. அவரோட நல்ல மனம், உதவி செய்யிற குணம் பிரதியுபகாரம் எதிர்பார்க்காம உபகாரம் செய்யிற உயர்ந்த உள்ளம் எல்லாமே எனக்கு பிடிச்சுப் போச்சி. என்னையறியாமலேயே நான் அவரை நேசிக்கத் தொடங்கினேன். வாழ்ந்தா இப்படிப்பட்ட ஒரு நல்லவரோடத்தான் வாழனும்னு முடிவு செஞ்சேன். ஆனா அவர் என்ன நினைக்கிறார்னு தெரியலை. இதைப் பத்தி நேரடியா என்னால எப்படிப் பேச முடியும். மனசுக்குள்ளேயே பூட்டி வச்சிருந்த இந்த விஷயத்தை யார்கிட்டேயாவது சொல்லணும்னு நினைச்சேன். மூணாவது மனுசங்ககிட்ட சொல்லுறதைவிட அவரோட தம்பி உங்கக்கிட்ட சொன்னா பிரயோசனமா இருக்குமேன்னுதான் உங்கக்கிட்ட சொன்னேன். இந்த விஷயத்துல நிச்சயமா நீங்க எனக்கு உதவி செய்வீங்கன்னுற நம்பிக்கை எனக்கு இருக்கு...!"

அவள் சொல்லிக் கொண்டே போனாள். அவன் காதுகளில் அதற்குப் பின் அவள் சொன்னது எதுவுமே விழவில்லை. கடைசியில் அவன் நினைத்தது ஒன்று நடந்தது ஒன்றாகிவிட்டது.

இனி என்ன செய்வது? அவளை மனைவியாகத்தான் அடைய முடியவில்லை. சரி அண்ணியாக சரி இருக்கட்டும். அண்ணனுக்கு ஏற்றவள்தான். அவனுக்கு ஏற்றவள் நிச்சயமாக எங்காவது இருப்பாள். அவள் கிடைக்கும் வரை காத்திருக்க வேண்டியது தான். நல்லவேளை அவசரப்பட்டு அவன் வாய் திறந்து வார்த்தைகளை கொட்டாமல் இருந்துவிட்டான். இப்போது அவனிடத்திலிருந்து ஒரு பெரிய பெருமூச்சு மட்டும் தான் வெளிப்பட்டது. ■

**பாலா.சங்குப்பிள்ளை**

# அவள் தோள்களிடம் அபயம்....!

**யா**ழினி நடந்து வந்துகொண்டிருந்தாள். இதோ.... சில விநாடிகளுக்குள் அவள் அபயனைச் சமீபித்து விடுவாள்.

அபயன் மனம் தொண்டை வரைக்கும் வந்து அடைத்து நின்றது. நெருப்பு மூட்டிய பற்றைக்குள்ளிருந்து வெளியேறும் பாம்புகள் போல உடலெங்கும் இரத்தோட்டம் சீறிப் பரந்தது.

மாலைக் கதிர்ப் புகைப் புலத்தில் அவள் கோயில் சிலை போலத் தெரிந்தாள்.

முன்புறம் எது பின்புறம் எது என்று சட்டெனக் கண்டுபிடிக்க முடியாதபடி செய்யப்பட்டிருக்கும் கோயில் சிலைகளைப் பார்த்து அபயன் தடுமாறியிருக்கிறான்.

கல்லில் நான்கு பந்துகளை எடுத்து முன்னுக்கிரண்டு பின்னுக்கிரண்டாகப் பொருத்திவிட்டிருக்கும் சிற்பிகளின் பேராசை அவனுக்கு வியப்பை உண்டாக்கும்.

சிலைகளில் ஆண், பெண் வடிவங்களை எவ்வளவு துல்லியமாய் வேறுபடுத்தியிருக்கிறார்கள்! இன்றைய வாழ்வில் ஒரே மாதிரி தலைமயிரை வளர்த்துக் கொண்டு, ஒரே மாதிரி உடைகளையும் அணிந்துகொண்டு திரியும் ஆண், பெண்களைப் பார்த்து வித்தியாசப்படுத்துவதில் ஒருவேளை ஏமாந்து போகலாம். ஆனால், சிலைகளைப் பொறுத்தவரையில் இந்த ஏமாற்றம் ஏற்பட நியாயமே இல்லை. பெண் சிலை என்றால் கழுத்துக்குக் கீழே இறங்கியதும் இரண்டு குன்றுகளும், அதற்கும் கீழே இறங்கியதும் அந்தக் குன்றுகள் திசை திரும்பிப் பின்பக்கமாகப் போய்விடுவதையும் பார்க்கிறவர்கள் எவ்வளவுதான் முட்டாள்களாயிருந்தாலும், அது ஆணா பெண்ணா என்று முடிவு செய்வதில் தவறிழைக்கமாட்டார்கள்.

அந்தச் சிற்பிகளின் தாராள மனதுக்கு நியாயம் சேர்ப்பவளாக இருந்தாள் யாழினி.

மேலும் கீழுமிருந்த விஸ்தார வளப்பத்தில் பாவம் இடை, பரிதாபத்துக்குரிய வகையில் ஒடுங்கிக் காணப்பட்டது.

பட்டுப் பீதாம்பரங்களுடன் இருந்தவர்கள் மத்தியில் வந்து நின்ற கந்தலுடை ஏழைபோல, அது தன்னைக் காட்டிக் கொள்ளவே நாணி ஒடுங்கி மறைவதுபோலத் தோன்றியது.

அபயன் தன்னையே வைத்தகண் வாங்காமல் உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டதும் யாழினியின் நடையில் தயக்கம் ஏற்பட்டது.

தலை குனிந்தபடியே வந்து அவனருகில் அமர்ந்து கொண்டாள். அவளுக்கு மூச்சிரைத்தது.

அவன் பார்வைக் குறுகுறுப்பு ஏற்படுத்திய வெட்கத்திலா அல்லது நடந்துவந்த களைப்பிலா என்று தெரியாமல் முன்புறக் குன்றுகள் நிமிர்ந்து தாழ்ந்தன.

அதற்குமேல் அவனால் நாகரிகம் காக்க முடியவில்லை.

அவள் தோள்களைப் பற்றி இழுத்து நெஞ்சோடு இறுக அணைத்தபடி கன்னத்திலும் இதழ்களிலும் முத்தினான்.

அவளுக்கு மேலும் மூச்சிரைத்தது. திமிறி விடுவித்துக்கொள்ள ம்யன்றாள்.

அவனோ, வெறிகொண்டவன் போல அவளை இழுத்து முழுமையாகத் தன் கைகளுக்குள் எடுத்துக் கொண்டு கன்னம், மூக்கு, கண்கள், காதுமடல், கழுத்து என்று எல்லா இடங்களிலும் தன் முகத்தை அழுத்தி அவளுக்குள் நுழைந்து கொள்ள முயல்பவன் போல முட்டி மோதினான்.

அவன் பிடரி மயிர்களை கைகளால் பற்றி அவன் முகத்தை நிமிர்த்தியவள், "என்ன?" என்றாள்.

அவன் பதில் கூறாமல் அவள் தோள்களில் தலையைச் சாய்த்துக் கழுத்தில் இதழால் தொட்டான்.


இப்போது அவனுக்கு மூச்சு வாங்கியது.

"என்ன ராஜா?" என்றாள் அவள் மீண்டும்.

"அபயன் உன் தோள்களிடம் அபயம் கேட்கிறான்..."

அவன் தலையைத் தன் தோளில் சாய்த்தபடி தலைமுடிகளிடையே விரல்களால் வருடியபடி, இன்றைக்கென்ன கட்டுப்பாடுகளெல்லாம் சீக்கிரமே தளர்ந்து விட்டன... நீண்ட நேரம் காத்திருந்தாயா?" என்றாள் குழைவாக.

"ம்." என்று முனகியவன், சிறு குழந்தை போல முகத்தை இறக்கி குன்றுகளிடை ஒளித்தான்.



அவன் சமனப்படும்வரை அவள் காத்திருந்தாள்.

பிறகு மெல்ல அவன் முகத்தை நிமிர்த்தி மிக மென்மையாக இதழ்களில் தன் இதழ்களை ஒற்றினாள்.

பின்னும் அவை பிரிய மனமின்றிச் சில நிமிடங்களுக்குச் சேர்ந்தே இருந்தன.

பிறகு அபயன் மெல்ல முணுமுணுத்தான்.

"என் புலன்கள் எல்லாவற்றையும் அழித்து விட்டு, அவற்றுக்குப் பதிலாக நீ ஒருத்தியே நிறைந்து விடுகிறாய். நான் பெறும் புத்துயிர், உன்னையன்றி வேறெதையும் உணர முடியாத ஒற்றைப் புலன் உடம்பையே கொண்டிருக்கிறது... 'உன்னைத் தழுவிடில் உன்மத்தமாகுது' என்று சொன்னவனும், இதைச் சொல்லும் வழி தெரியாமல் சோர்ந்து போய்த்தான் சொல்லியிருப்பான் போலும்..."

இடைசுற்றிக் கிடந்த கரத்தை மேலும் இறுக்கினான். அவளிடமிருந்து முனகலும் மூச்சும் வெளிப்பட்டது.

"என்ன புத்துயிர்?" என்றாள்.

அவன் மறுகையால் அவள் தோள்களைச் சுற்றி அணைத்து முகத்துக்கு நேரே முகம் பார்த்துச் சொன்னான். "உன்னை அணைத்திருக்கும் பொழுதினில் என் உடம்பினுள்ளே புதிதாய் ஒரு செடி குருத்துவிடுவதைப் போல உயிர் தளிர்ப்பதை உணர்கிறேன். உன் ஒரு தீண்டலில் உயிர் குருத்து விடுகிறது. மேலும் தீண்டத் தீண்ட கணத்துக்குக் கணம் புது உயிர் பெறுகிற அனுபவம் எனக்கு நேர்கிறது..." சற்று நிறுத்தி விட்டு-

"என்னைப் புரிந்து கொள்கிறாயா?" என்றான்.

"ஹ்கும்..." என்ற அவள் ஒலிக்குறிப்புக்கு ஆமா, இல்லையா பொருள் என்று தெரியாத குழப்பத்தோடு அவளுடலைத் தன்னோடு அழுத்தி, "இந்தத் தோள்கள் அமிழ்தத்தினால் ஆனவை போலும். அதனால்தான் எனக்குப் புத்துயிரளித்தபடி இருக்கின்றன" என்றான்.

தருவது

முழடில்யன்

அவள் மேலும் இறங்கிய குரலில் "ஹ்கும்" என்றாள்.

உறுதோ றுயிர்தளிர்ப்பத்
தீண்டலாற் பேதைக்
கமிழ்தின் இயன்றன தோள்.

(குறள்: 1106)

# ஸ்போர்ட்ஸ்

## மில்லியன் டொலர் வீரர்



**அ**வுஸ்திரேலிய கிரக்கெட் சபை, அவுஸ்திரேலிய அணியைச் சேர்ந்த சிறந்த வீரர் ஒருவருக்கு வருடா வருடம் ஒரு மில்லியன் அவுஸ்திரேலிய டொலர்களை (நம் நாட்டு மதிப்பில் சுமார் 4 கோடியே 80 இலட்சம் ரூபா) பரிசாக வழங்கவுள்ளது.

4 வருடங்கள் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் ஆட்டக்காரராக ஒப்பந்தம் செய்யப்படுபவர்களில் ஒருவர் இந்தப் பரிசுத் தொகையைப் பெறுவார்.

இதன்படி முதலாவதாக ஒரு மில்லியன் அவுஸ்திரேலிய டொலர்களைப் பெறும் வீரராக எதிர்பார்க்கப்படுகிறார் உலகின் அதிவேகப் பந்துவீச்சாளரான பிரெட் லீ.

உலகிலேயே மிகச் சிறந்த கிரிக்கெட் வீரர்களைக் கொண்ட அணியாக அவுஸ்திரேலியாவே திகழ்கிறது. இதேபோல் அதிக ஊதியம் பெறும் அணியாகவும் அவுஸ்திரேலியாவே இருக்கிறது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் ஏராளமான பணம் குவிந்து கிடக்கிறது. அவுஸ்திரேலிய வீரர்களுக்கு மட்டுமன்றி, அவுஸ்திரேலியாவில் உள்ள கிரிக்கெட் அணிகள் பலவற்றின் மேம்பாட்டுக்காகவும் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை அதிக பணத்தைச் செலவிட்டுவருகிறது.

2001/02 பருவகாலப் பகுதிக்கு 25 பேர் கொண்ட அவுஸ்திரேலிய அணி தெரிவு செய்யப்பட்டு, இதிலிருந்தே ஒரு மில்லியன் (10 இலட்சம்) டொலர் பெறும் சிறந்த வீரர் ஒருவர் தெரிவு செய்யப்படவிருக்கிறார்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையால் இந்தப் பரிசுத் தொகை வழங்கப்பட்டாலும், அவுஸ்திரேலிய கிரிக்கெட் தேர்வுக் குழுவினாலேயே சிறந்த வீரராகத் தெரிவு செய்யப்படுகிறார். இதில் சிறந்த வீரருடன் அணித் தலைவர், உபதலைவர் ஆகியோருக்கும் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

அவுஸ்திரேலியாவே இதுவரை காலமும் அதிக ஊதியம் பெறும் கிரிக்கெட் அணியாக திகழ்ந்து வருகிறது. இது போதாதென்று இவர்களது ஊதியம் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

2000/01 பருவ்காலப்பகுதி வரை 6 இலட்சத்து 25 ஆயிரம் அவுஸ்திரேலிய டொலர் (சுமார் 3 கோடி ரூபா) பெற்று வந்த அவுஸ்திரேலிய வீரர்களின் ஊதியம் 2004/05 காலப்பகுதியில் இருந்து 11 இலட்சத்து 62 ஆயிரம் அவுஸ்திரேலிய டொலர்களாக (சுமார் 5 கோடியே 57 இலட்சத்து 76 ஆயிரம் ரூபா) அதிகரிக்கப்பட்டுள்ளது.

## அறிமுகமாகும் புதுமுகங்கள்

**இ**ங்கிலாந்து-பாகிஸ்தான் அணிகளுக்கிடையே நடைபெறும் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் இங்கிலாந்து சார்பாக 2 புதுமுகங்கள் அறிமுகமாகிறார்கள்.

ஒருவர் இடது கை துடுப்பாட்ட வீரர் இயன் வோட். இவர் சர்ரே அணி வீரர். அடுத்தவர் இடதுகைச் சுழற்பந்து வீச்சாளர் றியான் சைட்பொட்டம். இவர் யோக்ஷயர் அணி வீரர்.

நஸீர் ஹுஸைன் தலைமையிலான இங்கிலாந்து அணியில், சகல துறை ஆட்டக்காரரும் சிலகாலம் அணியில் இல்லாமல் இருந்தவருமான டொமனிக் கோர்க் மறுபடி சேர்க்கப்பட்டிருக்கிறார்: சிறந்த துடுப்பாட்ட வீரர்களான கிரஹாம் ஹிக் மற்றும் மார்க் ராம் பிரகாஷ் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

லோர்ட்ஸ் மைதானத்தில் மே 17ம் திகதி இங்கிலாந்து-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் ஆரம்பமாகின்றது.

இங்கிலாந்து கவுண்டி அணிகளுள் ஒன்றான கென்ட் அணிக்கு எதிராக நடந்த முதல்தரப் போட்டி ஒன்றில் பாகிஸ்தான் வீரர் சயிட் அன்வர் 201 ஓட்டங்களை விளாசினார்.

கென்ட் அணிக்கு எதிராக இதுவரை 2 வெளிநாட்டவர்களே 2 இரட்டைச் சதங்களை அடித்துள்ளனர். அவுஸ்திரேலியாவின் டொன் பிரட்மன், தெ.ஆபிரிக்காவின் கிரஹாம் பொல்லொக் ஆகியோரே அந்த இருவர்.

மூன்றாவதாக இரட்டைச் சதம் அடித்த அன்வரின் இந்த இரட்டைச் சதத்தில் 5 சிக்ஸர்களும் 26 பவுண்டரிகளும் அடக்கம்.

# சிந்தியா

## பதில்கள்

✉ சிந்தியா, தொலைக்காட்சி, உதயதரிசனம் நிகழ்ச்சியில் பெரும்பாலும் இரண்டு வைத்தியர்களே உரையாடிக் கொள்கிறார்களே... அப்படியானால், அறிவிப்பாளர் ஒருவர் ஏன் அங்கு இருக்கிறார்?

எம்.எம். முகமட், குருநாகல்.

'அடுத்து, தொலைபேசி அழைப்பு ஒன்று வந்திருக்கிறது'என்பதைச் சொல்ல.



ஜோதிகா

✉ ஜோதிகாவுக்குத் தமிழ் வாசிக்கத் தெரியுமா? தமிழ் ரசிகர்களின் கடிதங்களை யார் வாசிப்பார்?

க. சுதர்சன், முறையூர்.

செயலாளர்தான். (ஏதோ ஒரு சில கடிதங்களையாவது.)

✉ இளைய தலைமுறை பொய்யாகத்தான் வளர்கிறதா?

எம்.தவராஜா, பெரிய நீலாவணை.

பொய்களில் முதிய பொய் என்ன? இளைய பொய் என்ன?

✉ கொழுகொம்பில்லாத முல்லைக்கு கையிலிருந்த வேலையோ வாளையோ கொடுத்து நிறுத்திவிட்டு வராமல், தன் தேரை நிறுத்திவிட்டு வந்த மன்னன் முட்டாளில்லையா?

ம. விஜயரூபன், வவுனியா.

எல்லா நேரங்களிலும் நம்மை அறிவே வழிநடத்துவதில்லை. அறிவினால் மட்டுமே செலுத்தப்படுவதாக இருந்தால் இங்கே இலக்கியம் இல்லை; இசை இல்லை; காதல் இல்லை.

✉ சிந்தியா, எல்லோரும் நடிக, நடிகையரின் முகவரியைக் கேட்கிறார்கள். அனுப்பும் கடிதங்களுக்கு அவர்கள் பதில் போடுவார்களா? போடுவார்கள் என்றால் எனக்கு என் அன்பு நடிகை மீனாவின் முகவரியைத் தரமுடியுமா?

எஸ்.சச்சி. ஸ்ரீநாராயணபுரம்.


இரசிகர்களின் கடிதங்களுக்குப் பதில் போடுவதற்கென்றே அவர்கள் செயலாளர் ஒருவரை வைத்திருக்கிறார்கள். மீனா சொல்வது போன்ற ஒரு பதிலை மீனாவின் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ள விரும்பினால்- 58, 2வது தெரு, வெங்கடேச நகர் பிரிவு, சென்னை 600 092. என்ற முகவரிக்கு எழுதிப் பெறுங்கள்.

✉ கடவுள் இருக்கிறாரா, இல்லையா?

வி. கமலராணி, மவுண்ட் லவேனியா.

நம்புகிறவர்களுக்கு இருக்கிறார். நம்பாதவர்களுக்கு இல்லை. நம்பிக்கையுள்ள ஒருவனுக்கு அவசரமாக ஆயிரம் ரூபா பணம் தேவைப்பட்டது. கடவுளிடமே கேட்க நினைத்து அவருக்கு ஒரு கடிதம் எழுதினான். அவருடைய சரியான விலாசம் தெரியாததால் 'கடவுள், சொர்க்கம்' என்று விலாசத்தை எழுதினான். வினோதமான அந்தக் கடிதத்தைப் பார்த்த அந்தத் தபால் நிலைய அதிபர் அதை உடைத்து வாசித்தார். அவருக்கு மிகுந்த பரிதாபம் ஏற்பட்டது. கடிதத்தை எழுதியவன் மிகவும் கஷ்டத்தில் இருக்க வேண்டும் என்றுணர்ந்து, அலுவலகத்தில் உள்ளவர்களிடமிருந்து கொஞ்சங் கொஞ்சமாகச் சேகரித்து கிடைத்த 950 ரூபாவை அவனுக்கு அனுப்பி வைத்தார்.

பணத்தை வாங்கிக் கொண்ட அவன் மிகுந்த கோபத்தோடு கடவுளுக்கு அடுத்த, கடிதத்தை எழுதினான். "கடவுளே, அடுத்தத் தடவை நீர் எனக்கு பணம் அனுப்பும்போது இந்தப் போஸ்ட் மாஸ்டர் மூலம் அனுப்ப வேண்டாம். அவர் தன்னுடைய கொமிஷனாக 50 ரூபாவை எடுத்துக் கொள்கிறார்."



'மதிலுகள்' படத்தில் மம்முட்டி

✉ நான் ஏதும் தவறுவிட்டால் எனது அப்பா " முளைச்சு மூணு இலை விடவில்லை..." என்கிறார். அந்த மூணு இலையும் என்ன?

ஜே. லக்கி, பெரியகல்லாறு.

வித்து முளைக்கும்போது இரண்டு இலைகள்தான் முதலில் வெளிவரும். மூன்றாவது இலை வர சிறிது காலம் பிடிக்கும் அதுதான் அந்த மூன்றாவது இலை உங்களுக்கு இன்னும் வரவில்லை என்கிறார். அதுசரி, உங்களுக்கும் வயது இருபதுக்குள்தானா?

✉ குமுதத்தில் வைக்கம் முஹம்மது பஷீர் என்ற எழுத்தாளரின் "என் மரணக் குறிப்பிலிருந்து" என்ற தொகுப்பின் ஒரு சிறுபகுதியை "சலாம்" என்று தலைப்பிட்டு பிரசுரித்திருந்ததைப் பார்த்தேன். வைக்கம் முஹம்மது பஷீர் என்பவர் யார்? அவரைப் பற்றி...?

எஸ்.எச்.ஜெனீறா, கல்முனை-07.

மலையாள எழுத்தாளர். கேரளாவில் வைக்கம் என்ற இடத்தில் பிறந்தவர். ஆனால் ஒன்பதாம் வகுப்புப் படிக்கும் போதே வீட்டைவிட்டு சொல்லிக் கொள்ளாமல் ஓடி ஊர் ஊராக அலைந்தவர். சிறைச் சென்றவர். இந்திய சுதந்திரப் போராட்டத்தின்போது தீவிரவாதத்தில் நம்பிக்கைவைத்துச் சிலகாலம் செயற்பட்டவர். சமூகம் தாழ்வாகக் கருதும் வேலைகள் அனைத்தையுமே பார்த்தவர். இமயமலைச் சாரல்களிலும், கங்கைக் கரைகளிலும் இந்து சந்நியாசியாகவும், சூஃபியாகவும் சில காலம் வாழ்ந்தவர்.

வாழ்க்கை தனக்குத் தந்த துக்கங்களின் சுமையை, ஆழமும் அகலமுமான அனுபவங்களை பல்வேறு படைப்புகளின் வாயிலாக சமூகத்துடன் பகிர்ந்துகொண்டார்.

தான் பார்த்த இழிவான பணிகள், வறுமை, குடிப்பழக்கம், மனநோய், ஐம்பது வயதில் செய்துகொண்ட திருமணம் போன்ற சகல விஷயங்களையும் நகைச் சுவையுடன், ஆனால் தீவிரத்தின் கூர் மழுங்காமல் கீழ்த்தட்டு மக்களின் மனமொழியோடு இணையும் கொச்சையில் படைப்பாக்கினார்.

'இளம் பருவத்துத் தோழி', 'பாத்துமாவின் ஆடு', 'எங்கள் தாத்தாவுக்கு ஒரு யானை இருந்தது' ஆகிய அவரது படைப்புக்கள் தமிழிலும் பெயர்க்கப்பட்டிருக்கின்றன. 'மதிலுகள்' அடூர் கோபாலகிருஷ்ணனின் இயக்கத்தில் படமாக வந்தது.

1910ல் பிறந்த பஷீர் 1994ல் தனது 84வது வயதில் மறைந்தபோது, கேரள மக்கள் அதை தேசிய துக்கதினம் போல் அனுஷ்டித்து மறைந்த தங்கள் மாபெரும் எழுத்தாளனுக்கு மரியாதை செலுத்தினார்கள்.

# மன்னாதி மன்னன்

58

## பெண்ணுருவில் வந்த காதலன்


பிராமணர் வேடம் பூண்டு வந்திருந்த விக்கிரமாதித்தனையும் பட்டியையும் மரியாதையோடு வரவேற்று உபசரித்த மயிர் மாணிக்கம் செட்டி, அவர்கள் இருவரையும் தனது இல்லத்துக்கு அனுப்பிவைத்தார்.

அங்கு வந்து சேர்ந்த இருவரையும் மயிர் மாணிக்கம் செட்டியின் மகளான அமராவதி அடையாளம் கண்டு கொண்டாள். அவர்கள் சமைத்து உண்பதற்காக ஒரு பானையையும் காய்கறி பதார்த்தங்களையும் ஒரு பெட்டியில் வைத்து அமராவதியும் தோழிகளும் அவர்களிடம் கொண்டு வந்து கொடுத்தனர்.

அந்தப் பெட்டியினுள் விக்கிரமாதித்தன் பார்க்கத்தக்கதாக இரு கரும்புத்துண்டுகளை அமராவதி ஒன்றுடன் மற்றொன்றைச் சேர்த்து வைத்தாள். அப்போது பிராமண வாலிபன் உருவிலிருந்த விக்கிரமாதித்தனைப் பார்த்து தன் கண்களால் சாடை காட்டினாள்.

அமராவதியும் தோழிகளும் அங்கிருந்து சென்றபின் விக்கிரமாதித்தனும் பட்டியும், அமராவதி இரு கரும்புத் துண்டுகளை அப்பெட்டியினுள் வைப்பதற்கான காரணம் என்னவாக இருக்கும் என்று ஆலோசித்தனர்.

மிகக் கூர்மையான புத்தி படைத்த பட்டி, “இந்த ஊரில் கரும்பினிலியாள் என்றொரு பெண்ணிருக்கிறாள், அவள் மயிர் மாணிக்கம் செட்டியின் மகள் அமராவதியின் மிக நெருங்கிய சினேகிதி. அவளுடைய வீட்டில் நாம் இருவரும் போய்த் தங்கி



இருக்கவேண்டுமென்று அமராவதி இதன் மூலம் நமக்கு தெரியப்படுத்தியுள்ளாள்” என்று விளக்கம் அளித்தார். அவர்கள் இருவரும் கரும்பினிலியாள் வீட்டைக் கண்டு பிடித்து அங்கு போய்ச் சேர்ந்தார்கள். அவளிடம் ஏற்கனவே அமராவதி இவர்களுடைய வருகையைப் பற்றிக் கூறியிருந்தமையினால், பட்டியையும் விக்கிரமாதித்தனையும் வரவேற்று உபசரித்தாள்.

அடுத்து மயிர்மாணிக்கம் செட்டியார் வீட்டுக்கு விக்கிரமாதித்தனை எவ்வாறு அழைத்துச் சென்று அமராவதியிடம் சேர்ப்பது என்று மூவரும் திட்டமிட்டனர். அடுத்த நாள் காலை விக்கிரமாதித்தனை அழகான ஒரு பெண் உருவாக கரும்பினிலியாளும் பட்டியும் சேர்ந்து ஒப்பனை செய்தனர். பட்டி ஒரு செட்டியாரைப் போல் வேடமிட்டுக் கொண்டார்.

இருவருமாக கடைத் தெருவை அடைந்தனர். அங்கிருந்த ஒரு கடையில் அந்த ஊரில் “தனவைசியர் எவராவது இருக்கிறார்களா?” என்று விசாரித்தனர். அந்தக் கடைக்காரர் மயிர் மாணிக்கம் செட்டியாரின் கடையைக் காண்பித்து, “இங்கு மயிர் மாணிக்கம் செட்டியார் என்ற ஒருவர் பெரிய தனவந்தர் இருக்கிறார், அவரிடம் போங்கள்” என்று கூறி அனுப்பி வைத்தார்.

ஒரு செட்டியாரும் அவருடைய இளவயது மகளும் போல இருவரும் மயிர் மாணிக்கம் செட்டியாரின் கடையை அடைந்தனர். வேற்றூரில் இருந்து தந்தையும் மகளுமாக வைசிய குலத்தவர் இருவர் அங்கு வந்திருப்பதைக் கண்டு வரவேற்று உபசரித்தார் மயிர் மாணிக்கம்.

மாணிக்கம் செட்டியாரிடம் “ஐயா செட்டியாரே வைசிய இனத்தைச் சேர்ந்த என் பெயர் பட்டின மாணிக்கம் செட்டி. இவள் என் மகள். இவளை இளவயதிலேயே என் மருமகனுக்கு மணம் முடித்துக் கொடுத்தேன். ஆறு மாதங்களில் மீண்டும் வருவதாக கூறிக் கொண்டு மருமகன் கப்பலில் வெளிநாடு சென்றான். ஆனால் இவ்வளவு நாட்களாகியும் அவன் திரும்பி வரவே இல்லை. என்மகள் பெரியவளானதும் தன் கணவனைத் தேடியாக வேண்டும் என்று அடம்பிடித்து என்னுடன் புறப்பட்டு வந்து விட்டாள்.

நான் கடல் கடந்து சென்று என் மருமகனைத் தேடி வரலாம் என்று திட்டமிட்டு இவளையும் அழைத்துக் கொண்டு வந்தேன். நான் சென்று அவளுடைய கணவனை தேடிவரும்வரை தங்களைப்போன்ற ஒரு தனவைசிக குடும்பத்தாருடன் பாதுகாப்பாக விட்டுச் செல்லலாம் என்று கருதி தங்களிடம் வந்தேன். எனவே தாங்கள் தான் எங்களுக்கு உதவிபுரிய வேண்டும்” என்று செட்டியார் வேடத்திலிருந்த பட்டி கேட்டுக்கொண்டார்.

மயிர் மாணிக்கம் செட்டியார் “நல்ல இடமாகப் பார்த்துத்தான் இங்கு வந்திருக்கிறீர்கள். என் வீட்டு நிலையும் இதுதான். எனது மகள் அமராவதியையும், அவள் சிறுமியாக இருக்கும்போது மற்றுமொரு செட்டி மகனுக்கு மண முடித்துக் கொடுத்தேன். அவனும் கடல் கடந்து சென்று வருடங்கள் பல ஆகி விட்டன. இரு வருடங்களுக்கு முன்னர் என் மகள் ருதுவாகி விட்டாள். அப்போது இருந்து தன் கணவனைப் பார்க்க வேண்டும் என்று துடியாகத் துடிக்கிறாள். எனவே உங்கள் மகளை இங்கு எங்களுடன் சில காலம் வாழுமாறு தாராளமாக விட்டுச் செல்லலாம். இவளும் என் மகளும் ஒரே நிலையில் இருப்பதனால் இருவரும் இங்கு கவலையில்லாமல் இருப்பார்கள். நீங்கள் தாராளமாகச் சென்று உங்கள் மருமகனை அழைத்துக் கொண்டு திரும்பி வாருங்கள். முடியுமானால் எனது மருகனையும் காண நேர்ந்தால் அவரையும் அழைத்துக் கொண்டு வாருங்கள்” என்று கூறி விடை கொடுத்தார். பட்டியும் பெண் உருவிலிருந்த மன்னன் விக்கிரமாதித்தனிடம் விடைபெறுவது போல் பாசாங்கு செய்து கொண்டு புறப்பட்டார்.

மயிர் மாணிக்கம் செட்டி தனது மகள் அமராவதியை அழைத்து பெண் வேடத்திலிருந்த விக்கிரமாதித்தனை அறிமுகப்படுத்தி “இப்பெண்ணும் உன்னைப்போன்று கணவனை இளவயதிலேயே பிரிந்தவள்தான். அவளுடைய தகப்பனார் மீண்டும் வரும்வரை இவளுக்கு எக்குறையுமில்லாமல் பாதுகாத்து வைத்திருக்க வேண்டியது உன் பொறுப்பு” என்று கூறினார்.

அமராவதியும், பெண் வேடத்திலிருந்த விக்கிரமாதித்தனும் ஒன்று கூடிவிட்ட பெரும் மகிழ்ச்சியில் ஒருவரை ஒருவர் அணைத்துக் கொண்டு வீட்டினுள் ஓடிச்சென்றனர். காதலர்கள் இருவரும் கருத்தொருமித்து ஒன்றுபட்ட குதூகலத்தில் இருவரும் திளைத்திருந்தனர்.

பகல் பொழுதெல்லாம் இருவரும் பெண் வேடத்துடன் ஆடிப்பாடி ஆனந்தமாகப் பொழுதைக் கழித்தனர். இரவானதும்விக்கிரமாதித்தன் ஆணாக மாறி, தன் ஆசைக்குரிய அமராவதியை காதலியாக ஏற்றுக் களிப்புடன் காலம் கழித்தார்.

அந்த நாட்டு அரசன் ராஜிசிம்மன் ஒரு நாள் தன் அரண்மனையிலிருந்து ஊர்வலமாகப் பவனி வந்தான். நகர மக்கள் அனைவரும் அரசர் பவனிவரும் வீதி எங்கணும் நிறைந்து நின்று வாழ்த்துக்கூறி வரவேற்றனர். மயிர் மாணிக்கம் செட்டியின் வீட்டின் மாடியில் அமராவதியும் பெண் வேடம் பூண்ட விக்கிரமாதித்தனும் தங்களை நன்றாக அலங்கரித்துக் கொண்டு ஆடிப்பாடி மகிழ்ந்து சிரித்துக் கொண்டிருந்தனர். அரசன் பவனி வருவதை பேரிகைகளும் சங்கு முழக்கங்களும் ஏனைய வாத்தியங்களும் பலமாக ஒலித்துக் கொண்டிருந்த போதும், மங்கையர் இருவரும் அரசனின் பவனியை அலட்சியப் படுத்தினர். இதனை அரசன் கண்டு கொண்டு கடுங்கோபமுற்றான்.

அரண்மனை சென்றதும் மயிர் மாணிக்கம் செட்டியை அழைத்து வரும்படி காவலர்களை அனுப்பினான். மாணிக்கம் செட்டி வந்ததும் அரசன், “செட்டியே உமது மகளுடைய கணவன் வெளிநாடு சென்றவன், பலவருடங்களாகியும் இதுவரை திரும்பவில்லை. ஆனால் உன் மகளோ நான் பவனி வருவதைக் கண்டும் காணாததுபோல், மற்றுமொரு பெண்ணுடன் ஆடிப்பாடி மகிழ்ச்சியுடன் காணப்பட்டாள். இது வழக்கத்துக்கு மாறானது. உன் மகளுக்கு ஏதோ கள்ள நட்பு இருப்பது போல் தெரிகிறது. இத்தனை காலமாகியும் உன் மகளின் கணவன் திரும்பாதமையினால், இனிமேல் அவன் வருவான் என்று நம்பிக்கையில்லை. எனவே உன்மகளை நான் மணந்து கொள்ள விரும்புகிறேன், என்று கூறினான்.

### இராஜகுமாரன்

மன்னனின் இக்கூற்றைக் கேட்டு மயிர் மாணிக்கம் செட்டி பயந்தான். “அரசே, எமது குலவழக்கப்படி ஏற்கனவே திருமணமான பெண் மறுமணம் செய்ய முடியாது. அத்துடன் எங்கள் சமூகத்தைத்தவிர வேறு சமூகத்தில் பெண் கொடுப்பதுமில்லை, எடுப்பதுமில்லையே!” என்று மிகுந்த வேதனையுடன் சொன்னான்.

மன்னன் மேலும் கோபமடைந்தவனாக, “உன் மகள் எவனோ ஓர் ஆடவனுடன் தொடர்பு கொண்டிருப்பதனால் தான் அவள் இத்தனை உற்சாகத்துடன் காணப்படுகிறாள். இன்னும் நாற்பது நாட்களுக்குள் உனது மகளின் கள்ளக்காதலை நான் எப்படியாவது கண்டு பிடித்து நிரூபிக்கிறேன்,” என்றான் மன்னன்.

அன்றிலிருந்து மாணிக்கம் செட்டியின் வீட்டைச் சுற்றி இரவு வேளைகளில் நாற்பது காவலர்களை, கண்காணிப்பதற்காக அரசன் ஏற்பாடு செய்தான்.

*(மன்னன் வருவான்...)*

# காதில பூ கந்தசாமி

கீழுள்ள சத்தியக் கடதாசியில் கண்ணை மூடிக் கொண்டு கையெழுத்திட்ட பின்னர்தான் நீங்கள் மேற்கொண்டு வாசிக்க அனுமதி பெற்றவர்களாவீர்கள். அதனை வெட்டி, அல்லது போட்டோ பிரதி செய்து ‘காதில பூ கந்தசாமி’ என்ற தலைப்பில் தினமுரசுக்கு அனுப்புவோர் அபிமான வாசகர் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெறுவீர்கள். விபரம் கீழே.

**சத்தியக் கடதாசி:**

நோட்டீஸ் பலகையிலுள்ள காதில பூ கந்தசாமியின் சத்திய வாக்கியத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டு, எனக்குச் சுயமாகச் சிந்திக்கும் உரிமை இல்லையென ஏற்றுக்கொண்டு, அவர் கூறுகின்ற அத்தனை பொய்களையும் எள்ளளவு சந்தேகமுமின்றி நம்புவேன், அதைத் தவிர வேறொன்றையும் நம்பமாட்டேன், இப்படி நம்புவதன் விளைவுகளுக்கு நானே பொறுப்பாளியென சுய நினைவுடன் இத்தால் நான் உறுதியளிக்கிறேன்.

திகதி:............... பெயர்:.................... ஒப்பம்:..................



**நோட்டீஸ் பலகை**

**நான் சொல்வதெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை**

*-காதில பூ கந்தசாமி*

அபிமான வாசகர் போட்டியில் நான்காவது : ஒரு பொய்யை மெய்யாக்க சிறந்த வழியென்ன? ஒரே வசனத்தில் ஆலோசனை கூறுக. முடிவுத் திகதி மே 30. பெறுபேறுகள் ஜூலை முதல் வாரத்தில்.

**ஐ**யா, நான் இப்ப வரவர அறளபேந்துகொண்டு வாறன் போல கிடக்கு. மூச்சுவிடாமல் பேசிக்கொண்டே போறன். பேச்சக் குறைக்கச் சொல்லி கனபேர் அட்வைஸ்பண்ணியிருந்தாலும் பாழாப்போன நாக்கு, தானாப் புரளுது முந்திக்கொண்டு. புரளுறதுதான் புரளுதெண்டால் பொய்யையும் புரட்டையுமெல்லே புரட்டித் தள்ளுது. நானென்ன செய்ய, ‘எல்லோரும் பொய்யுற்றிருப்பதன்றி மற்றொன்றும் அறியேன் பராபரமே!’

பொய்யெண்டவுடன் முகத்தச் சுழிக்காதேங்கோ. உந்தச் சுழிப்பே ஒரு பம்பாத்துப் பொய்தான்பாருங்கோ. ‘பொய்சொல்லக் கூடாது பாப்பா, என்றும் புறஞ்சொல்லலாகாது பாப்பா’ எண்டு பாடஞ்சொல்லிக் குடுத்ததெல்லாம் அந்தக் காலம். இப்ப பச்சைக் குழந்தைக்கும் பாலோட சேத்துப் பொய்யத்தான் பருக்கிறம். வெளிநாட்டுக்குப் போற நேரத்தில குழந்தைப்பிள்ளை எம்பஸிக்காரரிட்டையும் எயார்ப்போட்டிலையும், வெளிநாட்டு விசாரணையிலையும் தப்பித் தவறி உண்மை சொல்லிப்போடக்கூடாதெண்டு எங்கட தாய்மார் கடவுள வேண்டுற காலமாப் போச்சுது. அதுக்கெண்டே அந்தக் குழந்தையைப் பிடிச்சு இருத்தி, புத்தியில ஏறாத பொய்யெல்லாத்தையும் படாத பாடுபடுத்தி பாடம் படிப்பிக்குமாப்போலத் திணிக்க வேண்டிக் கிடக்குது.

எண்டாலும் பொய் எங்களுக்கிப்ப நல்லாக் கைகொடுக்குது கண்டியளோ. சொல்லப்போனால் இந்தப் பொய்யாலதான் நாங்கள் இப்ப வாழுறம். கனபேருக்கு பொய்தான் இப்ப வாழ்க்கையிண்ட ஆரம்பமாகவே ஆகிப்போச்சு. ஏஜென்ஸிக் காரனுக்கு காசக்கட்டி ஆரம்பிக்கிற எங்கட கனபேற்ற வாழ்க்கையில பொய்தானே முழு மூலதனம். பொய் இப்ப எங்களுக்கு ஒரு ஏற்றுக்கொள்ளப்பட்ட சமூக நீதியாகப்போயிட்டுது. அதை மறுத்து ஒரு வாழ்க்கையே இல்லையெண்டாகிக் கிடக்குது. எங்களால யாரிலையும் விசுவாசம் வைக்க முடியேல்ல. எங்களில யார் விசுவாசமா இருக்கிறானெண்டதிலயும் சந்தேகம். நாங்கள் விசுவாசிக்காத ஆக்களை விசுவாசிக்கிறதாக் காட்டிக்கொள்ள நல்லாப் பழகிட்டம். எல்லாரையும் சந்தேகப்பட்டுக்கொண்டு எம்மைப்பற்றி சந்தேகம் வராமல் நடிக்கிற நுணுக்கமான ஒரு கலையில நாங்கள் கைதேர்ந்தவர்களாயிட்டம். அதுவே எங்கட வாழ்க்கைக்கான தகைமையாகவும் ஆகிட்டுது. இப்பிடிச் சமுதாயமே பொய்யைச்சார்ந்து நிக்கேக்க நான் மட்டும் பொய் சொல்லக் கூடாதெண்டு தடுக்க யாருக்கும் உரிமையில்லையெண்டத நான் இங்க அழுத்தம் திருத்தமாச் சொல்லிக்கொள்ள விரும்பிறன் பாருங்கோ.

கனகாலமா நான் உங்களுக்குச் செய்தி தரயில்லை. என்ர சத்தான உபதேசத்தக் கேட்ட உங்களுக்கு நான் கொஞ்சம் முத்தான செய்திகள இப்ப தாறன்.

**சீ**த்தணியினர் தங்களைப் பேச்சுவார்த்தையில் சேர்க்காவிட்டால் தமக்கு வாக்களித்த மக்களிடம் சொல்லாமல் கொள்ளாமல் வெளிநாடு சென்றுவிடுவோமென அரசாங்கத்துக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளார்கள்.

**அ**வசரகாலச் சட்டத்தை வைத்துக்கொண்டு அவசரமில்லாமல் செயற்படுவது எப்படியென்ற பயிற்சியை வெற்றிகரமாக ஒத்திகை பார்த்த மாவனெல்லை பொலிஸாருக்கு, நாட்டின் ஐக்கியத்தைப் பேணிக்காக்க அருந்தொண்டாற்றியதற்காக அங்கு எரிகின்ற வீடுகளிலிருந்து பிடுங்கப்பட்ட கொள்ளிக் கட்டைகளை பரிசளித்துள்ளதாக அப்பகுதி அமைச்சு வட்டாரம் தெரிவித்துள்ளது.

**மா**லைதீவிலிருந்தபடியே மாவனெல்லை கலவரத்தைக் கையாண்ட சாதனையை முன்னிறுத்தி ‘கலவர அமைச்சு’ என்ற புதிய அமைச்சொன்றை ஏற்படுத்தி குறிப்பிட்ட ஒரு அமைச்சருக்கு வழங்குவதற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. இத்தகைய முயற்சி நாட்டின் ஐக்கியத்தைக் கூட்டிப் பெருக்கி குப்பையில் தள்ளக்கூடிய பெருமுயற்சியென கொலைஉறுமய பாராட்டியுள்ளது.

**ந**ம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவதற்கு நம்பிக்கையான தலைவர் ஒருவரைத் தேடுகிறது அண்மையில் தமக்குள்ளேயே நம்பிக்கையற்றுப்போனதால் ஐக்கியம் தேய்ந்துபோன கட்சி. முன்னர் தமது ஆட்சிக்காலத்தில் தமது ஜனாதிபதிக்கு தாமே நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர முனைந்து, அப்படி முனைந்தவர்களுக்குள்ளேயே நம்பிக்கையற்றுப் போனதால் நம்பிக் கையெழுத்திட்டவர்களின் கையெழுத்துகளிலேயே நம்பிக்கையில்லையெனத் தீர்ப்பாகி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் தோல்விகண்ட அனுபவத்தை நம்பி யார்தான் இந்த நம்பிக்கையில்லாத காரியத்தில் தலையைக் கொடுப்பார்களோவென்று வினாவெழுப்பியுள்ளனர் சில அனுபவஸ்தர்கள்.

**வே**லை நிறுத்தத்துக்காக ரெயில்வே தொழிலாளர்கள் ரெயில் உதிரிப் பாகங்களைக் கழட்டியதையடுத்து ரெயில்கள் தற்போது காலதாமதமன்றி ஓடுவதாக அறியமுடிகிறது. இதுவரை கழட்டித் துப்பரவாக்கப்படாததாலேயே அடிக்கடி எஞ்சின் கோளாறுகள் ஏற்பட்டு ரெயில் போக்குவரத்து தாமதமடைந்து வந்ததாகவும், வேலை நிறுத்தக்காரர்கள் எஞ்சின் பாகங்களைக் கழட்டியதையடுத்து அவற்றில் அடைந்திருந்த கறளும் அழுக்குகளும் வெளியேறியதாலேயே இந்தப் புதிய மாறுதல் ஏற்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறது.

**உ**ழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோமென்று நாம் வாயால் பாடிக் கொண்டிருக்க அதைச் செயலில் காட்டிய பெருமையை அமெரிக்கா பெற்றுக்கொண்டுள்ளது. ஆம், சீனாவில் உளவறியப்போய் சீன விமானத்துடன் மோதுண்டதால் கையும் (மன்னிக்கவும் -செட்டையும்) களவுமாகப் பிடிபட்ட உளவு விமானத்தின் மூலம் தம் உளவுத் தொழிலை உலகறியச் செய்து பெரும்புகழ் பெற்றுள்ளது அமெரிக்கா.

**இ**றுதியாக காலநிலை அறிக்கை. நாளைய நேரம் சரியாக இருபத்தி நான்கு மணித்தியாலங்கள் நீடிக்கும். சூரியன் அதிகாலையில் உதித்து மாலையில் மறையும். மழை பெய்தாலும் பெய்யலாம், பெய்யாது விட்டாலும் விடலாம். காற்று இருக்கும். (வீசாவிட்டால் விசிறி வாங்கி விசுக்கிக் கொள்ளவும்)

**யாவும் கலப்படமற்ற கற்பனை**



பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது நேர்மை நகைகளே வெளிப்படுத்துகின்றன.
133, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
[illegible]
436337


# தூக்கு மெத்தை

1995ம் ஆண்டு ஏப்ரல் 19ம் திகதி அமெரிக்காவின் ஒக்லஹோமா நகரம் அதிர்ந்தது. நகரின் மத்தியில் அமைந்துள்ள அல்பிரட் பி முரா என்ற கொடர்மாடிக் கட்டடத்தின் முன்னால் பாரிய குண்டொன்று வெடித்ததில் 19 சிறார்கள் உட்பட 168 பேர் கொல்லப்பட்டார்கள். பலர் காயமடைந்தனர்.

4800 இறாத்தல் அதிசக்தி வாய்ந்த வெடிமருந்தை ட்ரக் வண்டி ஒன்றில் நிரப்பி குறிப்பிட்ட கட்டடத்தின் முன்புறமாக அதனை நிறுத்திவைத்து வெடிக்கவைத்த சூத்திரதாரியின் பெயர் திமோதி மெக்வி.

தாம் சார்ந்திருந்த மதப் பிரிவொன்றை அழித்த அமெரிக்க சமஷ்டி புலனாய்வுப் பிரிவினரை பழிவாங்கும் நோக்கத்துடனேயே இவன் இந்த அநர்த்தத்தை செய்துள்ளான்.


6 வருடங்கள் நடைபெற்ற விசாரணையின் முடிவில் இவனுக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

இம்மாதம் 16ம் திகதி அவனுக்கான தண்டனையை நிறைவேற்ற அமெரிக்க அதிகாரிகள் நாள் குறித்தனர். கடைசிவரையில் எதுவும் கூறாமல் இருந்த திமோதி கடந்த 14ம் திகதி இறுதி நேரத்தில் தனது தண்டனையை பிற்போடுமாறு வழக்கறிஞர்கள் மூலமாக ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷிடம் கோரியிருந்தான். அந்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டால், இதை நீங்கள் வாசிக்கும் போது திமோதி உயிருடன் இருக்க மாட்டான்.

கீழே உள்ள கட்டில் அவனது தண்டனைக்காக தயார் நிலையில் இருக்கிறது. இந்த மரணப் படுக்கையில் வைத்து விஷ ஊசி ஏற்றப்படும். உயிர்பிரிய வெகு நேரம் பிடிக்காது. 8 செக்கன்களில் சாய்ந்துகொண்டே சாவு.





SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
325657

■ ஏனைய நாடுகளில் உள்ள கட்டடங்களுக்கு விமானத்தில் சென்று குண்டு போட்டு இரசிக்கும் அமெரிக்க இராணுவத்தினரை அதிர வைத்த ட்ரக் குண்டு வெடிப்பு இடம்பெற்ற கட்டடத்தின் சிதைந்த பகுதிகள்.



கீழே உள்ள படத்தில் காணப்படும் 33 வயதான திமோதி மெக்வி அமெரிக்க இராணுவத்தில் பணியாற்றியவன். வளைகுடா யுத்தத்தின் போது அந்த நாட்டுப் படைக்காக போர்க்களம் சென்றவன். தன்மீதான குற்றச்சாட்டை ஆரம்பத்தில் நிராகரித்த இவன் பின்னர் ஒப்புக்கொண்டான். தனக்கு இந்த உலகத்தில் வாழப்பிடிக்கவில்லை எனக் கூறி தனது தண்டனையை துரிதப்படுத்துமாறு கோரிவந்தவன், கடைசி நேரத்தில் உயிருக்காக மனு செய்துள்ளான்.



## பிறந்தநாள் வாழ்த்து



**செல்வன் ப.டிலக்ஸன்**
**16.05.2001**

நோர்வேயில் வசிக்கும் பரமேஸ்வரன்-விஜயலதா தம்பதிகளின் செல்வப் புதல்வன் டிலக்ஸன் தனது நான்காவது பிறந்தநாளை 16.05.2001 அன்று Osloவில் உள்ள தனதில்லத்தில் விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அண்ணா அனுசாந் மற்றும், அத்தைமார், மாமாமார், மச்சினிமார், மச்சான்மார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், அக்காமார், அண்ணாமார், தங்கை தனுஷா, அப்பப்பா, அம்மம்மா ஆகியோர் நோய் நொடியின்றி இறைவன் அருளால் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறார்கள்.




இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், ... இலக்கத்தில் ... லிமிட்டெட் ... அச்சகத்தில் ... வெளியிடப்படுகிறது